உதயன்


விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 15 செவ்வாய்க்கிழமை (29.06.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 215

# இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வை உடனடியாக முன்வைக்க முடியாது!

## திடீரெனத் தயாரிக்க அது 'நூடில்ஸ்' அல்ல என்கிறார் ஜனாதிபதி



கொழும்பு, ஜூன் 29

**இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை உடனடியாக முன்வைக்கும்படி எவரும் கோரிக்கை விடுக்க முடியாது. அது திடீரெனத் தயாரிக்கும் 'நூடில்ஸ்' அல்ல. இதற்காக நாம் தேவையான காலத்தை எடுத்துக்கொள்வோம் - என்று ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங் கிய செவ்வியின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசமைப்பு ஓரிரு நாள்களுக்கு உரியதல்ல. அது வாராந்தம் அல்லது மாதாந்தம் வெளியிடப்படும் சஞ்சிகை அல்ல. அரசமைப்பை அடிக்கடி மாற்றிக்கொண்டிருக்க முடியாது. நாங்கள் தேவையான காலத்தை செலவிட்டு அரசமைப்பை மாற்றுவோம் - என்றும் ஜனாதிபதி கூறினார்.

'ஐரோப்பிய ஒன்றியம் உட்பட சர்வதேச சமூகமும் இந்தியாவும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைக் காணும்படி தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. இந்த நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது?' - என செய்தியாளர் (21ஆம் பக்கம் பார்க்க)

## வரவு-செலவுத் திட்டத்தை இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிப்பவர் யார்?

### பிரதமரா அல்லது சரத் அமுனுகமவா?

கொழும்பு, ஜூன் 29

வரவு-செலவுத் திட்டத்தை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவது யார்? பிரதமர் டி.எம்.ஜயரட்னவா? அல்லது பிரதியமைச்சர் சரத் அமுனுகமவா?

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று காலை உக்ரைன் நாட்டுக்குப் புறப்பட்டுச் செல்கிறார். பிரதியமைச்சர் சரத் அமுனுகம பதில் நிதியமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டால் மட்டுமே வரவு-செலவுத் திட்டத்தை அவரால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பிக்க முடியும் என சட்ட வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

பிரதமர் அலுவலகத்தின் ஊடகப் பிரிவுடன் தொடர்புகொண்டு வரவு-செலவுத் (24ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்க் கட்சிகளின் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு

## சம்பந்தனை கொழும்பில் நேற்று மாலை சிவாஜி, சித்தார்த்தன் சந்தித்துப் பேச்சு

கொழும்பு, ஜூன் 29

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு மற்றும் அவசிய, அவசரப் பிரச்சினைகள் குறித்து தமிழ்க் கட்சிகள் ஒருமித்துக் குரல் கொடுக்க வேண்டும் என்ற நோக்குடன் தமிழ்க்கட்சிகளின் கூட்டம் ஒன்று நாளை மறுதினம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துகொள்ள வேண்டும் என்று தமிழ்த் தேசிய விடுதலை கூட்டமைப்பின் செயலாளர் சிவாஜிலிங்கமும் புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தனும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை நேரடியாகச் சந்தித்து கேட்டுள்ளனர்.

கொழும்பில் உள்ள சம்பந்தனின் வீட்டில் நேற்றுமாலை 6 மணி முதல் 6.35 மணி வரை இச்சந்திப்பு இடம்பெற்றது. இச்சந்திப்பில் சித்தார்த்தன் மற்றும் சிவாஜிலிங்கம் (24ஆம் பக்கம் பார்க்க)

## உயிரைக்கொடுத்தேனும் ஐ.நா. குழுவை நாட்டுக்குள் காலடி வைக்க விடமாட்டோம்

### ஹெல உறுமய எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 29

''உயிரைக் கொடுத்தேனும் பான் கீ முனின் மூவர்கொண்ட குழுவை நாட்டுக்குள் காலடிவைக்க விடமாட்டோம். இந்த நாட்டின் கடைசித் தேசப் பற்றாளன் இருக்கும் வரை பான்கீமுனின் எண்ணம் ஈடேறாது.

- இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவின் சட்ட ஆலோசகர் உதய கம்மன் பில தெரிவித்துள்ளார்

கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான தலைமையகத்திற்கு முன்பாக நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

முப்பதற்கும் மேற்பட்ட நாடுகளின் ஆதரவுடனும் உயர்ந்த தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தி 2001ஆம் ஆண்டில் தலிபான்களுக்கு எதிராக ஆரம்பித்த யுத்தத்தில் ஒரு முடிவும் காணாது அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன.

தலிபான்களிடம் விமானங்கள் இல்லை; (24ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி உக்ரேய்ன் பயணம்

கொழும்பு, ஜூன் 29

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று உக்ரேய்ன் புறப்படுகிறார்.

உக்ரேய்ன் ஜனாதிபதி விக்டர் யானுக்காச் மற்றும் உக்ரேய்ன் பிரதமர் உள்ளிட்ட பல அரசியல் முக்கியஸ்தர்களுடன் ஜனாதிபதி ராஜபக்ஷ பேச்சு நடத்துவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (24ஆம் பக்கம் பார்க்க)



நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் அடகுச்சேவை

- 365 நாள் வங்கிச் சேவை
- நீடித்த வங்கி நேரங்கள்
- அதிகபட்ச பாதுகாப்பும் நம்பகத்தன்மையும்
- முன்னறிவித்தல் இன்றி மீட்கலாம்
- பகுதி பகுதியான மீட்பு வசதி

யாழ்ப்பாணக் கிளை: 35, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 4 920 283 - 5

அடகுச்சேவை வவுனியா மற்றும் மட்டக்களப்பிலும் பெற்றுக்கொள்ளலாம்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பி எல் சி - PQ 118

Nations Trust Bank
Nations
Gold Advances

நாங்கள் முழுமையான பாதுகாப்பு தீர்வுகளை வழங்குகிறோம்

மனித சக்தி | இலத்திரன் பாதுகாப்பு திட்டங்கள் | பணம் எடுத்து செல்லல் | மத்திய உஷார் கண்காணிப்பு சேவை | வீட்டு தாதிச் சேவை அம்பியூலன்ஸ் சேவை | உள்ளூர் சர்வதேச கூரியர்



OVER 30 YEARS

CEYLINCO-CISCO
Your Partner in Loss Prevention
24 மணிநேர ஹொட்லைன்
0112 55 77 77

ஒரு சுயாதீன நிறுவனமாக, எங்கள் கூட்டு பங்காளர் சிஸ்கோ சிங்கப்பூருடன் சக்தியிலும் உறுதியிலும் வளர்ச்சி அடைந்துள்ளோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மெக்ஸிக்கோவை வீழ்த்தி ஆர்ஜென்ரீனா காலிறுதிக்கு முன்னேறியது

மெக்ஸிக்கோ அணிக்கு எதிரான உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் 'ரவுண்ட் அப்-16' சுற்றுப் போட்டியில், ஆர்ஜென்ரீனா அணி, 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இதன்மூலம் அர்ஜென்ரீனா அணி காலிறுதிக்கு முன்னேறியது. கோல் அடிக்க முடியாமல் திணறிய மெக்ஸிக்கோ அணி தொடரிலிருந்து வெளியேறியது.

நேற்றுமுன்தினம் ஜோகனஸ்பேர்க்கில் நடந்த 'ரவுண்ட் அப் - 16' சுற்றுக்கான போட்டியில், உலகத் தரவரிசையில் 7ஆவது இடத்தில் உள்ள ஆர்ஜென்ரீனா - மெக்ஸிக்கோ (தரவரிலையில் 17ஆவது இடம்) அணிகள் மோதின.

ஆட்டத்தின் ஆரம்பத்திலிருந்தே இரு அணி வீரர்களும் ஆக்ரோஷத்தை வெளிப்படுத்தினர். 26ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனாவின் நட்சத்திர வீரர் மெஸ்ஸி கடத்திக்கொடுத்த பந்தை, கார்லோஸ் டெவேஸ் தலையால் முட்டி கோலடித்தார்.

தொடர்ந்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய ஆர்ஜென்ரீனா அணிக்கு ஹிகுவேன் 33ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்து 2-0 என முன்னிலை பெற்றுக் கொடுத்தார்.

முதல் பாதி முடிவில் ஆர்ஜென்ரீனா அணி, 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்திருந்தது.

இரண்டாவது பாதியிலும் ஆதிக்கம் செலுத்திய ஆர்ஜென்ரீனா அணிக்கு, ஆட்டத்தின் 52ஆவது நிமிடத்தில் கார்லோஸ் டெவேஸ், கோலடித்து அசத்தினார். பின்னர் சுதாரித்துக் கொண்ட மெக்ஸிக்கோ அணிக்கு, ஆட்டத்தின் 71ஆவது நிமிடத்தில் ஹெர்னாண்டஸ் ஒரு கோல் அடித்து ஆறுதல் அளித்தார்.

இருப்பினும் மெக்சிகோ அணியினரால் அடுத்தடுத்து கோல் அடிக்க முடியவில்லை. இதனால், ஆட்டநேர முடிவில் ஆர்ஜென்ரீனா அணி, 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தில் 8ஆவது முறையாகக் காலிறுதிக்கு முன்னேறியது. மெக்ஸிக்கோ அணி பரிதாபமாக வெளியேறியது.

மொத்தத்தில், உதைபந்தாட்ட உலகின் ஜாம்பவான் மரடோனாவால், ஆர்ஜென்ரீனா அணிக்கு வழங்கப்படும் பயிற்சி வியூகங்கள் இந்த உலகக் கிண்ணத் தொடரில் விளையாட்டைக்காட்ட ஆரம்பித்துள்ளன.

# தென்னாபிரிக்கா முன்னிலை

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி, முன்னிலை பெற்றுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்றுவரும் 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் தென்னாபிரிக்கா-மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் விளையாடி வருகின்றன.

இதன் முதல் போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றது. இரண்டாவது போட்டி சமனிலையில் முடிந்தது.

இந்நிலையில், மூன்றாவது மற்றும் கடைசிப் போட்டி நடைபெற்றுவருகிறது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, முதல் நாளிலேயே 231 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

பின்னர், தனது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி, முதல் நாள் ஆட்ட நேரம் முடிவின்போது, 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 46 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

தொடர்ந்து இரண்டாவது நாளான நேற்றுமுன்தினம் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த தென்னாபிரிக்க அணி, ஸ்மித் (70), வில்லியர்ஸ் (73), பிரின்ஸ் (55-ஆட்டமிழக்காமல்) ஆகியோரின் அரைச் சதங்களின் உதவியுடன் தென்னாபிரிக்காவை முந்தியது.

நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது, 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 285 ஓட்டங்களைப் பெற்றது. இதன்மூலம், 54 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

# இரட்டையர் பிரிவிலும் சானியா தோல்வி!

விம்பிள்டன், ஜூன் 29

லண்டனில் நடைபெற்றுவரும் விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் பெண்கள் இரட்டையர் 2ஆவது சுற்றில் இந்தியாவின் சானியா மிர்ஷா, டென்மார்க்கின் கரோலினே வோஸ்னியாக்கி ஜோடி 6-7, 3-6 என்ற நேர் செற் கணக்கில் காராபிளாக் (சிம்பாப்வே)-ஹன்ட்சோவா (ஸ்லோவக்கியா) ஜோடியிடம் வீழ்ந்தது.

முன்னதாக ஒற்றையர் பிரிவிலும் சானியா முதல் சுற்றுடன் வெளியேறி யிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல் கலப்பு இரட்டையர் 2ஆவது சுற்றில் இந்தியாவின் மகேஷ் பூபதி - அமெரிக்காவின் லீஸல் ஹீபர் ஜோடி தோல்வியைத் தழுவியது. இவர்களை ரஷ்யாவின் டர்சுனோவ்-துஷிவினா ஜோடி 6-2, 3-6, 6-3 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது.

# 'பிபா' மீது பாய்கிறார் இங்கிலாந்து பயிற்றுநர்

உலகக் கிண்ணத் தொடரிலிருந்து இங்கிலாந்து வெளியேறியமைக்கு கோல் எல்லைக் கோட்டைக் கவனிப்பதற்கான தொழில் நுட்பம் இல்லாதமையே காரணம் என்று தெரிவித்து, 'பிபா' மீது பாய்கிறார் அந்த அணியின் பயிற்சியாளர் பேபியோ கெபேலோ.

ஜேர்மனியுடனான படுதோல்வி குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''கோல் எல்லைக் கோட்டைக் கவனிக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தத் தவறுவது முட்டாள்தனம். கோல் அல்லது கோல் இல்லை என்பதைத் தீர்மானிக்க நடுவர்களுக்கு இது உதவும்.

''ஆனால், ''பிபா' இந்த விடயத்தில் ஏன் இவ்வளவு தயங்குகிறது என்பது புரியாத புதிராகவே உள்ளது. பிராங்க் லேம்பர்ட் அடித்த கோல் ஏற்கப்பட்டிருந்தால் பிற்பாதியில் எங்களது ஆட்டமும் மாறியிருக்கும். நடுவர்கள் மட்டுமல்லர், இங்கிலாந்து வீரர்களும் பல தவறுகளைத் தொடர்ந்து செய்தனர். இதுவே தோல்விக்குக் காரணம். ஜேர்மனி இந்த வெற்றிக்குத் தகுதியானது. திறமையாகவும் விளையாடியது'' என்றார்.

# இங்கிலாந்தை வீழ்த்தியது ஜேர்மனி

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் 'ரவுண்ட் அப்-16' சுற்றில் ஜேர்மன் அணி, 4 -1 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்தைப் போட்டுத் தள்ளியது.

நேற்றுமுன்தினம் புளோம்பாண்டீனில் நடந்த 'ரவுண்ட் அப் - 16' சுற்றில், ஜேர்மன்-இங்கிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

ஆட்டம் தொடங்கிய முதல் வினாடியிலிருந்தே இரு அணி வீரர்களும் ஆக்ரோஷமான தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டனர்.

விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில், ஜேர்மனின் கோல் காப்பாளரான மானுவல் நியர், இங்கிலாந்தின் கோல் கம்பம் நோக்கி உதைத்த பந்தைத் தடுக்க வந்த இங்கிலாந்தின் மேத் அப்சனை முந்திக்கொண்டு, ஜேர்மனியின் நட்சத் திர வீரர் மிரோஸ் லாவ் குளோஸ் கோலாக்கி அசத்தினார். குளோசின் 50ஆவது சர்வ தேசக் கோல் இதுவாகும்.

இதன் பின்னர் ஜேர்மனி தனது ஆதிக்கத்தைக் காட்டியது. களத்தில், இங்கிலாந்தின் தடுப்பு அரண்கள் மிகவும் பலவீனமாகக் காணப் பட்டன. இதனைப் பயன்படுத்தி 32 ஆவது நிமிடத்தில் ஜேர்மனி இன்னொரு கோல்போட்டு வியக்க வைத்தது. குளோஸ், மில்லர் ஆகியோர் நேர்த்தி யாகத்தட்டிக் கொடுத்த பந்தை, லுகாஸ் போடோல்கி கோலாக்கினார். அவர் அடித்த பந்து இங்கிலாந்து கோல் காப்பாளர் ஜேம்ஸ் டேவிட்டின் கால்களுக்கிடையே புகுந்து வலைக்குள் வீழ்ந்தது.

இந்நிலையில், ஆட்டத்தின் 37ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து பதில் கோல் திருப்பியது. இங்கிலாந்து அணித்தலைவர் ஜெரார்டு அடித்த பந்தை, கோல் கம்பத் தின் முன்பகுதியில் நின்ற சக வீரர் மேத் அப்சன் அதிக உயரம் துள்ளிகுதித்து தலையால் முட்டி கோலாக்கினார். கோலடித்த அடுத்த நிமிடத்திலேயே இங்கிலாந்து சமன் செய்திருக்க வேண்டியது. ஆனால், நடுவரின் தவறான முடிவால் இங்கிலாந்து வஞ்சிக்கப்பட்டுவிட்டது.




இங்கிலாந்து வீரர் பிராங் லம்பார்ட் அடித்த பந்து, கோல் கம்பத்தில் பட்டு கீழே விழுந்து, கோல் கம்பத்தின் எல்லைக் கோட்டையும் தாண்டிவிட்டது. அதன் பிறகுதான் ஜேர்மனியின் கோல் காப்பாளர் பந்தைப் பிடித்தார். அது கோல் என்பது தெளிவாகத் தெரிந்தும், நடுவர் ஜோர்ஜ் லார்ரியன்டோ (உருகுவேயைச் சேர்ந்தவர்) அது கோல் என்று அறிவிக்க மறுத்து விட்டார். இதனால், இங்கிலாந்து வீரர்கள் மிகுந்த அதிர்ச்சியும், ஏமாற்றமும் அடைந்தனர். இதையடுத்து முதல் பாதியில் இங்கிலாந்து 1-2 என்ற கணக்கில் பின்தங்கியது. கடைசிவரை அனல் பறந்த இந்த ஆட் டத்தின் முடிவில் ஜேர்மனி அணி 4-1 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்தை வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்தது.

# ஆஸிக்கு எதிரான ஒருநாள் தொடர் இங்கிலாந்து வசம்

மான்செஸ்டர், ஜூன் 29

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 3ஆவது ஒருநாள் போட்டியிலும், இங்கிலாந்து வெற்றி பெற்றது. இதன்மூலம் 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரை இங்கிலாந்து அணி கைப்பற்றி, முன்னிலை வகிக்கிறது.

இங்கிலாந்து சென்றுள்ள ஆஸ்திரே லிய அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடிவருகிறது. முன் னர் நடந்து முடிந்த இரண்டு போட்டிகளிலும் வெற்றி கண்ட இங்கிலாந்து, 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது.

இந்நிலையில் மூன்றாவது போட்டி மான்செஸ்டர் நகரில் நேற்றுமுன்தினம் நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி, முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணிக்கு, வோட்சன் (61), டிம் பெய்னே (44) ஜோடி சிறப்பான ஆரம்பத்தைக் கொடுத்தது.

பின்னர் வந்த அணித்தலைவர் பொண்டிங் (3) ஏமாற்றினார். மைக்கேல் கிளார்க் (33), ஒயிட் (12), மைக்கல் ஹசி (21), ஸ்ரீபன் ஸ்மித் (20) ஆகியோர் ஓரளவு ஓட்டங்களைச் சேர்க்க, 46 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்த ஆஸி, 212 ஓட்டங்களைச் சேர்த்தது.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில், ஸ்வான் 4 விக்கெட்டுகளையும், அண்டர்சன் 3 விக்கெட்டுகளையும், பிராட், கொலிங்வூட், யார்டி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பின்னர், 213 என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு, கீஸ்வெற்றர் (0) மோசமான ஆரம்பத்தைக் கொடுத்தார். அடுத்து வந்த கெவின் பீற்றர்சன் (25), கொலிங்வூட் (40), மோர்கன் (27) ஆகியோர் ஓரளவு கைகொடுத்தனர்.

ஒருபுறம் விக்கெட்டுகள் சரிய, மறுமுனையில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய அணித்தலைவர் ஸ்டிராஸ் (87) அபாரமாக ஆடி அணியின் வெற்றிக்கு வழி வகுத்தார்.

இறுதியில் இங்கிலாந்து அணி, 49.1 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 214 ஓட்டங்களைச் சேர்த்தது. இதன்மூலம் ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ஆஸ்திரேலியா சார்பில் டெய்ட், போலிஞ்சர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், ஸ்ரீபன் ஸ்மித், ரேயான் ஹரிஸ் ஆகியோர் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஆட்ட நாயகனாக இங்கிலாந்தின் ஸ்வான் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தப் போட்டியிலும் வெற்றிபெற்றதன் மூலம் இங்கிலாந்து அணி, 3-0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றி முன்னிலை வகிக்கிறது. நான்காவது போட்டி நாளை ஓவலில் நடைபெறவுள்ளது.

# கண்ணீர்க் காணிக்கை



ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தின்
விளையாட்டு வீரர் சி.சிவசொரூபனின்
அன்புத் தந்தை

## கோவிந்து சிவசம்பு

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(100048)

மத்திய விளையாட்டுக் கழகம், ஆவரங்கால்.

# மரண அறிவித்தல்

## கோவிந்து சிவசம்பு



நவற்கிரி, புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்து சிவசம்பு நேற்று (28.06.2010) திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்து - பூலோகம் தம்பதியினரின் மகனும் முத்தையா (அமரர்) - சின்னாச்சி தம்பதியினரின் மருமகனும் பரமேஸ்வரி யின் அன்புக் கணவரும் அகிலான்டம் (அமரர்), கணபதிப்பிள்ளை (அமரர்), தங்கம்மா, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் வனஜா (ஆசிரியை, நவற்கிரி அ.மி.த.க. பாடசாலை), சிவனேசன், சிவரஞ்சன், சிவாகரன், சிவசொரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராசேந்திரன், கமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும் தனுசாந், கவிர்சனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2010) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் நவற்கிரி நிலாவரை இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவற்கிரி,
புத்தூர்.

(100047)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## பரமநாதன் திருச்செல்வம்

(முன்னாள் மாநகரசபை ஊழியர்,
தற்போதைய இலங்கை மின்சாரசபை ஊழியர்)



யாழ்ப்பாணம், பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமநாதன் திருச்செல்வம் 25.06.2010 வெள்ளிக்கிழமை அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் நாகேஸ்வரி தம்பதியினரின் அருமைப் புதல்வனும் ஜமுனா (Canada), காலஞ்சென்ற தேவிகா மற்றும் சுரேஸ், ஜனார்த்தனன், லக்சுமிகாந்தன் ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஜெயராணியின் அன்புக் கணவரும் தர்சிகா, திலக்ஸன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் லக்சுமி தம்பதியினரின் மருமகனும் தில்லைநாதன், இராஜநாதன், பஞ்சநாதன், அசுவத்தம்மா, காலஞ்சென்ற தெய்வானை மற்றும் ரஞ்சினிதேவி ஆகியோரின் பெறாமகனும் சிவநேசன், காலஞ்சென்ற மதிவதனி மற்றும் சிவரூபன், தபேஸன், தவரதன், திலீபன், தனுசா, ஜெயகிருஸ்ணா, கண்ணதாஸன் (France), ஹஜானி, புவிதினி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் சங்கீதா, சஜ்ஜயன் (Canada), நிலாக்குமாரி, பிருந்தன் (அவுஸ்திரேலியா), மதிப்பிரியன் ஆகியோரின் மாமனும் கார்த்தீபன், யசோதரன், விபுஷன், பிரமிளா, உஷாந்தன், பபிஷாளினி, கௌதம், சுருதிகா, நிலக்ஸிகா, லக்ஸயன், ஹர்சனா, புருசோத் ஆகியோரின் பெரியப்பாவும் சற்குணராணி, வாகினி, சங்கீதா, ஸர்மிளா, காந்தினி, ராஜினி ஆகியோரின் மைத்துனரும் தருஷிஜானின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2010) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப. 2 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 64, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(100046)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## சப்பாணித் தீர்வுக்கு முகவுரை

அரசமைப்புச் சட்டங்களை இயற்றுவது, திடீர் 'நூடில்ஸ்' தயாரிப்பது போன்று இலகுவானதல்ல. அரசமைப்புச் சட்டங்களை இயற்றுவதும் சரி, அவற்றைத் திருத்தம் செய்வதும் சரி ஆற அமரச் சிந்தித்து ஆலோசனைகள் நடத்தி, ஆற்ற வேண்டிய பொறுப்பான பணியாகும்.

அரசமைப்புச் சட்டம் வாரம் ஒரு முறை அல்லது மாதம் ஒரு முறை வெளியிடப்படும் சஞ்சிகையும் அல்ல. அரசமைப்புச் சட்டத்தை அல்லது அதன் விதிகளை நாம் அடிக்கடி மாற்றம் செய்யவும் கூடாது.

சர்வதேச சமூகமோ, ஐரோப்பிய ஒன்றியமோ அல்லது இந்தியாவோ சொல்கிறது என்பதற்காக, அரசமைப்பை உடனடியாக மாற்றிவிடமுடியாது. அதற்குத் தேவையான நேரத்தைச் செலவிட்டுத்தான் திருத்தங்களைக் கொண்டு வரலாம். ஆனால் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வந்தே தீருவோம். இனப்பிரச்சினைக்குரிய தீர்வும் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தமாகக் கொண்டுவரப்படும். சந்தேகிக்காதீர்கள். இது விடயத்தில் நான் அக்கறையாகவே உள்ளேன். அதன் பால் அதிக ஈடுபாடும் உண்டு.

இவ்வாறு விவரித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. இந்தியாவின் செய்திச் சேவை ஒன்றுக்கு, அதன் செய்தியாளர் கே.வெங்கடரமணனுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் ஜனாதிபதி மஹிந்த மேற்கண்ட தகவல்களை வெளிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி தனது நீண்ட செவ்வியில் - ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச சமூகத்துடன் பிணக்குப்பட்டு நிற்பது, இனப்பிரச்சினைக்குத தீர்வு காண்பது, வடக்கில் தமிழ் மக்களுடன் சிங்கள மக்களும் சேர்ந்த வாழ்வது, சீனாவுடனான உறவு, இந்தியாவுடனான பாரம்பரிய - சரித்திரகாலம் தொட்டு வளர்ந்துவரும் உறவு - என்று பல விவகாரங்கள், விடயங்களில் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

தமிழ்மக்களின் பிரச்சினை, இனப்பிரச்சினை, விரைவாகத் தீர்க்கப்படவேண்டும் என்று இந்தியா விரும்பினாலும் அது அவசரப்பட்டுச் செய்யக்கூடிய ஒன்றல்ல என்று மிகப் பூடகமாக, ஜனாதிபதி அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார்.

இதுவிடயம் குறித்து அவசரப்படக்கூடாது என்ற தொனியில் அவர் பதில் அளித்திருப்பது, தமிழ் மக்களின் அவசரத்துக்குத் தாம் எதுவும் செய்யமுடியாது. தாம் அதில் ஈடுபடும் வரை அவர்கள் காத்திருக்கவேண்டியதுதான் என்ற தொனியில் அவரது பதில்கள் அமைந்திருக்கின்றன.

இந்தியாவும் ஏனைய அயல்நாடுகளும் என்னோடு நட்புறவாகவும் அந்நியோன்யமாகவும் இருக்கும்போது, சர்வதேச சமூகம் குறித்து நான் ஏன் கவலைப்படவேண்டும் என்று -

இந்தியாவைத் தலையில் தூக்கிவைத்துப் பேசியுள்ளார் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. சோழியன் குடுமி ஒருபோதும் சும்மா ஆடுவதில்லை என்பது வழக்குமொழி!

தமிழ்மக்கள் எதிர்பார்ப்பது போன்றல்லாது, ஆகக்குறைந்த மட்டத்தில், அரசமைப்பின் 13ஆவது சட்டத் திருத்தத்தையும் உருப்படியாக இனப்பிரச்சினைக்கான தீர்வாக வைக்கும் உத்தேசம் இன்னும் எங்கள் நாட்டு ஜனாதிபதிக்கு உதிக்கவில்லை என்பது 'அவரது அவசரத் தேவையில்லை' என்ற வாசகத்தில் தொனிக்கிறது!

அவசரம் இல்லாது ஆறுதலாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் உத்தியிலும் பெருநோக்கம் ஒன்று உண்டென்பதை ஓரளவுக்கு ஊகிக்க முடியும்.

வடக்கு, கிழக்கில் சிங்கள மக்களைப் பெரும் எண்ணிக்கையில் குடியேற்றத் திட்டமிடப்படுகிறதா என்ற ஊடகவியலாளரின் கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி -

அவர்கள் - சிங்கள மக்கள் - முன்னர் அந்த இரு மாகாணங்களிலும் நிறையவே வாழ்ந்தார்கள். பிரபா கரனே அவர்களை அடித்துத் துரத்தினார். இனி அவர்கள் அங்கு சென்று வசிக்க விரும்பினால் அவ்வாறு செய்யலாம்.

மக்கள் தமக்கிடையில் ஒருவரை மற்றவர் நம்ப வேண்டும். இரண்டு தரப்புகளிலும் நம்பிக்கை தேவை. சமூகங்களுக்கு இடையே அத்தகைய நம்பிக்கையைக் கட்டி வளர்க்கவேண்டும்.

30 வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் சிங்கள மக்களே பெரும்பான்மையினராக வாழ்ந்தார்கள். இப்போது அவர்கள் இங்கு - சிறுபான்மையினர் - வெறும் 27 சத வீதத்தினரே. இப்போது - இங்கு தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களுமே அதிகமாக வசிக்கிறார்கள். ஆனால் அதனை நான் ஒரு பிரச்சினையாகக் கருதவில்லை. மக்கள் கலந்து வாழ்வதே நல்லது என்று நம்புபவன் நான். முன்னர் இது ஒரு பிரச்சினையாகப் பார்க்கப்படவில்லை. தமது சொந்த நலன்களை முன்னிறுத்தி அரசியல்வாதிகளே இதனை உருவாக்கினார்கள். - என்று ஜனாதிபதி விளக்கமும் வியாக்கியானமும் தெரிவித்திருக்கிறார்!

நல்லது. வாசிப்பதற்கும், கேட்பதற்கும் நியாயமானதாகத் தோன்றலாம். ஆனால் உள்ளே அழுக்காறு இருப்பதை தமிழ்மக்களால் புரிந்துகொள்ள இயலும்.

அரசமைப்புச் சட்டத்தின் 13ஆவது திருத்தத்தில் உள்ள வடக்கு - கிழக்கு இணைப்பை மீண்டும் செயல்வடிவத்துக்குக் கொண்டுவராமல் தடுப்பதற்கு, வடக்கிலும் கிழக்கிலும் சிங்கள மக்களை அரைக்கரைவாசியேனும் குடியேற்றிவிடவேண்டும் என்ற திட்டம் அரசிடம் உண்டு என்பது இங்கே மறைமுகமாகச் சொல்லப்படுகிறது. வடக்கு, கிழக்கில் இராணுவக் குடியிருப்புகள் நிறுவப்படும் என்றும், அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என்றும், அவர்கள் அங்குள்ள நிலங்களில் விவசாயம் செய்ய அனுமதிக்கப்படுவர் என்றும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய அறிவித்திருப்பதும் இதனை உறுதிப்படுத்துகிறது..

நாட்டின் சகல பகுதிகளிலும் சிங்களமக்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்தால் - கலந்து வாழ்ந்தால் - தமிழர்கள் கேட்கும், அவர்கள் தமது தாயகம், உரிமைகள் அது இது என்று கொண்டாடும் அம்சங்களைப் பூசிமறைத்து விடலாம்.

அதன் பின்னர் இந்தியா என்ன, வேறு எவருமே நியாயம் கேட்க இடம்வைக்காமல், ஒரு சப்பாணித் தீர்வைக் கொண்டுவர வாய்ப்பு ஏற்படும். அந்தவேளையே, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான உகந்த சூழலும் காலமும் பிறக்கும் என்பது திரைமறைவுத் திட்டத்தின் உயிர்நாடி. அதன் பின்னர், இனப்பிரச்சினைக்கு கொண்டுவரவிருக்கும் சப்பாணித் தீர்வுக்கு இப்போது முகவுரை வைத்திருக்கிறார் ஜனாதிபதி!

# தமிழருக்கு சுயாட்சி அடிப்படையில் நிரந்தரத் தீர்வு; பிரிட்டிஷ் அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும்

### யாழ். வந்துள்ள அந்நாட்டின் துணைத்தூதுவரிடம் கூட்டமைப்பு, கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 29

வடக்கு, கிழக்கு இணைந்த ஐக்கிய இலங்கைக்குள் சுயாட்சி அடிப்படையில் நிரந்தர அரசியல் தீர்வை தமிழ் மக்கள் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை அரசுக்கு பிரிட்டிஷ் அரசு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, பிரிட்டன் பிரதித் தூதுவர் மார்க் குட்டிங்கிடம் கோரிக்கை விடுத்தது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரித்தானிய பிரதித் தூதுவருக்கும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு நேற்று யாழ். நகரிலுள்ள ''எக்ஸ்போ பவலியன்'' ஹோட்டலில் இடம்பெற்றது. இதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிறேமச்சந்திரன், அ.விநாயகமூர்த்தி, ஈ.சரவணபவன், சி.சிறீதரன் ஆகியோர் பிரசன்னமாகி இருந்தனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் உதயனுக்குத் தெரிவித்தவை வருமாறு :-

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வை பெற்றுக் கொடுப்பதற்குப் பிரித்தானிய அரசுக்கும் பெரிய பொறுப்புள்ளது என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைவரம், மீளக்குடியமர்த்தும் செயற்பாடுகள், தடுப்பு முகாமிலுள்ள எமது மக்களின் நிலைமை என்பன தொடர்பாகவும் எடுத்து விளக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஒரு லட்சம் மக்கள் அவர்களது வாழ்விடங்களில் குடியேற முடியாத நிலையில் உள்ளனர். கொடிகாமம் இராமாவில் முகாமில் வடமராட்சி கிழக்கு மக்கள் 4 ஆயிரம் பேர் அடிப்படை வசதிகளின்றியுள்ளனர். குடத்தனையிலுள்ள முகாமில் மேலும் 4 ஆயிரம் பேர் உள்ளனர். இவர்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும்.

வன்னிப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள மக்களுக்கும் மீளவும் வன்னிப் பகுதியில் குடியமர்ந்த மக்களுக்கும் எவ்வித ஆக்கபூர்வமான உதவிகளும் அரசினால் வழங்கப்படவில்லை.

**மக்களின் வாழ்விடங்களை ஆக்கிரமித்துள்ள இராணுவம்**

வன்னிப்பகுதியில் மிகப்பரந்தளவிலான மக்களின் வாழ்விடங்களை இராணுவம் ஆக்கிரமித்துள்ளது. எமது மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த இடங்களில் எம்மைச் சிறுபான்மை ஆக்கும் செயலில் அரசு ஈடுபட்டுள்ளது.

உலகத்தில் எங்குமில்லாதவாறு மக்களின் வாழ்விடங்களில் இராணுவத்தை நிரந்தரமாகக் குடியேற்றுவதற்கு இலங்கை அரசு திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது. அதுமட்டுமன்றி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடிசனப் பரம்பல் கட்டமைப்பை குழப்பக்கூடிய வகையில் இராணுவம் நிலைகொண்டுள்ளது.

யுத்தத்தின் பின்னரும் கூட இராணுவச் செலவீனங்களுக்காக ஆயிரம் கோடி ரூபாவை ஒதுக்கி இலங்கை அரசு, மக்களின் மீள்குடியேற்றத்திற்கு எதுவித உதவிகளையும் மேற்கொள்ளவில்லை.

அத்துடன் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்டு தடுப்பு முகாமிலுள்ள எமது மக்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். உடனடியாக அவர்களின் விவரங்களை அரசு வெளியிட வேண்டும்.

**பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை**

வன்னிப்பகுதியில் மீளக்குடியேறிய குடும்பங்களிலுள்ள பெண்களுக்குப் பாதுகாப்பில்லாத நிலைமை உள்ளது. அவர்களது குடியிருப்புகள் உறுதியற்ற மிகச்சிறியவை. அவை பாதுகாப்பானவை அல்ல. பெண்கள் இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தும் அபாய நிலைமையுள்ளது. ஏற்கனவே பல்வேறு சம்பவங்களில் இடம்பெற்றுள்ளன.

- இவைபோன்ற விடயங்கள் கலந்துரையாடலின் போது விளக்கப்பட்டன.

பிரித்தானிய பிரதித் தூதுவருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே அறிமுக சந்திப்பாக இந்தக் கலந்துரையாடல் இடம் பெற்றது. இதில் பிரித்தானிய குடியேற்ற உத்தியோகத்தர் மல்கம் லூயிஸ், வர்த்தக இணைப்பாளர் மைக்கல் ஜெபர்சன், இலங்கை அரசியல் மற்றும் அபிவிருத்தி நிறுவன அரசியல் உத்தியோகத்தர் அஸ்மா இடிரிஸ் ரகுமான் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-14)

## அளவெட்டி அருணாசலம் வித்தியாலய நூற்றாண்டு விழாவும் நிறுவுநர் தினமும்

யாழ்ப்பாணம், ஜூன் 29

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் நூற்றாண்டு விழாவும் ''அருணாசலம்'' மலர் வெளியீடும் நாளை புதன் கிழமை காலை 9 மணி முதல் பாடசாலை திறந்த வெளியரங்கில் இடம்பெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் கு.ஜெகநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் கலந்துகொள்வர். நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக் கழக சட்டத்துறைத் தலைவர் மா.சின்னத்தம்பியும், ஆய்வுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசுவும் நிகழ்த்துவர்.

நிறுவுநர் உரையை நிறுவுநரின் குடும்பத்தைச் சேர்ந்த செ.செல்வநேசன் நிகழ்த்துவார். (ஒ-1)

## சாரணிய வழிகாட்டுநர் கலந்துரையாடல் நாளை

யாழ். மாவட்ட பெண்சாரணிய, அனைத்து வழிகாட்டுநர்களுக்குமான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணி முதல் 4 மணி வரையும் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக மாவட்ட பெண் சாரணிய ஆணையாளர் திருமதி என்.தர்மகுலசிங்கம் அறிவித்துள்ளார்.

''நூறு நண்பர்களின் தெற்கு - வடக்கு நோக்கிய பயணம்'' தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது. அத்தோடு மலேசியா செல்லவுள்ளவர்களையும் சமுகம்தருமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (1-16)

## வேம்படியில் இன்று பரிசளிப்பு விழா

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் மாபிள் தம்பையா மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் திருமதி எஸ்.பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தம்பதியினர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (1)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 16 | 30.06.2010 |
| | புதன்கிழமை |
| திதி | : சதுர்த்தி |
| | மு.இ. 11.31 வரை |
| நட்சத்திரம் | : அவிட்டம் |
| | முழுவதும் |
| சுபநேரம் | : 04.26 - 05.56 |
| ராகுகாலம் | : 11.56 - 01.26 |

## சமய சந்நிதிகளில்

சாவகச்சேரி, ஜூன் 29

கொடிகாமம் கச்சாய் வீதி, புனித இராயப்பர் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 20ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இன்று நற்கருணை வழிபாடும் புனித இராயப்பர் திருச்சொரூபப் பவனியும் காலை 7 மணி முதல் நடைபெறவுள்ளது. (ஒ-131)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 29

உடுவில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரசுவாமி தேவஸ்தான பிரதிஸ்டான தின மகா சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி முற்பகல்10 மணியளவில் அம்பாளுக்கு சகஸ்ர சங்காபிஷேகம் (1008) நடைபெற்று, தொடர்ந்து விசேட பூஜை, வசந்தமண்டப பூஜை, நவசக்தி அர்ச்சனை என்பன நடைபெற்று அம்பாள் வீதியுலா வருதல் நடைபெறும்.

ஆலயத்தில் கடந்த வைகாசிப் பூரணை தினத்தன்று ஆரம்பிக்கப் பெற்ற கந்தபுராணப் படிப்பில் இன்றையதினம் சூரபன்மன் வதைப்படலம் இடம்பெறுவதோடு வருகின்ற ஆடிப் பூரணை தினத்தன்று புராணப் படிப்பு நிறைவுபெறவுள்ளது. (1)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 29

வண்.வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் ஆனிமாத சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு நாளை புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகி தொடர்ந்து வசந்தமண்டப பூஜைகளுடன் விநாயகப் பெருமான் வீதிவலம் வருவார். (ஒ-1)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 29

புலோப்பளை புனித இராயப்பர் தேவாலயத்தில் இன்று காலை 7 மணிக்கு திருநாள் பாடல் பூசை, திருச்சொரூபப் பவனி ஆகியன இடம்பெறவுள்ளன.

கடந்த 20ஆம் திகதி ஆரம்பமான உற்சவத்தை ஆலய பங்குத்தந்தை பத்திநாதர் அடிகள் நடத்திவருகிறார்.

இந்தப்பிரதேசத்துக்கு மக்கள் மீளக்குடியமர கடந்த ஏப்ரல் மாதம் அனுமதிக்கப்பட்டனர். அதன்பின் ஆலயம் புனரமைக்கப்பட்டு உற்சவம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (1-207)

## வேகமாகப் பரவும் டெங்கு நோயை கட்டுப்படுத்த ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் டெங்கு ஒழிப்புத் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை புதன்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அதிகரித்துக் காணப்படும் [illegible] நுளம்புகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பற்றி ஆராயப்படவுள்ளது.

இதில் கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். மேலும் இராணுவ, பொலிஸ், கல்வித்திணைக்களப் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொள்ளவுள்ளதாகக் கரவெட்டிப் பிரதேச செயலகத் திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் கி.சிறிபாஸ்கரன் தெரிவித்தார். (எ-டி.ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொசனை முன்னிட்டு தான நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 29

பொசன் பண்டிகையை முன்னிட்டு சாவகச்சேரி பஸ் நிலையம் அருகில் மாபெரும் தான நிகழ்வு இடம்பெற்றது.

தென்மராட்சி பிரதேச 522 ஆவது 523 ஆவது படையினரால் அன்னதான நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதேச அரச, கூட்டுறவு, வங்கி ஆகியவற்றின் தலைவர்கள் பாடசாலை அதிபர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பெரும் எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(ஒ-207-131)

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்ரதம் விவேகானந்தன் (சுமங்கலி)



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் சொர்ணவடலி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்ரதம் விவேகானந்தன் 27.06.2010 ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திருநாவுக்கரசு விவேகானந்தரின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு (அப்பர்) - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான முத்துக்கிருஷ்ணர், தம்பாப்பிள்ளை, நாகராசா மற்றும் மீனா ஆகியோரின் பெறாமகளும் சுபாஸ்சந்திரபோஸ், பாலகௌரி, கலைவாணி, சிவரூபி, சிவராணி, சிவகரன், சிவகனி, சுகுமார், சுதாகரன், சுகந்தினி, சுசித்ரா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலச்சந்திரன், துவாரகன், சிந்துகா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் சந்தானலக்சுமி, சுபத்திரா, யோகேஸ்வரி, செல்வராணி, தர்மலிங்கம், காலஞ்சென்ற பிறேமகுமாரி மற்றும் செல்வகுமார், தங்கராணி, மோகனராசா, மகிமராசா ஆகியோரின் மைத்துனியும் அபியா, ஓவியா, அபிசேகன், சாருகன், விஜிதன், கிரியா, காலஞ்சென்ற கமலகுமார் ஆகியோரின் மாமியும் சுபாசினி, தர்சிகா, அபராஜிதா, நிவேதிகா, அருணன், அருஷ்ணவி, சனோஜன், சௌமியா, கார்த்வீகன், சரண்யன், சாம்பவி, சுமுகன் ஆகியோரின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2010) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணிக்கு சொர்ணவடலி லேன், கொக்குவில் மேற்கில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சொர்ணவடலி லேன், கொக்குவில் மேற்கு.* (100041)
நா.சுதாகரன் (சகோதரன்). 0779591037, 021 3734364

## வேலையாள்கள் தேவை

பில் கிளாக், காவலாளி, தச்சுவேலையாள்கள், கூலி வேலையாள்கள் போன்ற வேலைகளுக்கு ஆள்கள் தேவை.

தொடர்பு: 021 225 5090, 021 490 1677

## விற்பனைக்கு

பான்சி கடைக்குரிய அலுமினியம் கலர் பிற்றிங் கண்ணாடி அலுமாரிகள், கவுண்டர் என்பன பருத்தித்துறையில் உடன் விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 0774366704**

## தவறிவிட்டது

திருமதி வனஜாதேவி கதிரவேல் என்பவருடைய மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் யாழ். நகரச் சந்திக்கும் உதயன் காரியாலயத்துக்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: வரன் வெற்றிலைக்கடை,
வைரவர் கோயில் முன்பாக, யாழ்ப்பாணம். 021 222 8734

## வீடு வாடகைக்குண்டு

119, நெடுங்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தில் 4 அறைகள், சமையல் அறை Attach Bathroom மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. (N.G.O. நிறுவனங்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு: 0774222901, 0726705445

## தேவை

சாரதி பயிற்சிப் பாடசாலையில் பணி புரிவதற்கு A/L படித்த ஆங்கில அறிவுடைய பெண் பிள்ளை தேவை.

**நியூ நெல்சன் லேணர்ஸ்,**
இல.89, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 4527, 0773581916

## ஒத்துமாறல்

அண்மையில் வெளிவந்த வெட்டுப் புள்ளியின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு தெரிவாகிய மாணவர் ஒருவர் அதே கற்கை நெறியை கொழும்பு, ஜெயவர்த்தனபுர, களனி, பேராதனை ஆகிய ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகிய மாணவருடன் ஒத்துமாற விரும்புகிறார்.

**தொடர்பு: 0115833593, 0777481635**

# கைதடியில் நேற்று சிரமதானம்

கைதடி, ஜூன் 29

கைதடி மேற்கு, பாரதி சனசமூக நிலையத்தில் கல்விக் குழு மாணவர்கள் நேற்று நிலைய வளாகத்தையும் அதன் விளையாட்டு மைதானத்தையும் சிரம்தானம் மூலம் துப்புரவு செய்தனர்.

இந்தச் சிரமதானத்தில் பாரதிகல்விக்குழு மாணவர்களுடன் காயத்திரி மகளிர் சங்கம், பாரதி சனசமூக நிலையங்கள் மற்றும் பாரதி விளையாட்டுக்கழக அங்கத்தவர்களும் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர். (ஒ-288)

## கார் விற்பனைக்கு

கயியுண்டாய் சன்றோ (H.W) மோடல் கார் விற்பனைக்குண்டு. (டாக்டர்களுக்கும் பெண்களுக்கும் உகந்தது).

**தொடர்பு: 021 222 2065**

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா வீரபாகு

(முன்னாள் மரக்கூட்டுத்தாபன உத்தியோகத்தரும், தற்போது அம்பிகா களஞ்சியக் கணக்காளரும்)



மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா வீரபாகு நேற்றுமுன்தினம் 27.06.2010 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ரவிக்குமார் (டுபாய்), றஜீனா (ஜேர்மனி), றஞ்சிதம் (ஆசிரியை - பளை மத்திய கல்லூரி), ராதிகா, றஜிதா, ரமேஸ் (மலேசியா), ராஜ்குமார் (மாணவன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜிதராஜ் (ஜேர்மனி), பாலேந்திரன் (யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்), தர்ஜினி ஆகியோரின் பாசமிகு மாமனும், டிலக்சனா, வைஸ்ணவிகா, தனுஷாந், நிருஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் இராஜதுரையின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2010) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் நெணியன் வெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.* (100045)
தகவல் : குடும்பத்தினர்.

### மயில்வாகனம் மகாலிங்கம்



மட்டக்களப்பு, சித்தாண்டியைப் பிறப்பிடமாகவும், கெருடாவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் மகாலிங்கம் நேற்று (28.06.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் புஸ்பமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் மருமகனும், மனோரஞ்சிதம், மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவசிதம்பரம், நாகேஸ்வரி, சிவகரன், காலஞ்சென்ற தங்கரத்தினம் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுரேந்திரநாதன், அனுரா ஆகியோரின் மாமனும் சதுஜா, சிந்துஜா, கேசாயினி, லாருயன், சிவஸ்திகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2010) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் காட்டுப்புலம் மயானத்துக்கு பி.ப. ஒரு மணியளவில் எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்மன் கோயிலடி, கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு.* T. P.-0772288236 (சி/563739)
தகவல்: சிவசிதம்பரம் (மகன்).

### தேவபாலன் கஸ்பேசன்



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தேவபாலன் கஸ்பேசன் 26.06.2010 சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி தாவீது கிருபைரட்ணம் - கஸ்பேசன் தம்பதியினரின் அன்பு மகனும் அனுசா கஸ்பேசனின் அன்புக் கணவரும் சாதனா தேவா கஸ்பேசன், சாதுர்ஜா தேவாகஸ்பேசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயசூரியன் கஸ்பேசன் (கனடா), ஜெயச்சந்திரன் கஸ்பேசன் (மொழிபெயர்ப்பாளர், நாடாளுமன்றம், கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திரு.திருமதி நித்தியநாதனின் (ஜாஎல) பாசமிகு மருமகனும் கிறவுதர் திரவியரத்தினம் கஸ்பேசன் (உடுப்பிட்டி), காலஞ்சென்றவர்களான புளோரன்ஸ் அமுதமலர் கஸ்பேசன், எமிலி அற்புதமலர் கஸ்பேசன் ஆகியோரின் பாசமிகு பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (29.06.2010) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும். அந்த நேரத்தில் "அன்ன வாசா" யாழ். வீதி, உடுப்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் மாலை 4.30 மணிக்கு நன்றி செலுத்தும் ஆராதனையும் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"அன்ன வாசா", யாழ்.வீதி, உடுப்பிட்டி.* (10044)
தகவல்: சி.ரி.கஸ்பேசன் (சித்தப்பா). 0777865512

# வலயக் கல்வி அலுவலகம் வடமராட்சி
## விற்பனைக் கேள்வி அறிவித்தல்
### யா/விக்னேஸ்வராக் கல்லூரி, வடமராட்சி
### 130'x25' பழைய கட்டடம்

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் அமைந்துள்ள 130'x25' பழைய கட்டடம் புதிய கட்டட அமைப்புக்காக இடித்து அப்புறப்படுத்தப்படவுள்ளது. இதில் மீள் பாவனைக்குரிய கட்டுமாணப் பொருள்களும் உண்டு. இவற்றிற்கான பகிரங்க விற்பனைக்கான கேள்வி கோரப்படுகின்றது. கூடுதலான விலை கோருபவருக்கு கட்டடப் பொருள்கள் வழங்கப்படும்.

01. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி: 29.06.2010 முதல் 07.07.2010 மதியம் 12 மணிவரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 09.07.2010 மதியம் 12 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: 09.07.2010 பி.ப. 2 மணி
(திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.)
04. கேள்வியினை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு. சரியாக நிரப்பப்படாத தெளிவற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
05. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்திசெய்து மூலப்பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும், கையொப்பமும், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையில் இட்டு ஒட்டப்பட்ட ஒப்பந்தகாரரின் முத்திரையிடப்பட்டு வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள் விப் பெட்டியில் இடல் வேண்டும்.
06. கட்டடத்தினை இடித்து அகற்றும் வேலை கீழ் வருவனவற்றினைக் கொண்டிருக்கும்
1. கூரை, ஓடுகள், மரங்கள் அகற்றுதல். 2. யன்னல்கள், கதவு நிலைகள் அகற்றுதல்.
3. கண்டகல்லுக் கட்டு, சுவர் அத்திவாரம், தூண், சிமெந்துத்தரை என்பவற்றை அகற்றுதல்
4. கட்டடத்தினை இடித்தழிக்கும் போதும், வெளியகற்றும் போதும் ஏற்படும் குழிகள், பள்ளங்கள் அனைத்தும் நிரப்புதல்
07. பொருள்களுக்கான கேள்வி மேற்படி வேலைகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.
08. இடிபாடுகள் அனைத்தும்பாடசாலை வளவில் இருந்து அகற்றப்படுவதுடன் ஏதும்மீதம் இருக்க அனுமதிக்கப்படமாட்டாது.
09. இடித்தழிக்கும் நடவடிக்கைகள் வலயக் கல்வி அலுவலகத்தின் பாடசாலைகள் வேலைகள் பிரிவினாலும், யாழ்.மாவட்டப் பாடசாலைகள் வேலைகள் பிரிவின் பொறியியலாளர் மற்றும் உத்தியோகத்தராலும் மேற்பார்வையிடப்படும்.
10. வேலைகள் நடைபெறும்போது அயலிலுள்ள கட்டடங்களுக்கு எவ்வித சேதமும் ஏற்படாதவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
11. மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 500/= மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 15000/= செலுத்தப்பட வேண்டும். இவை தினமும் அலுவலக நாள்களில் மதியம் 12 மணிவரை செலுத்தப்பட முடியும். இவற்றுக்கான இறுதித் திகதி 07.07.2010 ஆகும்.
12. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித் தொகையினை 14.07.2010 இற்கு முன்னர் அல்லது பொருள்களை பாடசாலை வளவிலிருந்து அகற்றுவதற்கு முன்னர் இதில் எது முந்தியதோ அதற்குள் செலுத்தப்படல் வேண்டும்.
13. கட்டடத்தினைப் பார்வையிட விரும்புவோர் பாடசாலை நாள்களில் காலை 9.30 தொடக்கம் 12.30 மணி வரை பாடசாலை அதிபரின் அனுமதிபெற்றுப் பார்வையிடலாம்.

வலயக்கல்வி அலுவலகம்,
வடமராட்சி. (சி/568738)
[illegible],
வலயக் கல்விப் பணிப்பாளர்.

## விளையாட்டு நிகழ்வுகள்

கைதடி, ஜூன் 29

கைதடி, முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு கைதடி, நாவற்குழிக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான மென்பந்துக் கிரிக்கெட், கரப்பந்தாட்டம் மற்றும் மரதன் ஓட்ட நிகழ்வு ஆகியன நடத்தப்படவுள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று பாடசாலை மண்டபத்தில் அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கைதடி நாவற்குழி வலயத்துக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ஒ-288)

## கண்காணிப்புக் குழுக்கூட்டம்

சுகாதாரத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான ஜூலை மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இதில் சம்பந்தப்பட்டவர்களை சமுகமளிக்குமாறு பிராந்திய பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரிட்டன் பிரதி தூதுவர் மார்க் குட்டிங் யாழ்.மாவட்ட செயலகத்துக்கு விஜயம் செய்தபோது அரச அதிபர் கே.கணேஷ் கைலாகு கொடுத்து வரவேற்பதனை முதல் படத்திலும் அரச அதிபரைப் பிரதித் தூதுவர் சந்தித்துக் கலந்துரையாடுவதனையும் அருகில் பிரிட்டன் குடியேற்ற உத்தியோகத்தர் மல்கம் லூயிஸ், வர்த்தக இணைப்பாளர் மைக்கல் ஜெபர்சன், இலங்கை அரசியல் மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் அரசியல் உத்தியோகத்தர் அஸ்மா எட்றிஸ் ரஹ்மான் ஆகியோர் அமர்ந்திருப்பதனையும் அடுத்துள்ள படத்திலும் காணலாம்.
*(படங்கள்: ரட்ணம்)*

# விசாரணைகளில் முடிவுகள் எட்டப்படவில்லை; குடும்பநல மருத்துவ மாணவிகள் தொடர்ந்து வீட்டில்

யாழ்ப்பாணம்,ஜூன் 29

யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியில் குடும்பநல மருத்துவ மாணவிகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டமை தொடர்பான விசாரணைகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் நேற்று நடைபெற்றபோதும் முடிவுகள் எதுவும் எட்டப்படாத நிலையில் அவர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

சுமார் 76 மாணவிகள் இடைநிறுத்தப்பட்டதால் இரண்டு வாரங்களுக்கு மேலாக கற்றல் செயற்பாடுகள் ஏதுமின்றி அவர்கள் வீட்டில் உள்ளனர்.

குறித்த தாதியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளர் ஒருவருக்கு எதிராக மாணவிகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாட்டினைச் செய்திருந்தனர்.

மாணவிகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் செய்துள்ள முறைப்பாட்டினை வாபஸ் பெற்றால் மட்டுமே விரிவுரைகளுக்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று எச்சரித்துக் குறிப்பிட்ட மாணவிகள் இடைநிறுத்தப்பட்டனர்.

இதனால் அந்த மாணவிகள் சுமார் இரண்டு வாரங்களுக்கு மேலாக கற்றல் செயற்பாடுகள் ஏதுமின்றி வீட்டில் உள்ளனர்.

இந்த மாணவிகளை மீண்டும் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் இணைத்துக் கொள்ளும் முகமாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் நேற்று இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ், தாதியர் பயிற்சிக் கல்லூரியின் அதிபர், யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் இ.பவானந்தராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

விசாரணைகள் நடைபெற்றபோதும் மாணவிகளை மீண்டும் தாதிய பயிற்சிக் கல்லூரியில் இணைத்துக் கொள்வது தொடர்பில் எந்தவித முடிவுகளும் எட்டப்படவில்லை என்று தெரியவருகிறது.

மாணவிகளின் இடைநிறுத்தப்பட்ட காலம் நீடித்துச் செல்வதால் அவர்களின் கற்றல் செயற்பாடுகள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன.

இவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு உரிய விசாரணைகளைத் துரிதமாக மேற்கொண்டு மீண்டும் கற்றல் செயற்பாடுகளுடன் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை உரிய உயர் அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டுமென்று பாதிக்கப்பட்ட மாணவிகளின் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (50-9)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன் 29

அராலி மத்தி உலோலைசிட்டி விநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் எதிர்வரும் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று சுவாமி திருவீதியுலா வருவார்.

(204)

* * *

நவாலி,ஜூன் 29

நவாலி சென்.பீற்றேர்ஸ் தேவாலயத்தின் வருடாந்தப் பெருவிழாவில் நேற்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணைப் பெருவிழா நடைபெற்றது.

இன்று செவ்வரய்க்கிழமை காலை 7 மணிக்கு திருப்பலிப் பூசையும் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

(204-100)




# மாவட்ட செயலக இலச்சினையை அரச அதிபர் திரைநீக்கம் செய்தார்

யாழ்ப்பாணம்,ஜூன் 29

யாழ்.மாவட்ட செயலகத்துக்கான இலச்சினையை யாழ்.அரச அதிபர் கே. கணேஷ் நேற்றுத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

யாழ்.மாவட்டத்தின் பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தினை வெளிக்காட்டும் வகையில் இந்த இலச்சினை உருவாக்கப்பட்டுள்ளது. பனைவளம், கடல் வளம், விவசாய வளம் என்பவற்றுடன் யாழ். இசைக்கருவியும் இந்த இலச்சினையில் உள்ளடங்கியுள்ளது.

மரத்தினால் செய்யப்பட்ட இலச்சினையை சம்பிரதாய பூர்வமாகத் திரைநீக்கம் செய்யும் நிகழ்வு மாவட்ட செயலகத்தில் நேற்று அரச அதிபர் தலைமையில் இடம்பெற்றது. இதில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



யாழ்.மாவட்ட செயலகத்துக்கென கொடி ஒன்று பாவனையிலுள்ள நிலையில் தற்போது இலட்சினையும் பயன்பாட்டில் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (50-14)

# பல வருடங்களாகத் திருத்தப்படாத வீதிகள்; புனரமைக்குமாறு சங்குவேலி மக்கள் கோரிக்கை

வண்ணை,ஜூன் 29

பல வருடகாலமாகத் திருத்தம் செய்யப்படாமல் இருந்து வரும் சங்குவேலி ஜோலன் காமம் குளவீதி, குட்டிப்பொக்கன் வீதி மற்றும் சங்குவேலி தெற்கில் இருந்து மெமோறியல் பாடசாலையை இணைக்கும் ஒழுங்கை ஆகியவற்றைப் புனரமைத்து வழங்க வேண்டும்.

கடந்த 12ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி சங்குவேலி சனசமூக முன்றலில் நடத்திய மக்களுடனான சந்திப்பு நிகழ்வில் அப்பகுதி மக்களால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு இளைப்பாறிய சங்குவேலி உபதபாலதிபர் கா.ஜெகநாத் தலைமையில் நடைபெற்றது.

மேலும் மக்களால் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டவை பின்வருமாறு:

"விவசாய பயன்பாட்டுக்காக 1988ஆம் ஆண்டுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட மின்சார விநியோகம் தற்போது நடைபெறாமல் உள்ளது. விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்ட இக்கிராம மக்களுக்கு மின்சாரம் பெரிதும் பயன் தருவதாகும், அதனை மீண்டும் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வடமாகாண ஆசிரிய சேவைக்கான போட்டி மற்றும் நேர்முகப் பரீட்சைகளில் சித்தியடைந்த பட்டதாரிகளுக்கான நியமனம் இன்னும் பூர்த்தி செய்யப்படாமலுள்ளது. அதனை விரைவாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவும்.

மக்கள் சபைச் செயலாளருக்கான கருத்திட்டங்களுடனான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டு 5 மாதங்கள் கடந்த நிலையிலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சங்கம் புலவு மயானத்திற்குரிய விஸ்தீரணமுள்ள காணியைப் பாதுகாத்து புனரமைத்து மயானத்துக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை வழங்கவும் ஆவன செய்தல்.

மேற்படி கோரிக்கைகள் அடங்கிய மகஜரைப் பெற்றுக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி மேற்படி வேலைத் திட்டங்களை நிறைவேற்றித் தருவதாக உறுதி வழங்கினார். (50-160)

# நேற்று முன்தினம் பெரும் எண்ணிக்கையில் கீரிமலை சென்ற தென்னிலங்கை மக்கள்

யாழ்ப்பாணம்,ஜூன் 29

யாழ்ப்பாணத்துக்குப் பொசன் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காகத் தென்னிலங்கையிலிருந்து வந்த மக்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பெரும் எண்ணிக்கையில் கீரிமலைக்குச் சென்றனர்.

தென்னிலங்கைப் பயணிகளின் வாகனங்களால் நேற்று முன்தினம் பண்டத்தரிப்பு - கீரிமலை வீதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

நேற்று முன்தினம் காலை முதல் மாலை வரை தென்னிலங்கைப் பயணிகளின் 130இற்கும் மேற்பட்ட பஸ்கள் கீரிமலைக்குச் சென்று திரும்பின. நேற்றுமுன்தினம் ஊறணி அந்தோனியார் திருவிழாவும் நடைபெற்றது. இதற்கும் பக்தர்கள் சென்றமையால் பண்டத்தரிப்பு - கீரிமலை வீதியில் போக்குவரத்து அதிகமாகக் காணப்பட்டது.

கீரிமலையில் ஆயிரத்துக்கும் அதிகமான தென்னிலங்கை மக்கள் நேற்று முன்தினம் கூடியமையால் இவர்களுக்கான உணவு மற்றும் குடிதண்ணீர் வசதிகளை இராணுவத்தினர் மேற்கொண்டனர்.

கீரிமலைக்குச் சென்ற தென்னிலங்கை மக்கள் அங்கு நகுலேஸ்வரர் ஆலயத்தைத் தரிசித்ததுடன் கீரிமலைக் கேணியில் நீராடி மகிழ்ந்ததையும் அவதானிக்க முடிந்தது.

(50-224)

# மதுபான நிலையங்களுக்கு அருகில் அட்டகாசம் செய்யும் 'குடி'மக்கள்

நாவற்குழி,ஜூன் 29

யாழ்.குடாநாட்டில் மதுபான விற்பனை நிலையங்களை அண்மித்த இடங்களில் மதுப்பிரியர்களின் அட்டகாசம் அவ்வப்போது தொடர்கின்றதாகக் கூறப்படுகின்றது.

குறிப்பாக இரவு வேளைகளில்தான் இந்நிலை உருவாகுவதாகக் கூறப்படுகின்றது.

மதுபான விற்பனை நிலையங்களுக்கு முன்பாக அவற்றைக் குடிக்கக் கூடாதென்ற அரசாங்கச் சட்டமுள்ளது.

விடுதிகளில் மது குறித்த மில்லி லீற்றருக் ணகு மேல் ஒருவருக்கு குடிக்க விற்கக் கூடாதென்ற சட்டமும் உள்ளது.

ஆயினும் இவை சரியான நடைமுறைக்கு இடப்படுவதை பொலிஸார் உறுதி செய்வது மிகக் குறைவாக உள்ளதாகப் பொதுமக்களால் கூறப்படுகின்றது.

போக்குவரத்து மேற்பார்வைக்கென நிறையப் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளதைப் போல மதுபாவனை, குற்றங்கள் தொடர்பிலும் அதிகம் பேரை ஈடுபடுத்தினால் நல்லதெனப் பொதுமக்கள் கருத்துக்கள் தெரிவிக்கின்றனர்.

(50-121)

# அரச அதிபரைச் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார் பிரிட்டிஷ் பிரதித் தூதர்

யாழ்ப்பாணம், ஜூன் 29

நேற்று யாழ். வந்த இலங்கைக்கான பிரிட்டன் பிரதித்தூதுவர் மார்க் குட்டிங் யாழ். அரச அதிபரைச் நேற்று யாழ். செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலின் போது, யாழ். மாவட்டத்தின் தற்போதய நிலைவரம், வன்னி, யாழ். மாவட்ட மக்களின் மீள்குடியேற்றச் செயற்பாடுகள், வன்னிப்பகுதியில் மீளக் குடியேறிய மக்களுக்கான நிரந்தர வீட்டு வசதிகள், வாழ்வாதாரச் செயற்பாடுகள் ஆகியன குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.


அத்துடன் கைத்தொழில் துறைகள் குறித்தும் மக்களுக்கான நாளாந்த வாழ்வாதார முயற்சிகளுக்குக்கான சிறுதொழில் துறைகள் குறித்தும் இதில் ஆராயப்பட்டது.

யாழ். வணிகர் கழகம், யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி தேவை மதிப்பீடு செய்ததன் பின்னர் சிறுதொழில் வாழ்வாதார முயற்சிகளுக்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பிரிட்டன் பிரதித்தூதுவர் மார்க் குட்டிங், அரச அதிபர் கே. கணேஷிடம் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது பிரித்தானியாவின் குடியேற்ற உத்தியோகத்தர் மல்கம் லூயிஸ், வர்த்தக தொடர்பாளர் மைக்கல் ஜெபர்சன், கொழும்பு அரசியல் மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் அரசியல் உத்தியோகத்தர் அஸ்மா எட்றிஸ் ரஹ்மான் ஆகியோரும் கலந்து கொண்டனர். (50-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







நல்லூர் சயன்ஸ் அக்கடமியில் நடைபெற்ற 2009 - க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு விழாவில் முதலாவது படத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா மங்கல விளக்கேற்றுதையும் இரண்டாவது படத்தில் பிரதம விருந்தினர் உரையாற்றுவதையும் சிறப்பு விருந்தினர் பிரபல பௌதிகவியல் ஆசிரியர் இ.குமரன், கௌரவ விருந்தினரான சிரேஷ்ட சட்டத்தரணியும் ஜனாதிபதியின் ஆலோசகரும் கின்னஸ் சாதனையாளருமான எஸ். இராமச்சந்திரன், தேசிய சேமிப்பு வங்கியின் வட்வலய பொது முகாமையாளர் வி. அருளானந்தம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை ஆகியோர் அமர்ந்திருப்பதையும் மூன்றாவது படத்தில் கௌரவிக்கப்பட்ட மாணவர்களோடு அக்கடமியின் ஆசிரியர்களையும் காணலாம்.

## உதவித் தொகை வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 29

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வன்னியிலிருந்து மீளக் குடியேறிய 57 பயனாளிகளுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினரால் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை உதவித் தொகை பெற்றுக்கொள்ளாதிருந்த பயனாளிகளுக்கே தலா 20ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டதாக கோப்பாய் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-டி-ரி)

## மரண அறிவித்தல்

### சந்திரசேகரம் குமாரசாமி

பருத்தித்துறை, ஓடக்கரையைப் பிறப்பிடமாகவும் பூதராயர் கோயில் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் குமாரசாமி 27.06.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்தில் இன்று (29.06.2010) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

*பூதராயர் கோயில் ஒழுங்கை,*
*பருத்தித்துறை*
*0213734572*

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

உள்ளூராட்சி வாரம் எதிர்வரும் ஜூலை மாதம் 17ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை கொண்டாடப்படவுள்ளதால் அது தொடர்பான ஆரம்பக் கூட்டம் ஒன்று புத்தூர் பிரதேச சபைச் செயலாளர் ந.நடராசா தலைமையில் பிரதேச மாநாட்டு மண்டபத்தில் நாளை புதன் கிழமை நடைபெறவுள்ளது.

(எ-டி-ரி)

## சிதறு தேங்காய் இளைஞரின் தலையைத் தாக்கியது

யாழ்ப்பாணம், ஜூன் 29

தேர் உற்சவத்தின் போது சிதறு தேங்காய் அடிக்கையில் கை தவறி இளைஞரின் தலையைத் தாக்கி காயப்படுத்தியது.

கடந்த வெள்ளிக்கிழமை வரணியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த என்.கயமாறன் (வயது-18) என்பவர் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிக்சை பெற்று வருகிறார்.

(ஒ-207)

## வீட்டுக்கு வீடு டெங்கு ஒழிப்புக் கடிதம் புத்தூர் பிரதேச சபை புதுயுக்தி

புத்தூர் பிரதேச சபை மூலம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக புத்தூர் பிரதேச சபைச் செயலாளர் த.நடராசா தெரிவித்தார்.

புத்தூர் பிரதேச சபை நிர்வாக எல்லைக்கு உட்பட்ட 37 பாடசாலைகளில் 10 பாடசாலைகள் விடுத்த கோரிக்கையினைத் தொடர்ந்து அப்பாடசாலைகளிலுள்ள கழிவுகள் பிரதேச சபை 'டிராக்டர்'மூலம் அகற்றப்பட்டுள்ளன.


அத்துடன் பிரதேச சபை ஊழியர்கள், சுகாதாரப் பகுதி ஊழியர்களுடன் இணைந்து ஒவ்வொரு குடியிருப்பாகச் சென்று டெங்கு ஒழிப்புத் தொடர்பான கடிதங்களை வழங்கி வருவதாகவும் டெங்குநோய் உருவாகும் அபாயமுள்ள குடியிருப்பாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் செயலாளர் தெரிவித்தார். (எ-டி-ரி)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி சக ஆசிரியை
திருமதி றஞ்சிதம் பாலேந்திரா அவர்களின் அன்புத் தந்தை
**கந்தையா வீரபாகு** அவர்கள்
27.06.2010 அன்று காலமான செய்தியறிந்து
துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
மாணவர்கள்.
கிளி/பளை மத்திய கல்லூரி. (100030)

# மரண அறிவித்தல்



## வைத்திலிங்கம் விநாயகராசா

அளவெட்டி கும்பிளாவளையைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய் இரட்டையர்புலம் வைரவர் கோவிலடியை வசிப்பிடமாகவும், தற்பொழுது இல. 17 ரணஜயகம வைத்தியா வீதி தெகிவளையில் வசித்தவருமாகிய வைத்திலிங்கம் விநாயகராசா அவர்கள் 27.6.2010 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ் சென்ற திரு. திருமதி வைத்திலிங்கம் அவர்களின் மகனும், காலஞ் சென்ற திரு. திருமதி சின்னத்தம்பியின் மருமகனும், திரு. நேசச்செல்வம் (பவா)வின் அன்புக் கணவரும், சத்தியரூபன் (ரூபன்), பத்மரூபன் (செந்தா), ராஜரூபன் (கல்கி) ஆகியோரின் தந்தையும், ஜெபனி, கவிதா ஆகியோரின் மாமனாரும், கணேசம்மா, தங்கரத்தினம், இரத்தினேஸ்வரி, காலஞ் சென்ற நவரத்தினம் ஆகியோரின் சகோதரரும், காலஞ் சென்ற சோமசுந்தரம் (சித்து) மற்றும் ஞானசுந்தரம் (ஞானம்), பூலோகசுந்தரி, சிவபாதசுந்தரம் (ராசா), ஆகியோரின் மைத்துனரும், காலஞ் சென்றவர்களான பஞ்சரத்தினம், காசிநாதன் மற்றும் இரத்திரேஸ்வரி, அம்பலவாணர், நடராசா, மாணிக்கவாசகர், திருமதி நவரத்தினம் ஆகியோரின் சகலனும், சிவராசா (லிங்கன்), தர்மராசா (சூட்டி), தயாளினி (உஷா), றதீபா (சித்து), சௌந்தரராஜ் (பிறின்), ஜெயவாணி (யசோ), நிரஞ்சன், கணேசலிங்கம் (சிவா), கெங்கா, கண்ணன், ஜெனனி, நவநீதன் மற்றும் ஏனைய பெறாமக்களின் ஆசை சித்தப்பாவும், சிவானி, றமணி, பவானி ,சிவசங்கர், அபிராம் மற்றும் ஏனைய மருமக்களின் சின்ன மாமனாரும், கிருஷன், கிருஷங்கர், நிஷாங்கி, நின்முகி, சில்வன், தர்சியா, தனேஷா, வினோஜா மற்றும் ஏனைய பேரப்பிள்ளைகளின் சின்னத்தாத்தாவும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நேற்றும், இன்றும் அஞ்சலிக்காக அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை (30.6.2010) புதன்கிழமை காலை 9.00 மணிமுதல் 1.00 மணி வரை அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்சாலை!'யில் வைக்கப்பட்டு பிற்பகல் 1.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மாலை 5.00 மணியளவில் கல்கிசை கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள், மைத்துனர்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொஸ்கோ பாடசாலைக்கு முன்னால் குளத்தில் தேங்கிக் கிடக்கும் கழிவுகள்

## மாணவர்களுக்கு டெங்கு பரவும் அபாயம்



கைதடி,ஜூன் 29

யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்திற்கு முன்னால் உள்ள மருதடி விநாயகர் ஆலயக் குளத்தில் தேங்கி இருக்கும் கழிவுகளால் அப்பிரதேசத்தில் டெங்கு நோய் பரவ வாய்ப்புள்ளதாகப் பொது மக்களால் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

மேற்படி குளத்தில் அண்மையில் பெய்த கடும் மழையினால் வெளிப்பிரதேச கழிவுப் பொருள்களான பிளாஸ்டிக் போத்தல்கள் மற்றும் மீன்ரின் வெற்றுப் பேணிகள் உட்பட பலவகை கழிவுப் பொருள்கள் தேங்கி உள்ளதாகவும், இதனால் தற்போது அங்கு நுளம்பு முதலிய பல நோய்க்காவிகள் உருவாகி இருப்பதனால் டெங்கு உள்ளிட்ட பல நோய்கள் பரவலாம் எனவும் கூறப்படுகின்றது.

மேற்படி பாடசாலை முடிவடைந்த வேளைகளில் மாணவர்கள் இக்குளத்தைச் சுற்றிவேடிக்கை பார்ப்பதுடன் தமது பொழுதையும் கழிக்கின்றார்கள். இவ்வேளைகளில் இவர்கள் நுளம்புக் கடிக்கு இலக்காவதால் இவர்களுக்கு மேற்படி நோய்கள் விரைவில் பரவுவதற்கு சந்தர்ப்பம் உண்டென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அக்குளத்தில் இருக்கும் கழிவுகளை மாநகரசபை கண்டும் காணாதது போல் விட்டு விடுவதனையும் அங்கு அவதானிக்க முடிகின்றது.

எனவே, இனியாவது இவ்விடயத்தில் மாநகரசபை நிர்வாகம் உடனடிக் கவனமெடுத்து மாணவர்களின் நலனுக்காவது இக்கழிவுகளை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-288)

## விசேட செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜூன் 29

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் தரம் 10,11 வகுப்புகளில் வணிகமும் கணக்கீடும் பாடத்தினைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வு இன்று செவ்வாய்கிழமையும் நாளை புதன்கிழமையும் நடைபெறவுள்ளது.

தேசிய கல்வி நிறுவக செயற்றிட்ட அதிகாரி எஸ்.கே.பிரபாகரனால் நடத்தப்படுகின்ற இந்தக் கருத்தரங்கில் அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (50-9)




# போலி 1000 ரூபாத் தாளின் ஊடுருவல் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 29

போலி ஆயிரம் ரூபா நாணயத்தாள் யாழ். நகரப் பகுதியில் சில இடங்களில் கடந்த சனிக்கிழமை சிக்கியுள்ளன. கடந்த சில நாள்களாக யாழ்ப்பாணத்தில் ஊடுருவி, புழக்கத்திலுள்ள போலி ஆயிரம் ரூபா நாணயத்தாள்களே இவ்வாறு கையும் மெய்யுமாகச் சிக்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்தவின் உருவம் பொறிக்கப்பட்டு அண்மையில் வெளியிடப்பட்ட புதிய ஆயிரம் ரூபா நாணயதாளினைப் பிரதி செய்தே இந்தப் போலி நோட்டுகள் அச்சிடப்பட்டுள்ளன.

இதேசமயம் வங்கிகளில் பணத்தை வைப்பிலிடுவோரின் ஆயிரம் ரூபா நாணயத் தாள்கள் உன்னிப்பாகப் பரிசிலிக்கப்பட்ட பின்னரே பெறப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிந்தது.

இந்தப் போலி ஆயிரம் ரூபா நோட்டுகள் அதிகளவில் புழக்கத்துக்குள் புகுந்து விட்டதால் இதுகுறித்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. (எ-224)

# வலிகிழக்குப் பகுதியில் 1,300 பேர் அடையாள அட்டை பெறவில்லை

நாவற்குழி,ஜூன்29

வலிகாமம் கிழக்கு - கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வயது வந்தோரில் தேசிய அடையாள அட்டை எடுக்காதோர் எனச் சுமார் 1300 பேர் இனங்காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இவர்களில் ஏறத்தாழ 850 பேருக்கு தேசிய அடையாள அட்டை பெறுவதற்குரிய ஆவணங்கள் உருவாக்கப்பட்டு விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஸின் துரித முயற்சியினால் பெருந்தொகையானோருக்கு குறுகிய காலப் பகுதியில் இவ்விதமாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மிகுதி 450 பேருக்குரிய தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுப்பதற்குரிய தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகின்றது.

பிறப்புச் சான்றிதழ் இல்லாதோருக்கு உத்தேச வயதுச் சான்றிதழ் மற்றும் பொருத்தமான ஆவணங்களை உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தேர்தலில் வாக்களித்தல் உட்படப் பல தேவைகளுக்கும் தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஆயினும் பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தால் தேசிய அடையாள அட்டையை பெறாதவர்கள் போதிய அக்கறை எடுக்காமலிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

அவர்களுக்கு விழிப்புணர்வுகளை தொடர்ச்சியாக வழங்கியே இவ்விதமாக தேசிய அடையாள அட்டை விண்ணப்பங்களை பூரணப்படுத்த ஆவணங்களை உருவாக்க வேண்டியுள்ளதாகக் கூறப்படுகின்றது. (50-121)

# இம்முறை அதிகளவில் எதிர்பார்க்கப்படும் புலம் பெயர்ந்த தமிழ் உறவுகளின் வருகை

நாவற்குழி,ஜூன் 29

புலம் பெயர் உறவுகளின் யாழ்ப்பாண வருகை அடுத்த ஜூலை மாதம் முதல் நிகழ உள்ளதனை எதிர்பார்த்து வீடுகளில் கட்டட நிர்மாண வேலைகள் நடைபெறுகின்றன.

அண்மைய வாரங்களாக இவ்வேலைகள் முழு வேகத்தில் நடைபெறுவதனை அவதானிக்க முடிகின்றது.

தண்ணீர் தாங்கி, குளியலறை கட்டுதல், கொமட் மலசலகூடம் அமைத்தல், வீடுகளுக்கு வர்ணம் பூசுதல் என்பன போன்ற வேலைகளே அவ்வாறு நடைபெறுகின்றன.

இதனால் கட்டட வேலைத் தொழிலாளர்களுக்கு திடீர் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இம்மாத இறுதியுடன் மேற்கு ஐரோப்பிய, வடஅமெரிக்க, ஓசானிக் நாடுகளில் பாடசாலையின் வருடாந்த விடுமுறை விடுவது வழக்கமாக உள்ளது.

5 வருடங்களுக்குப் பின்பாக நாட்டில் இயல்பு நிலை தோன்றியுள்ளதால் பெருந்தொகையாகப் புலம் பெயர் உறவுகளின் வருகை பல்லாயிரக் கணக்கில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. (50-121)

# போரினால் பாதிப்புற்ற பெண்களைத் தலைமையாக கொண்டுள்ள குடும்பங்களின் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 29

போரினால் பாதிக்கப்பட்ட பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் விவரம் தற்போது யாழ். மாவட்டத்தில் திரட்டப்பட்டு வருகின்றது.

யாழ்.அரசாங்க அதிபரின் பணிப்பின் பேரில் பிரதேச செயலாளர்கள் இத்தரவுத் திரட்டல் நடவடிக்கைகளில் கிராம சேவகர்களை ஈடுபடுத்தி உள்ளனர்.

இவ்வாறு உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடனேயே இக்கணக்கெடுப்பு இடம்பெறுவதாகக் கூறப்படுகின்றது. இத்தரவு சேகரிப்பில் வருமானம் மிகவும் குறைந்த குடும்பங்களுக்கு முன்னுரிமைப்படுத்தப்படவுள்ளன.

இதற்குரிய மாதிரிப் படிவத்தில் தலைமைத்துவம் வகிக்கும் பெண்ணின் பெயர், பிள்ளைகளின் பெயர், வயது, பால், முகவரி, கல்வித்தகைமை, தொழில், மாதாந்த வருமானம், வாழ்வாதாரத்தை மேம்படுத்த தேவைப்படும் உதவியும் தொகையும் ஆகிய விவரங்கள் உள்ளடங்கியுள்ளன. போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள், தலைமைத்துவக் குடும்பங்கள் தமது பிரிவின் கிராம அலுவலர்களிடம் தொடர்பு கொண்டு உரிய பதிவை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-121)

## சென். பீற்றர்ஸ் றோ.கவுக்கு புதிய அதிபர் நியமனம்

நாவாலி,ஜூன் 29

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் கடமையாற்றிய அரியரத்தினம் ஜெகதீஸ்வரன் கடந்த 15ஆம் திகதி முதல் நவாலி சென்.பீற்றர்ஸ் றோ.க.த.க பாடசாலையின் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பாடசாலையில் பணியாற்றிய யோ.ஒ.பங்கிராஸ் சில்லாலை றோ.க.த.க பாடசாலைக்கு பதவி உயர்வுடன் இட மாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். (50-100)

# சிலிங்கோ சிஸ்கோவின் 12ஆவது கிளை யாழ்ப்பாணத்தில் நாளை திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 29

'சிலிங்கோ சிஸ்கோ' நிறுவனம் தனது கிளையொன்றை யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை செவ்வாய்கிழமை மு.ப.10 மணியளவில் 230/1, நாவலர் வீதியில் இந்தக் கிளை அலுவலகம் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த நிறுவனம் இலங்கையின் முன்னணி பாதுகாப்பு சேவை வழங்குநர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது இதன் 12 ஆவது கிளையாகும்.

'சிலிங்கோ சிஸ்கோ' தனது நடவடிக்கைகளை 1977இல் ஆரம்பித்தது. நாடாளாவிய ரீதியில் தனது கிளை வலையமைப்பின் ஊடாக வர்த்தக மற்றும் தொழிலகப் பாதுகாப்பில் தனது தரத்தை நிலைநிறுத்தியுள்ளது. (க)

## பெற்றோர் தின விழா

யாழ்ப்பாணம்,ஜூன் 29

மாரீசன்கூடல் றோ.க.த.க பாடசாலையின் பெற்றோர்தின விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறுவுள்ளது.

அதிபர் நோபேட் உதயகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக சட்டத்துறைத் தலைவர் மா.சின்னத்தம்பி கலந்து கொள்வார். (50-204)



இணுவில் மக்லியோட் வைத்தியசாலையின் வாய், பல் சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கும் வைபவத்தில், சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை பல்வைத்திய நிபுணர் மங்களா விளக்கேற்றுவதையும், பேராயர் டானியல் தியாகராஜா, பிரதம விருந்தினர் அமெரிக்க பாதிரியார் பான்யான் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: எஸ்.கதிரவேலு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. நிபுணர் குழுவில் இடம்பெற அருகதையற்றவர் அமெ. ஸ்டீவன்

## ரம்புக்வெல சீற்றம்

கொழும்பு, ஜூன் 29

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூனுக்கு இலங்கையின் போர்க் குற்றம் தொடர்பில் ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவில் அங்கத்துவம் பெற்றுள்ள அமெரிக்கரான ஸ்டீவன் ரட்னர் தொடர்பில் இலங்கை அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

அமெரிக்க சட்டத்தரணியாக ஸ்டீவன் ரட்னர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளமை தொடர்பில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

ஸ்டீவன் ரட்னர், எழுதியுள்ள 'மனித உரிமைகளும் சர்வதேச சட்டமும்' என்ற நூலில் இலங்கையில் தமிழர்கள், இனரீதியாகப் புறக்கணிக்கப்படுகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார் என்றும் கெஹலிய ரம்புக்வெல சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான ஒருவர் எவ்வாறு இந்தக் குழுவில் இடம்பெற முடியும் என்றும் அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்தநிலையில் இந்தக்குழுவுக்கு எதிராக, இலங்கை சர்வதேச ஆதரவைப் பெற முயற்சிகளை மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ரஷ்யா, சீனா, ஈரான் ஆகிய நாடுகள் பான் கீ மூனின் நிபுணர் குழு தொடர்பில் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளன.

அதேவேளை அமெரிக்கா, நோர்வே, பிரான்ஸ் போன்ற நாடுகள் ஐ.நா. நியமித்துள்ள ஆலோனனைக் குழு குறித்து தமது ஆதரவை தெரிவித்துள்ளன. (சி)

# இலங்கையின் எதிர்கால நலன்களிற்கு மனித உரிமை விவகாரம் அவசியம்

## அமெ. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

இலங்கையின் எதிர்காலத்திற்கு மனித உரிமை விவகாரங்கள் மிகவும் அடிப்படையானவை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில், நாட்டு மக்களுக்கும் அரசிற்கும் இடையில் ஸ்திரமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமானது என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

நாட்டு மக்களுடனான உறவுகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான சிறந்த வாய்ப்பு தற்போது உருவாகியுள்ளதென அமெரிக்கா பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளது என்று ராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் பி.ஜே.க்ரவ்லி தெரிவித்துள்ளார்.

மனித உரிமை விவகாரங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதன் மூலம் இலங்கையின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிபுணர்கள் குழுவை நாட்டுக்குள் பிரவேசிக்க அனுமதிக்க முடியாது என்ற இலங்கை அரசின் நிலைப்பாடு தொடர்பில் கருத்து வெளியிட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (சி)

# ஐ.நா. நிபுணர் குழுவிற்கு எதிராக அரசு ஆதரவு திரட்டி வருகிறதாம்

கொழும்பு, ஜூன் 29

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழுவிற்கு எதிரான பிரசாரங்களுக்கு அரசு ஆதரவு திரட்டி வருகிறது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கு ஆதரவான நாடுகளிடம் வெளிவிவகார அமைச்சு உதவி கோரி வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

நிபுணர்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமாறு ஆசிய மற்றும் அணி சேரா நாடுகளின் தலைவர்களிடம் வெளிவிவகார அமைச்சு கோரத் திட்டமிட்டுள்ளது என்றும் சீனா, ரஷ்யா மற்றும் எகிப்து போன்ற நாடுகளிடம் அரசு உதவி கோரியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நிபுணர்கள் குழு இலங்கை தொடர்பான விசாரணைகளை நடத்தப் போவதில்லை என ஐ.நா பொதுச் செயலாளரின் ஊடகப் பேச்சாளர் மார்டீன் நெசர்கீ தெரிவித்துள்ளார்.இதனை ஒரு விசாரணை ஆணைக் குழுவாக கருதக் கூடாது எனவும், பொதுச் செயலாளருக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனால், குறித்த நிபுணர்கள் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்து விசாரணைகளை நடத்த வேண்டிய அவசியம் கிடையாதென்றும் அவர் தெரிவித்திருந்தார். (சி)

# பயங்கரவாத தடைச் சட்டம் படிப்படியாகவே நீக்கப்படும் என்கிறார் அமைச்சர் கெஹலிய

கொழும்பு, ஜூன் 29

பயங்கரவாத தடைச்சட்டம் படிப்படியாகவே நீக்கப்படும். அதேபோன்று அவரசகால விதிகளும் நீக்கப்படும் என்று ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

கடந்த 35 ஆண்டுகளில் முதன் முறையாக அவசரகால விதிகளில் முக்கியமான பகுதிகளை அரசாங்கம் தளர்த்தியுள்ளது. சோதனைச் சாவடிகள் பல அகற்றப்பட்டுள்ளன. மூடப்பட்டிருந்த வீதிகளும் திறக்கப்பட்டுள்ளன-என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அவரசகால விதிகளை நீக்குதல், பயங்கரவாத தடைச்சட்டத்தை இல்லாதொழித்தல் மற்றும் தடுத்து வைத்திருப்போரை விடுவித்தல் ஆகியன ஜி.எஸ்.பி சலுகைகளை நீடிப்பதற்கான முக்கிய மூன்று நிபந்தனைகளாக ஐரோப்பிய ஒன்றியம் விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-க)

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ்.நகரை அண்டிய பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய பெரிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
0718474115

**வீடு வளவு விற்பனைக்கு**

கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதியில் காளி அம்மன் கோயிலுக்கு முன்பாக 4 ½ பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு
தொ.பே.இல: 0019056078185,
004793646416
மேலதிக விவரங்களுக்கு: 0779352335

## வாசகர் திருமுகம்

### பெருமைக்குரிய வீதியை அசிங்கப்படுத்துகிறார்களே!

யாழ்.மாநகரில் பெயர்போன ஒன்று கோயில் வீதி. மிக அழகான வீடுகளையும், ஆடம்பரமான அடுக்குமாடிகளையும், அழகிய பூந்தோட்டங்களையும் கொண்ட வீதி இது. இத்தோடு அரச உத்தியோகத்தர்கள் உட்படப் பல்வேறு மக்கள் செறிந்து வாழுகின்ற வீதி. பல்வேறு சர்வதேச நிறுவனங்களும், இவ்வீதியில்தான் இயங்கிவருகின்றன. இவற்றைவிட மேலாக சரித்திரப் பிரசித்திபெற்றதும், புனிதப் பிரதேசமும், நாளாந்தம் தென்னிலங்கை மக்களால் நிறைந்து வழிகின்ற நல்லூர் கந்தசுவாமி கோயிலும் இவ்வீதியில்தான் அமைந்துள்ளது. இவ்வாறு பெருமைகளைப் பேசும் இவ்வீதி இன்று குப்பை கூழங்களால் நிறைந்து, அழுகிய மிருகங்களின் துர்நாற்றம் வீசுகின்ற, மூக்கைப் பொத்திக்கொண்டு, வாந்தியை அடக்கிக்கொண்டு செல்லுகின்ற அருவருக்கத்தக்க இடமாக மாறியுள்ளது.

இவ் வீதியில் அமைந்துள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திற்கும், ஐ.நாவின் உலக உணவு ஸ்தாபனத்திற்கும் இடையில் ''லாவா'' தனியார் வைத்திய சாலைக்கு அருகிலும் அமைந்துள்ள யாழ்.புகையிரத தண்டவாளப்பாதை இன்று குப்பை கூழங்கள், நாய், பூனை, கோழி, காகம் போன்ற விலங்குகளின் அழுகிய உடல்கள், மனிதக் கழிவுகள், ஹோட்டல் கழிவுகள், துருப்பிடித்த தகரங்கள், டப்பாக்கள், உடைந்த போத்தல்கள், கண்ணாடித் துண்டுகள் மற்றும் சொல்லமுடியாத கழிவுகள் எனப் பல்வேறு கழிவுப்பொருள்களைக் கொட்டுகின்ற இடமாக மாறியுள்ளது.

மக்கள் இதற்கு மிக நெருக்கமாகச் செறிந்து வாழுகின்றனர். இதிலிருந்து சுமார் 5 யார் தூரம் அளவில் பக்கம் பக்கமாக வீடுகள், குடிதண்ணீர் கிணறுகள், சமைத்துச் சாப்பிடும் குசினிகள் உள்ளன. அழுகிய, வாந்தி எடுக்க வைக்கின்ற, துர்நாற்றம் நாளாந்தம் வீசுகின்ற இந்த இடத்தில் மக்கள் எப்படி வாழ முடியும்? எப்படி உணவருந்த முடியும்? குப்பைகளும், துர்நாற்றம் வீசுகின்ற அழுகிய மிருக-உடல்களையும் நாளாந்தம் கடந்து தான் இங்குவாழுகின்ற மக்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்று வருகின்றனர். வாழ்க் கையே வெறுக்கும் அளவுக்கு துர்நாற்றம், வீட்டு வளவுகள் எல்லாம் குப்பை கூழங்கள், கிணறுகளில் எல்லாம் அழுகிய மிருகக் கழிவுகள். இத் துர்நாற்றங்களைச் சகித்துக் கொண்டுதானே மக்கள் உணவருந்துகின்றனர், துர்நாற்றக் காற்றை சுவாசித்துக் கொண்டுதானே வாழுகின்றனர்.

இதற்கெல்லாம் காரணம் யார்? மனச்சாட்சியே இல்லா ஒரு சில மக்களேதான், ''நாங்கள் மட்டும் வாழ்ந்தால் போதும்'' என நினைப்பவர்கள், மோட்டார் சைக்கிள்களிலும், சைக்கிள்களிலும், ரக்டர்களிலும் வந்தல்லவா இவற்றைப் போட்டுவிட்டுச் செல்கின்றனர். சிலர் இரவோடு இரவாக போட்டுவிட்டு ஓடி மறைகின்றனர். இதனால் அக்கம் பக்கச் சனங்கள் எப்படி வாழ முடியும்? நோய் நொடிகள் அல்லவா நாளாந்தம் பீடிக்கின்றன. டெங்கு நோய்பரவும் ஆபத்தும் உள்ளது. சாப்பிட முடியாதபடி அழுகிய துர்நாற்றம், கிணற்று தண்ணீர் கூட குடிக்க முடியவில்லை, உணவு அருந்த முடியவில்லை, எப்படி வாழ முடியும்....? நினைத்துப் பார்கிறார்களா குப்பை கொட்டும் மாந்தர்கள்....?

யாழ்.மாநகர சபைக்கும் அறிவிக்கப்பட்டது. அவர்களும் தங்களால் முடிந்தளவு உதவுகின்றனர். ஆனால் குப்பை கொட்டுவோர் திருந்தவில்லையே! வருந்தவில்லையே! ஒரு சிறிதும் ''மற்றவர் வாழவேண்டுமே'' என எண்ணிப் பார்க்கவில்லையே! ஏன் கல்லானது இவர்கள் இதயங்கள்..? இக் குப்பை கூழங்களுக்கு மிக அருகில் உள்ள வீட்டில் வசிக்கும் தாய் ஒருவர் கூறுகின்றார் தனது பிள்ளைக்கு பிறந்ததில் இருந்து ஒரே வருத்தம். கீழே இறங்க விட்டால் போதும். பிறகு வைத்தியசாலைக்குத்தான் கொண்டுபோவோம். அவ்வளவு விரைந்து நோய் தொற்றிவிடுகின்றது என்கிறார். மாநகரசபை கூறுகின்றது ''இது குப்பை கொட்டும் இடமும் இல்லை, குப்பை சேகரிக்கும் நிலையமும் இல்லை'' என. அப்படி இருக்க இக்குப்பைகளைக் கொட்டும் மக்கள் மட்டும் ஏன் மற்றவர்கள் நோய், நொடிகள் இன்றி நாளாந்தம் உணவருந்தி நல்ல காற்றை சுவாசித்து வாழ வேண்டும் என விரும்புகின்றார்கள் இல்லை? கல்லான இவர்களது இதயங்கள் கனிவான இதயங்களாக மாறாதா?


மக்களின் சுகநலன்களில் ஆர்வம் உள்ளவர்கள், சூழலைப் பேணிக் காப்பவர்கள், நகரத்தின் பாதுகாவலர்கள் மக்களைக் குறையின்றி வாழ வழி செய்வார்கள். நலன் விரும்பிகள் இவ்விடயத்தில் மிக விரைவாக அக்கறைகாட்டி இவ் அப்பாவி மக்களைக் காப்பாற்றமாட்டார்களா.....?

நல்லூர். ஜீவிதன்.

## நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவனமெடுப்பார்களா?

தென்மராட்சிப் பகுதியிலுள்ள வரணி, அல்லாரை, தம்புதோட்டம் ஆகிய இடங்களில் கடந்த காலத்தில் மிகப்பெரிய இராணுவ முகாம்கள் இருந்தமை யாவரும் அறிந்ததே. இந்த இராணுவ முகாம்களில் இருந்தும் வன்னிப் பிரதேசத்திலிருந்தும் எறிகணை வீச்சுக்கள் இடம்பெற்றமையும் தெரிந்ததே.

2006ஆம் ஆண்டு யுத்தம் உக்கிரமடைந்த வேளையில் எறிகணைகளால் பாரிய சேதங்கள் ஏற்பட்டதாலும் இடையிடையே நேரடி மோதல்கள் நடைபெற்றதாலும் வரணி, அல்லாரை, தம்புதோட்டம் பகுதிகளைச் சூழவிருந்த மக்கள் தம் உடைமைகள் யாவற்றையும் விட்டு அகதிகளாக அயல் கிராமங்களுக்குச் சென்றனர்.




இதன்பின்னர் 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்து ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்பே இப்பகுதி மக்கள் தமது வீடுகளிலிருந்த இடங்களைப் பார்க்கக் கூடியதாக இருந்தது.

தாம் பல காலமாக வாழ்ந்த இடங்கள் உருமாறி இருந்ததுடன் பல வீடுகள் முற்றாக அழிந்திருந்தன. சில வீடுகள் பலத்த சேதத்துக்குள்ளாகியிருந்தன. இங்கு வாழ்தோரில் பலர் இன்றும் கூட உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலுமே வாழ்கின்றார்கள்.

இதைவிட அல்லாரை முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் 5000 இற்கும் மேற்பட்ட பனை, தென்னைகள் அழிந்துபோயின. இப்பகுதி மக்களின் இழப்புகளையும், வாழ்வாதாரப் பிரச்சினைகளையும் நிவர்த்தி செய்ய அரசசார்பற்ற நிறுவனங்களோ, உரிய அரச அதிகாரிகளோ இது வரையில் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாததினால் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாவது கவனத்திற்கொள்ள வேண்டுமென்று பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்.

அல்லாரை வடக்கு. சி.காசிப்பிள்ளை.

**மஹஜன சம்பத** — அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2258
திகதி 27.06.2010

வெற்றி எழுத்து: A
வெற்றி எண்கள்: 3 3 5 7 5 0

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | A | 3 | 3 | 5 | 7 | 5 | 0 | ரூபா. | 20,674,195/= | பரிசு | - |
| 1ம் பரிசுகள் | | 3 | 3 | 5 | 7 | 5 | 0 | ரூபா. | 20,00,000/= | பரிசுகள் | 01 |
| 2ம் பரிசுகள் | | | 3 | 5 | 7 | 5 | 0 | ரூபா. | 100,000/= | பரிசுகள் | 04 |
| 3ம் பரிசுகள் | | | | 5 | 7 | 5 | 0 | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 65 |
| 4ம் பரிசுகள் | | | | | 7 | 5 | 0 | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 654 |
| 5ம் பரிசுகள் | | | | | | 5 | 0 | ரூபா. | 100/= | பரிசுகள் | 6386 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 0 | ரூபா. | 20/= | பரிசுகள் | 63578 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 3 | 3 | 5 | 7 | 5 | | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 07 |
| 8ம் பரிசுகள் | | 3 | 3 | 5 | 7 | | | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 60 |
| 9ம் பரிசுகள் | | 3 | 3 | 5 | | | | ரூபா. | 100/= | பரிசுகள் | 638 |
| 10ம் பரிசுகள் | | 3 | 3 | | | | | ரூபா. | 50/= | பரிசுகள் | 6366 |
| 11ம் பரிசுகள் | A | | | | | | | ரூபா. | 20/= | பரிசுகள் | 25375 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 20,853,906.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,633,760.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline: 2433631

முடிவுகளை அறிய www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சங்கப் பலம் இருந்தால் மாத்திரமே தொழிலாளர்கள் உரிமைகளைப் பெறமுடியும்

## லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் செயலர் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 29

தொழிலாளர்கள் தம்மை தொழிற்சங்க ரீதியில் பலப்படுத்திக் கொள்வதன் மூலமே தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் ஏற்கனவே அனுபவித்து வரும் உரிமைகளையும் பாதுகாத்துக்கொள்ள முடியும் - என லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் பொதுச் செயலாளர் எஸ். இராமநாதன் தெரிவித்தார்.

பதுளை அட்டாம்பிட்டியவில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனின் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யூனியனின் உதவிச் செயலாளர் எம்.ராஜ்குமார் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

அங்கு இராமநாதன் மேலும் கூறியவை வருமாறு:-

அத்தியாவசிய உணவுப்பொருள்களின் விலைகள் உயர்ந்து கொண்டு போவதனால் தங்களுக்குக் கிடைக்கும் ஊதியத்தை வைத்து சமாளிக்க முடியாத நிலையில் தோட்டத் தொழிலாளர்கள் உள்ளனர்.

இந்நிலையில் தொழிலாளர்களுக்கு தோட்டங்களில் முறையாக தொழில் வழங்கப்படுவதும் இல்லை. கிடைக்கும் சொற்ப ஊதியத்தையும் தோட்ட நிர்வாகங்கள் மறைமுகமாகச் சுரண்டுகின்றன.

மேலும், நிர்வாகங்களின் கெடுபிடிகள் போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளுக்கும் தொழிலாளர்கள் முகம்கொடுத்து வருகின்றனர்.

தோட்டங்களில் வேலையில்லாத காரணத்தால் ஆடைத்தொழிற்சாலைகளை நாடிச் சென்ற பெருந்தோட்ட யுவதிகளும் இன்று பல ஆடைத்தொழிற்சாலைகள் மூடப்பட்டதால் தொழில் வாய்ப்புகளை இழந்துள்ளனர். இந்நிலையானது இன்று தொழிலாளர் வர்க்கத்தைப் பெரிதும் பாதித்துள்ளது.

இவ்வாறு தொழிலாளர் வர்க்கம் தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து வருவதற்கு பிரதான காரணம், தொழிலாளர் மத்தியில் இருந்துவந்த போராட்ட உணர்வுகள் மழுங்கடிக்கப்பட்டுள்ளமையே.

இதனால் இன்று தொழிலாளர்கள் அற்பசொற்ப சலுகைகளுக்காகப் பலருக்கும் பின்னால் ஓடித்திரியும் நிலை ஏற்பட்டுள்ளது.

கட்டுக்கோப்பான தொழிற்சங்கப் போராட்டங்கள் மூலம் தொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகளை வெற்றி கொண்ட கடந்த கால வரலாறுகள் உள்ளன. தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதில் அவர்களின் தொழிற்சங்க பலம் முக்கிய பங்கு வகிக்கின்றது.

அதேசமயம், தொழிலாளர்களின் சமூக ரீதியிலான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பு தேவை. தொழிலாளர்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சி அதிகாரங்களுக்கு வருபவர்கள், பிரதிபலனை எதிர்பாராமல் அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

எனவே, அரசியலையும் தொழிற்சங்க நட வடிக்கைகளையும் தொழிலாளர்கள் குழப்பியடிக்கக் கூடாது - இப்படி இராமநாதன் தெரிவித்தார்.

(ளி)

# புரட்டொப் தோட்டத்தில் பெண்ணுக்கு லொறியில் பிரசவம்; சிசு உயிரிழப்பு

## வைத்தியசாலை வசதியின்மையால் பரிதாபம்

நுவரெலியா, ஜூன் 29

தோட்ட லொறியில் பிரசவத்திற்கு கொண்டுசெல்லப்பட்ட கர்ப்பிணித் தாயொருவர் இடைவழியில் குழந்தையைப் பிரசவித்த அதேவேளை, அக்குழந்தையும் சுமார் ஒரு மணிநேரத்தில் உயிரிழந்த துர்ப்பாக்கிய சம்பவம் நுவரெலியா புசல்லாவை புரட்டொப் தோட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம் பெற்றது.

இதுகுறித்துக் கூறப்பட்டவை வருமாறு:-

நுவரெலியா மாவட்டத்தின் புசல்லாவை புரட்டொப் பகுதியைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய் ஒருவர் பிரசவத்திற்காக தோட்ட லொறியில் கடந்த சனிக்கிழமை இரவு புசல்லாவை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

பிரசவத்துக்காக சென்றுகொண்டிருந்த இவருக்கு இடைநடுவிலேயே பிரசவம் நடைபெற்றது.

வைத்திய வசதிகள் எதுவும் இல்லாத காரணத்தால் பிறந்த சிசு சுமார் ஒரு சில மணிநேரத்துக்குள் உயிரிழந்தது.

புரட்டொப் தோட்டத்தில் அம்புலன்ஸ் வசதிகள் இல்லாத காரணத்தாலும், தோட்ட மருத்துவ உதவியாளர் மற்றும் குடும்பநல மாதுக்களின் உதவிகள் உரிய நேரத்தில் கிடைக்காத காரணத்தினாலுமே இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என தோட்ட மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் நிதியொதுக்கீட்டில் மத்திய மாகாண சுகாதார அமைச்சின் ஊடாக புரட்டொப் தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட வைத்தியசாலை இதுவரை திறக்கப்படவில்லை - என்பது குறிப்பிடத்தக்கது.

(ளி)

# 107 சந்தன மரக் குற்றிகளுடன் வலப்பனையில் வான் பிடிபட்டது

கொழும்பு, ஜூன் 29

வலப்பனைக் காட்டில் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட 107 சந்தன மரக்குற்றிகள் சூட்சுமமாக வான் ஒன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டு கொழும்புக்குக் கொண்டு வரப்பட்ட சமயம் வலப்பனை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் சந்தேகத்தின்பேரில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேகநபர்களில் கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் கான்ஸ்டபிள் ஒருவரும் அடங்குகிறார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டடி நீளத்தில் கச்சிதமாக வெட்டப்பட்டு கடத்தப்பட்ட இக்குற்றிகள் வெளிநாட்டுக்கு அனுப்பப்பட இருந்தன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைதுசெய்யுப்பட்ட கான்ஸ்டபிள் தனது உத்தியோகத்தைப் பாவித்து இக்குற்றிகளை சூட்சுமமாகக் கடத்தினார் எனக் கூறப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட ஐவரில் பெண்ணொருவரும் அடங்குகிறார். கைப்பற்றப்பட்ட சந்தனக் குற்றிகளுடன் இவர்களை நீதிமன்றில் ஆஜர்செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என வலப்பனை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(ளி)




# கிழக்கு மாகாணத்தில் விவசாயிகளிடம் நெல்லை அரசு நியாயமான விலையில் வாங்க வேண்டும்

## அரியநேத்திரன் எம்.பி. ஜனாதிபதியிடம் கோரிக்கை

மட்டக்களப்பு, ஜூன் 29

கிழக்கு மாகாண விவசாயிகளின் நெல்லை அரசு நியாயமான விலை கொடுத்து வாங்க வேண்டும் என்று வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள் பெரும் எண்ணிக்கையில் உள்ளனர். இம்முறை நெல்லின் விலை இம்மாவட்டங்களில் பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது. இதனால் இம்மாவட்ட விவசாயிகள் பெரும் நட்டங்களை எதிர்நோக்கியுள்ளனர். அத்துடன், இந்த நெல்லைக் களஞ்சியங்களில் நீண்ட காலத்துக்கு பாதுகாப்பாக வைத்திருக்க முடியாது. ஏனெனில் ஒரு வகையான பூச்சிகள் நெல்லை அரித்து விடுகின்றன.




மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான் கரைப் பகுதியில் வாடிகளில் களஞ்சியப் படுத்தப்பட்டிருக்கும் நெல் யானைகளின் அட்டகாசங்களால் அழிக்கப்படுகிறது. இந்நிலையில் கிழக்கு மாகாண விவசாயிகள் மிகவும் மனம் உடைந்து போயுள்ளனர். அவர்கள் உள ரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, அவர்களின் வாழ்வாதாரமும், பொருளாதாரமும் சீரழிந்து விடும்.

அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டு விட்டால் அரசுதான் அதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே, அப்படி ஒரு நிலைமை ஏற்படாமல் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். கிழக்கு மாகாண விவசாயிகள் மட்டுமல்ல நாடு முழுவதும் உள்ள அனைத்து விவசாயிகளுமே நெல்லின் விலை குறைந்துள்ளமையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, இதை ஒரு தேசியப் பிரச்சினையாகக் கொண்டு எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் உரிய தீர்வை பெற்றுத்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நெல்லின் விலையைத் தவிர ஏனைய அநேகமான பொருள்களின் விலைகளும் அதிகரித்துச் செல்கின்றமையையும் உங்களின் மேலான கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன். -இப்படி அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(ளி)

# மூதூர் கிழக்கில் மீள்குடியேற்றப்பட்டவர்களுக்கு ரூ. 25ஆயிரத்தை வழங்குமாறு கோரிக்கை

திருகோணமலை, ஜூன் 29

மூதூர் கிழக்கில் மீள்குடியமர்த்தப்பட்ட கிராமங்களிலுள்ள குடும்பங்களின் மீள் குடியமர்வுக்கான 25,000 ரூபா கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கட்டைபறிச்சான் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

மூதூருக்கு அண்மையில் விஜயம் செய்த மீள்குடியேற்ற அமைச்சர், பிரதியமைச்சர்கள் குழுவிடமே கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் முதல் வாரம் மீள்குடியேற்ற அமைச்சர், பிரதி அமைச்சர் முரளிதரன், பௌத்தசாசன பிரதி அமைச்சர் குணவர்த்தன உள்ளிட்ட குழுவினர் மூதூருக்கு விஜயம் செய்தனர்.

அத்துடன், பிரதேச செயலக மண்டபத்தில் மக்களையும் சந்தித்தனர். இதன்போது, பிரதேச செயலாளர் என்.செல்வநாயகம், உதவி அரச அதிபர் ஆ.நடராஜா உள்ளிட்ட உயர் அதிகாரிகளும் பிரசன்னமாகி இருந்தனர். இதன்போதே கட்டைபறிச்சான் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் சார்பில் மேற்படி கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

அண்மையில் மீள்குடியமர்த்தப்பட்ட சேனையூர், கட்டைபறிச்சான் வடக்கு, தெற்கு, கடற்கரைச்சேனை போன்ற கிராமங்களின் குடும்பங்களுக்கு குறித்த 25 ஆயிரம் ரூபா வழங்கப்படவில்லை எனவும், அதனை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், கோரிக்கை முன்வைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ளி)

# மட்டு. மாவட்டத்தில் பலத்த காற்று

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பகல் நேரங்களில் கடுமையான கச்சான் காற்று வீச ஆரம்பித்துள்ளது. இதனால் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர்.

காலை 10 மணிக்குமேல் ஆரம்பமாகும் இக்கச்சான் காற்று மாலை 7 மணிவரை வீசுகின்றது. இதனால் வாழை போன்ற மரங்கள் முறிந்து விழுகின்றன. அத்துடன், இக்காற்றால் மண் அள்ளி வீசப்படுகின்றது. இதனால் புழுதி மண்டலமாக இடங்கள் மாறிவிடுகின்றன.

வீட்டுக்கூரைத் தகரங்கள், கிடுகுகள் ஆகியன காற்றால் வீசப்படுகின்றன.

வருடாந்தம் ஜூன் மாதம் ஆரம்பப்பகுதியிலேயே இக் கச்சான் காற்று வீச ஆரம்பிக்கும். ஆனால், இம்முறை காலம் பிந்தியே இக்காற்று வீச ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்லடிப்பாலத்தின் மேல் சைக்கிள்களைச் செலுத்தமுடியாமல் பலர் உருட்டிக் கொண்டு செல்வதை அவதானிக்க முடிகின்றது.

கச்சான் காற்றுடன் இணைந்து கடுமையான வெயில் எறிப்பதால் பகல் நேரங்களில் வயோதிபர்களும், குழந்தைகளும் வெளியில் வர மிகவும் சிரமப் படுகின்றனர்.

இன்னும் சில வாரங்களுக்கு இக்கச்சான் காற்று தொடருமென வானிலை அவதான நிலைய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

(ளி)

# வெருகலில் மூன்று உபதபால் கந்தோர்கள் வாடகைக் கட்டடங்களிலேயே இயங்குகின்றன

## நிரந்தரக்கட்டடம் அமைக்க பொதுமக்கள் கோரிக்கை

அம்பாறை, ஜூன் 29

வெருகல் பிரதேசத்திலுள்ள மூன்று உபதபால் கந்தோக்களுக்கு நிரந்தர கட்டடம் இன்றி அவை வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன எனப் பொது மக்கள் கூறுகின்றனர்.

போதுமான வசதிகளுடன் கூடிய நிலையான கட்டட வசதிகள் இன்றி அலுவல்கள் இயங்குவதால் அவற்றிற்குச் சென்றுவருகின்ற பொதுமக்கள் சிரமப்படுகின்றனர் என குறைக் கூறப்படுகிறது.

அத்துடன், இங்குள்ள தபால் நிலையங்களில் தொலைநகல், கணினி, மின்னஞ்சல் போன்ற வசதிகள் இல்லையெனவும் மக்கள் கூறுகின்றனர்.

இவை இல்லாமையால் உடனுக்குடன் பல சேவைகளைத் தாம் பெற்றுக் கொள்ள முடியாமல் சிரமப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவற்றைக் கருத்திற் கொண்டு வெருகல் பிரதேசத்திலுள்ள தபால் நிலையங்களுக்கு நிலையான கட்டட வசதிகளையும், தொலைநகல், கணினி, மின்னஞ்சல் வசதிகளையும் ஏற்படுத்தத் தரவேண்டும் எனப் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக் கின்றனர்.

(ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மண்ணின் மரபுகளையும் பழமைத்துவத்தையும் அறிந்து கொள்வதற்கு வழிசமைத்த சாரணர் ஜம்போறி

சாரணியமானது பல்வேறு நற்பண்புகளின் அடித்தளமாக அமைகிறது. தன்னலமற்ற சேவையினை வாரி வழங்கும் உலக மகா இயக்கமாகப் பவனிவரும் சாரணியத்துவம், சிறார்களின் வாழ்வில் அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு காலத்துக்குக்காலம் மாபெரும் ஒன்றுகூடல்களை நடத்தி

**இலங்கை சாரணர் ஜம்போறி கடந்த மே மாதம் 14ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இது குறித்து கிழக்கு மாகாண ஆசிரியர் ஒருவர் எழுதிய கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

''ஜம்போறி'' எனும் பேரில் மாணவ உள்ளங்களில் இயல்பாகத் தோன்றும் பல்வேறு அம்சங்களை வெளிக்கொணரவும், அதனுடாக அனுபவ ரீதியான இன்றைய கல்வித் தத்துவத்தை நேரடியாகப் போதிக்கும் நடைமுறைகளையும் கொண்டிருக்கும் இச் சாரணியத்தின் தன்மைகளை இன்று வடபகுதி மாணவர்களும் சுவைத்திடும் பொருட்டு நாடளாவிய ரீதியில் இன, மத, குலபேதமின்றி அனைவரும் ஒரேநாட்டு மக்கள்

## அழிவுகளிலிருந்து மீண்டெழுவதற்காக சுறுசுறுப்புடன் இயங்கும் யாழ்.மக்கள்

என்பதைப் பறைசாற்றிடும் வகையில், வடபிராந்தியத்தின் தேசிய நிகழ்வாக இச் சாரணர் ஜம்போறியைக் குறிப்பிடலாம்.

கடந்த காலங்களில் நாட்டில் காணப்பட்ட அசாதாரண சூழலினால் பயனுள்ள பலவிடயங்களை நாம் அனைவருமே வீணாக்கிய நிலை இனிமேல் வரவே கூடாது என்கிற நோக்கில் அனைத்துப் பகுதிகளிலும் அனைத்து மக்களும் ஒன்றாய்க் கலக்கும் பல்வேறு நிகழ்வுகளில் இம் மாணவர்களது ஒன்றுகூடலானது மிகவும் பெறுமதியானதும், போற்றத்தக்கதாகவும் காணப்படுகிறது என்றால் அதுமிகையாகாது. நாட்டின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் சுமார் 1400 இற்கும் மேற்பட்ட ஆண், பெண், குருளைச் சாரணர்கள் எனக் கலந்து, யுத்தம் நடைபெற்ற பிரதேசத்து மக்களினதும், மாணவர்களினதும் மனங்களில் தங்களது மனச்சுமைகளையும், மனவடுக்களையும், யுத்த அகோரத்தில் ஏற்பட்ட விளைவுகளையும் கண்டுகொள்ளச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி அதனை வடமாகாணத்திற்கான ஜம்போறி மற்றும் குருளைச்சாரணர் கப்போரியையும் ஏற்பாடு செய்த வடமாகாணத்தின் சாரண ஆணையாளரான த.நா.போஜனின் விடாமுயற்சி மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

மே மாதம் 14ஆம் திகதி யாழ்ப்பாணத்தின் பழைய பூங்கா வளாகத்தில் ஆரம்பமான இந்நிகழ்வுக்கு த.நா.போஜன் (வடமாகாண சாரண ஆணையாளர்) தலைமை தாங்க, சிறப்பு அதிதிகளாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்ப்பாண மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் ஆகியோருடன், இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதம ஆணையாளரான சீ.பட்டுவாங்கல, உதவிப் பிரதம ஆணையாளர்களான எம்.எப்.எஸ்.முகீட், சிறாஜ் சாலிஹ், திருமதி கீத பெரேரா, றொகான் ஏ. பெர்ணான்டோ, நிமல் டிசில்வா, தேசிய பயிற்சிகளுக்கான ஆணையாளர் சாந்தா எம்.மதுருவ போன்றோர் அகில இலங்கை சாரணர் சங்கத்தின் சார்பிலும் கிழக்கு மாகாண சாரண ஆணையாளரும் அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளருமான அல்ஹாஜ் யு.எல்.எம்.ஹாசீம், இன்னும் பல மாகாண, மாவட்ட ஆணையாளர்களும், சாரண ஆசிரியர்களும் கலந்து சிறப்பித்தனர்.

முதல் நாள் நிகழ்வுகளைத் தொடர்ந்து மாணவர்களின் பல்வேறு நிகழ்ச்சிகளும் ஆரம்பமாகின. தொடர்ந்து சாரணப் பாசறைகள் பல அமைக்கப்பட்டு அங்கு ''கஜஸ்'' செய்முறைகளும் பழவலாக அமைக்கப்பட்டிருந்தன. அவற்றையும் அதிதிகள் பார்வையிட்டனர். சுமார் 42 ஏக்கரைக் கொண்டுள்ள இப்பழைய பூங்காவினுள் யாழ்.மாவட்ட அரச அதிபரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் அமையப்பெற்றுள்ளதுடன் அங்கு பழைமையான கச்சேரிக் கட்டடமும் இடிந்து, தூர்ந்து போன நிலையில் காணப்படுகிறது. இம்மைதானத்தினுள் காணப்படுகின்ற மரங்களின் நிழல்கள் அங்கு சென் றவர்களின் பார்வையில் மிகவும் குளிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தன. மாணவர்களது பல்வேறு சாரணப்பயிற்சிகளும், சாரணர்களுக்கிடையிலான கலந்துரையாடல்களும் நடைபெற்றதுடன், வெளி மாவட்டங்களிலிருந்து வருகை தந்திருந்த சாரணர் குழுக்களுக்கு யாழ்ப்பாணத்திலுள்ள பல பாடசாலைகளில் தங்குவதற்கான ஏற்பாடுகளும் விரிவான முறையில் ஏற்படுத்தப்பட்டிருந்தமை சிறப்பானதாக அமைந்திருந்தன.

இன்று படுவேகமாக சுற்றிச் சுழலும் உலகில் உள ரீதியான பிரச்சினைகளே முதன்மை நிலையில் ஒவ்வொருவரையும் பற்றிப்பிடித்து, செயலிழந்து காணப்படுகின்ற மானிடரின் மத்தியில் இன்றைய கல்விச் சிந்தனைகளில் 'செயற்பாட்டுடனான கற்றலின் ஊடாக' உள மேம்பாட்டையும், சிறப்பான தைரியத்தையும், தலைமைத்துவ மற்றும் உரியநேரத்திற்கு இயங்குகின்ற நற்பேறுடைய நாளைய நன் மக்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்ற பலவாறான இணைப்பாடவிதான செயற்பாடுகளில் 'சாரணியம்' கிரீடம் போல் அமைந்துள்ளதை அதன் செயற்பாடுகள் பறைசாற்றி நிற்கின்றன என்றே கூறலாம். அந்த வகையில்தான் இன்னொரு விசேடம் அங்கே எம்மால் அவதானிக்கப்பட்டன. சிங்களம் பேசுகின்ற சாரணர்கள் தமிழ் மாணவர்களுடன் மிகவும் லாவகமாக தங்களுக்கிடையிலான உறவுகளை ஏற்படுத்தியிருந்தனர். அதேபோன்று தமிழ் பேசுகின்றவர்களும் மொழிநடை ஒரு பிரச்சினையே அல்ல என்பது போல் சகஜமான முறையில் அனைவரும் ஒரே குடும்பத்தவர்கள் போல் முஸ்லிம், தமிழர், சிங்களவர் என்கிற பேதமற்ற நிலையில் அந்த நான்கு நாள்களிலும் உளரீதியான அன்பின் பெருக்கத்திற்கு இன்னும் காரணமாய் அமைந்திருந்தன என்றே கூறலாம்.

வெளிமாவட்ட சாரண மாணவர்களுக் கென உள்ளூர் சுற்றுலாக்கள் பல ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. அந்த நிகழ்வொன்றில் அக்கரைப்பற்று வலய சாரண மாணவர்கள் 22 பேரும், சாரணத்தலைவர்களான ஆசிரியர்கள் எம்.பீ.செய்னுலாப்தீன், எம்.எச்.ஹம்மாத் மற்றும் எப்.றிபாஸ் ஆகியோருடன் அக்கரைப்பற்று வலயக் கல்விப்பணிப்பாளர் யு.எல்.எம். ஹாசீம் அவர்களும், கட்டுரையாளரான நானும் கலந்து கொண்டேன். எங்களது பயணம் நயினாதீவை நோக்கியதாக இருந்தது. அந்தப் பயணத்தில் சுமார் 200இற்கும் மேற்பட்ட ஏனைய மாவட்டத்தைச் சேர்ந்த சாரணர்களும் இணைந்து கொண்டனர். வழித்துணையாக யாழ்.மாவட்ட உதவிச் சாரணர் ஆணையாளர் ஒருவரினது தலைமையில் பயணம் மேற்கொள்ளப்பட்டது. வழித்துணைக்கு யாழில் மையங்கொண்டுள்ள இராணுவப் படையினர் உதவினர். இதுபோன்று கீரிமலை போன்ற பிரதேசங்களுக்கும் மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு யாழ்.மண்ணின் மரபுகளும், பழைமைத்துவமிக்கதுமான கிராமங்களும், யுத்தத்தினால் இடிந்துபோயுள்ள நிலையில் காணப்படுகின்ற மிச்சசொச்ச வடுக்களையும், மக்களின் ஆதங்கங்களையும், யாழ்.மண்ணின் விஸ்தீரத் தன்மையையும் நேரில் கண்ணுற்றபோது அங்குவந்திருந்த சாரணர்கள் யாழ்ப்பாண மக்களினது பற்றுருதிமிக்க அன்பினை மிகவும் லாவண்யமாகவே கண்டுகொண்டனர். அவர்களது உபசரிப்பு, பேச்சு மொழி, சகோதரபாசம் போன்ற நிலைகளில் உயர்பண்பைப் பெற துடிப்பது போன்றதொரு இயல்பான மனிதத்துவ ஊற்றைக் காணும் நிலையில் யாழ்.மக்கள் கடந்தகால நெருக்கடிமிக்க வாழ்வை மறந்து உறவாடியபோது மிகவும் அர்த் தம் நிறைந்ததாகவே இருந்தது.

இவ்வாறான நிகழ்வுகள் மூலமாக இரண்டரக் கலந்து நாம் அனைவரும் ஒரே நாட்டின் ஒருதாய் மக்கள் என்கிற பேதமற்ற தன்மையினை வெளியிடும் வகையில் நயினாதீவில் காணப்படுகின்ற மூவினங்களுக்குமான இறை இல்லங்களைக் கண்ணுற்றபோது மெய்மறந்து போனோம். சுமார் 5 கி.மீ. சுற்றுவட்டத்தைக் கொண்ட தாக காணப்படுகின்ற இத்தீவில் பௌத்த ஆலயம், இந்துக்கோயில், முஸ்லிம் பள்ளி வாசல் என்பன காணப்படுவது இன்னும் இம்மண்ணில் மனிதத்துவம் நிலையாக இருந்துகொண்டுதான் இருக்கின்றது என்பதை இலகுவில் புரிந்துகொள்ளும் வகையில் யாழ்.தீவுகள் எடுத்து இயம்புகிற நிலையினை வெளிக்காட்டிக் கொண்டிருந்தன. மக்கள் எவ்வித பிரச்சினைகளுமற்ற முறையில் மிகவும் உளப்பூரிப்புடன் [illegible] வரவேற்று உபசரிக்கின்ற மனிதாபிமானம் இங்கு நிறையவே காணப்படுவது சிறப்புக்குரியது எனலாம்.

யாழ்.மண்ணில் ஆங்காங்கு காணப்படுகின்ற யுத்தத் தடயங்களை காண்கின்ற போது உண்மையில் கடந்த முப்பது வருடங்களுக்கு முன்னர் இந்த நகரம் இருந்ததுபோல் காணப்பட்டாலும், அன்றைய தோற்றப்பொலிவு இன்றைய காலத்தில் இல்லை என்பதை நாம் சந்தித்த ஓர் ஆசிரிய நண்பர் கூறினார். கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தங்கள், படுகொலைகள், கெடுபிடிகள் இல்லாதிருந்தால் யாழ்.மண் இதனைவிட முன்னூறு மடங்கு உயர்வானதாக காணப்பட்டிருக்கும் என்கிற ஆதங்கத்தினை வெளிப்படுத்தி; எல்லோருமே இம்மண்ணை சீரழித்துவிட்டார்கள். என்பதை நாசூக்காக கூறினார். யாழ். நூலகத்தின் இன்றைய கம்பீரப்பொலிவு மக்களின் கடந்தகால வாழ்விலிருந்து விடுபட்டு இனபேதமற்ற நிலை ஓங்கி ஒலிக்கும் ஒரு வசந்தகால மகிழ்வை சுவைத்திட தயாராகிவிட்டது போல் மக்களின் போக்கிலிருந்து அறியக் கூடியதாய் இருந்தது.

மேலும், இந்த நிகழ்வில் கலந்து கொண்ட சில பெண்சாரணர்களிடம் இன்றைய நிகழ்வையும், கடந்தகால யுத்த சூழலையும் எவ்வாறு பார்க்கிறீர்கள்? என்று கேட்ட போது ''நாங்கள் இன்று மிகவும் சந்தோஷத்துடன் உலாவருவது, எங்களது இயல்பான நடைமுறை வாழ்க்கையின் மேம்பாட்டிற்கு வழி வகுத்துள்ளதுடன் இனிமேல் இதுபோன்ற யுத்தங்களும், குழி பறிப்புக்களும், கடத்தல், கப்பம் அறவிடல் இல்லாத சமாதான பூமியைத்தான் நாங்கள் நேசிக்கின்றோம். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்குதல் வேண்டும்'' என்ற கோரிக்கையை முன்வைத்தனர் அம்மாணவிகள். இதிலிருந்து யாழ்.மக்களின் சுயமான போக்குக்கு ஒத்துழைக்க வேண்டிய கடப்பாடு, உண்மைத் தன்மையான, சகோதர மனப்பாங்குகள், ஒளிவுமறைவற்ற தெளிவான நடை முறைச்சாத்தியமுள்ள விட்டுக்கொடுப்புக்கள் போன்ற வற்றின் வியாபகத்தன்மையான போக்கு காணப்படல் வேண்டும் என்பது இந்த மக்களின் ஆதங்கங்களாகவும் கொள்ளலாம்.

இன்று நாட்டு மக்கள் அனைவரிடத்திலும் யாழ். மண்ணை தன்கண்களால் பார்த்து நேசிக்கவேண்டும் என்கிற ஒரு மனோ நிலையை தோற்றுவித்துள்ளது என்றே கூறலாம். காரணம் கிராமிய மண்வாசனை கடந்தகாலங்களில் பட்ட துயரங்களால் மீண்டெழுந்த மக்களின் மனோவலிமை, விடா முயற்சி, பக்திப்பரவசம், அறிஞர்கள், கற்றோரினது தாயகப்பூமி இந்த யாழ்.மண் என் பதைப் பார்க்கத்துடிக்கும் ஆவலைத் தூண்டிய விடயங்களாக் கொள்ளலாம் என்பதை அங்கு வந்திருந்த தென் பகுதிவாசி ஒருவர் தெரிவித்தார். யாழ். சுற்றுவட்டத்தில் அதிகமான தேவாலயங்களும், இந்துக் கோயில்களும் நிறைந்து இறைபக்தி காலை ஆறுமணிக்கே எம்மை அமைதியான ஒரு பக்திப் பரவசத்திற்குள் ஆழ்த்தும் நிலையினை தோற்றிவித்திருந்தன.

(16ஆம் பக்கம் பார்க்க)

ஆசிரியர் எஸ்.எல்.மன்சூர்
(கல்விமாணி),
அட்டாளைச்சேனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் வழி எது?



புத்தர் பெருமான் ஒருமுறை தன் சீடர்களை நோக்கி, ''ஒரு மனிதனின் வாழ்நாள் எவ்வளவு காலம்?'' எனக் கேட்டார்.

ஒரு சீடர் எழுந்து ''அறுபது'' என்றார்.

வேறொருவர்,''ஐம்பது ஆண்டுகள் கூட இல்லையா'' எனத் திகைத்தனர். சில விநாடிகள் அமைதியாக இருந்த புத்தர் ''ஒரே ஒரு மூச்சு'' என்றார்.

''வெறும் மூச்சு விடும் நேரம்தானா?'' என்று கேட்டார் ஒரு சீடர்.

''அப்படியல்ல. வாழ்வு, ஒரு கணமன்று. ஆனால் ஒவ்வொரு கணமாக வாழ வேண்டும். ஒவ்வொரு கணப்பொழுதிலும் முழுமையாக வாழ வேண்டும். கணம், கணமாக வாழ வேண்டும்'' என்றார் புத்தர்.

சிலர் நேற்றில் வாழ்கிறார்கள். நேற்றைய நினைவில் மூழ்கி இறந்த காலத்தில் வாழ்கிறார்கள். சிலர் அறியப்படாத எதிர்காலத்தில், எதிர்காலக் கனவில் எதிர்கால ஏக்கத்தில் ஒரு தெளிவில்லாமல் வாழ்கிறார்கள். இவ்வாறு வாழப் பழகிக் கொண்டவர்கள், நிகழ் காலத்தை இழந்து விடுகிறார்கள்.

ஒரு மனிதன் இறந்த காலச் சோகங்களையும் ஏமாற்றங்களையும் நிராசைகளையும் திரும்பத் திரும்ப எண்ணி மனம் வெதும்பினால், நிகழ்காலம் எவ்வாறு மகிழ்ச்சியாக இருக்கும்? இறந்த கால நிகழ்வுகளை நீங்கள் எத்தனை முறை எண்ணிப் பார்த்தாலும் மாற்ற இயலுமா?

*(தகவல் : வாழ்தல் ஒரு கலை)*

---

அந்தக்கிராமத்தில் எந்த வீட்டிலாவது சண்டை, சச்சரவுகள் ஏற்பட்டால் உடனே அறிவுரை சொல்ல வருகிறவர்கள், ''அந்த வீட்டைப் பார். அவர்கள் எவ்வளவு ஒற்றுமையாக வாழ்கிறார்கள்! அந்தப் பெண்மணி ஒரு நாளாவது தன் கணவருடன் சண்டை போட்டிருக்கிறாரா? அவர்களைப் போல அன்பாக, பொறுமையாக வாழ நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்!'' என்பார்கள். அந்த உதாரணத் தம்பதிக்கு முப்பதாவது திருமண நாள் வந்தது. கிராம மக்கள் எல்லோரும் சேர்ந்து விழா எடுக்க முடிவு செய்தனர். பக்கத்து ஊர்களில் இருந்து எல்லாம் நிறையப் பேர் விழாவிற்கு வந்தனர்.



# இவர்களா இலட்சியத் தம்பதிகள்?

அப்படி வந்தவர்களில் ஒரு மூதாட்டி இந்த உதாரணத் தம்பதியிடம் பேசினார். பிறகு அந்தப் பெண்மணியிடம் எல்லோர் சார்பிலும் அவர்கேட்டார். ''கல்யாணத்திற்கு பிறகு நீங்கள் ஒரு தடவைகூட சண்டைபோட்டுக் கொள்ளாததன் இரகசியம் என்ன?''

அந்த உதாரண மனைவி சொன்னார். ''இதில் பெரிய ரகசியம் எதுவுமில்லை.திருமணம் முடிந்த மூன்றாவது நாள் தேனிலவுக்குப் போனோம். எங்களுடைய பெட்டி, படுக்கை, உணவு மூட்டைகளைச் சுமக்க ஒரு கழுதையை உடன் கூட்டிச்சென்றோம். வழியில் அந்தக் கழுதை ஓரிடத்தில் இடறிவிழுந்தது. அதனால் மூட்டைகள் சிதறின. என் கணவருக்குக் கோபம் வந்தது. ஓடிச் சென்று கழுதையின் ஒரு காதைத் திருகி, '' இது முதல் எச்சரிக்கை. இனிக்கவனமாக இருக்க வேண்டும்'' என்றார்.

கீழே விழுந்த மூட்டைகளை மீண்டும் கழுதையின் முதுகில் ஏற்றிவிட்டு நாங்கள் பயணம் தொடர்ந்தோம். கொஞ்ச தூரம்தான் போயிருக்கும் மீண்டும் ஒரு கல்லில் தடுக்கி கழுதை உருண்டு விழுந்தது. இந்தத் தடவை என் கணவருக்கு கோபம் அதிகமானது. கழுதையின் இரண்டு காதுகளையும் பிடித்துத் திருகினார். '' இது இரண்டாவது எச்சரிக்கை. இனியும் நீ விழுந்தால் அவ்வளவுதான்!'' என்றார் உரத்த குரலில்.

பயணம் தொடர்ந்தது. நாங்கள் செல்ல வேண்டிய மலைவாசல் ஸ்தலத்தை அடைய மூன்று மலைகள் மீது ஏற வேண்டும். இரண்டு மலைகளைத் தாண்டி விட்டோம். மூன்றாவது மலையின் பாதித்தூரம் ஏறியபோது கழுதை சோர்ந்து விழுந்துவிட்டது. என் கணவரால் கோபத்தை அடக்க முடியவில்லை. பொக்கெட்டில் இருந்த துப்பாக்கியை எடுத்து கழுதையைக் குறி பார்த்து சுட்டுத்தள்ளினார். மலைச்சரிவில் சுருண்டு விழுந்து செத்தது அது.

என்னால இதைத் தாங்கிக் கொள்ளமுடியவில்லை.''ஐயோ! நீங்கள் என்ன செய்து விட்டுவிட்டீர்கள்? அது வாயில்லாத ஜீவன், நீங்கள் சொன்னது அதற்கு எங்கே புரிந்திருக்கும்? இப்படியா கொல்வது?'' என்று கதறினேன். அவர் கோபமாக என் அருகே வந்தார். என் ஒற்றைக் காதைப்பிடித்துத் திருகி, '' இது முதல் எச்சரிக்கை நீ கவனமாக இருக்கவேண்டும். தெரிந்ததா?'' என்றார்.

அவ்வளவு தான் கழுதைக்கு ஏற்பட்ட கதி சட்டென என் நினைவுக்கு வந்தது. இரண்டு காதுகளையும் பிடித்துத் திருகும் நிலைக்குக் கூட நான் வரக்கூடாது என்று நினைத்தேன். வாயை மூடிக்கொண்டு விட்டேன். இதுதான் என் வாழ்க்கை வெற்றியின் ரகசியம்'' என்று பதில் சொன்னார் அவர்.

(சொன்னவர்: மாதா அமிர்தானந்தமயி)

---

ஓர் உதவியைப் பெற்றவர், உதவி செய்தவர்க்கு நன்றி தெரிவிப்பது மிகவும் தேவையான ஒன்றாகும். இதனால் உதவியவர் மனம் மகிழும். உதவியைப் பெற்றுக் கொண்டவர்க்கும் நன்றி சொன்னதும் மனம் சற்று இலேசாகும். தந்தவர், கொண்டவர் இருவர்க்கும், நன்றியை வார்த்தையால் தெரிவித்த பின், நட்பு பலமாகும். ஒன்றை ஒருவரிடம் பெற்றவர்கள் நன்றியைத் தெரிவிப்பதைக் கடமையாகக் கொள்ள வேண்டும்.

ஆங்கிலேயர்களின் நாகரிகம்,..... என்று கூறுவதாகும். சிறுகுழந்தை முதல் இதைப் பழக்குகிறார்கள்.

# நன்றியைக் காட்டவும் வேண்டும்

நம்மவர்கள் உதவியைப் பெறும்போது மனம் நெகிழ்கிறார்கள். நெஞ்சில் நன்றி உணர்வு பொங்குகிறது. எந்நாளும் அவரிடம் நன்றியோடு நடக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கிறார்கள். ஆனால் அந்த நன்றியை வார்த்தைகளால் அல்லது செய்கையால் வெளியிடத் தெரியாமல் இருந்துவிடுகிறார்கள்.

புலவர் ... சண்முகவடிவேல் ஒரு கூட்டத்தில் தெரிவித்த செய்தி இது. ''நான் முதன் முதல் ஆசிரியர் பணிக்குச் சென்றபோது நடந்தது இது. நகரமன்றத்தில் தலைவராக இருந்தவர் எனக்காகப் பரிந்து பேசி வேலைவாங்கிக் கொடுத்தார். இன்னொரு நண்பரும் விண்ணப்பித்திருந்தார். அவருக்குத்தர வேண்டாம் என்றும் எனக்குத்தான் தரவேண்டும் என்றும் வாதாடியவர் தலைவர் ஆணையர் அந்த நண்பருக்காக வாதாடினார். சமரசமாக இன்னொரு இடம் உருவாக்கப்பட்டு எங்கள் இருவருக்கும் வேலை கிடைத்தது.



எனக்கு நியமன ஆணை கிடைத்ததும் தலைவரிடம் நன்றி சொல்லப் போனேன். அங்கு ஒரு பெரிய அதிசயம். நடந்து கொண்டிருந்தது. தலைவர் எந்த நண்பருக்கு எதிராகவாதாடினாரோ, அந்த நண்பர் தலைவர் காலில் விழுந்து வணங்கி, ஒரு தட்டு நிறையப் பழங்களை வைத்து அவரிடம் தந்து கொண்டிருந்தார். எனக்கு வெட்கமாகப் போய் விட்டது. நான் வெறுங்கையுடன் போயிருந்தேன். உடனே திரும்பி விட்டே பழங்கள்வாங்கிவரலாம் என்று தலைவர் என்னை அழைத்தார் போனேன். ''எங்கே போகிறாய்? பழம் வாங்கத் தானே? இனிமேல் பழம் வாங்கி வந்தால் நீதான் எடுத்துப் போக வேண்டும். நான் வாங்கமாட்டேன். அவரு ஏன் என்னை வந்து பார்த்துவிட்டுப் போறாரு? அவருக்குத் தெரியாதா, நான் அவருக்காக சிபாரிசு செய்யவில்லை என்று! இனிமேலும் நான் இடைஞ்சலா இருக்கக்கூடாது இந்தக் கும்பிடு. நான் உன்னைப் பற்றி நல்லாத் தெரிஞ்சவன். எனக்கு நீ பழம் கிழம் தரலேனாலும் உன்னோட மனசு எனக்குத் தெரியும். ஆனா வாழ்க்கையில் நீ கற்க வேண்டிய பாடம் இது யாராவது உணர்ச்சியைக் காட்டுற மாதிரி ஏதாவது செய்யணும். ஒரு எலுமிச்சம் பழமாவது கொடுத்து நன்றின்னு ஒரு வார்த்தை யாவது சொல்லுபோ'' என்றார்.

இது ஒரு நல்ல பாடம் நன்றி உடையவராய் இருக்கிறோம் என்பது அவருக்கு எப்படித் தெரியும்? வாயால் சொல்ல வேண்டும். எளிய அன்பளிப்புகளால் காட்ட வேண்டும் . இது தான் நல்ல மனித இயல்பு முன்னேறவும் நல்லவழி.

*(தகவல்: காந்திமதி).*

---

# குழந்தை மனம்




பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்ளும் திறமை வாய்ந்த ஒரு மாணவியை ஆசிரியை போட்டிக்கு அழைத்துச் சென்றார். அந்த மாணவிக்கு ஒரு போட்டியில் தங்கப் பதக்கம், இன்னொன்றில் வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. மூன்றாவது போட்டியில் அம்மாணவி ஜெயிக்கும் வாய்ப்புக்கள் குறைவாகத் தோன்றியதால் ஆசிரியை அந்த மாணவியை ''இது போதுமே'' என்றார். தோற்றால் மாணவிக்கு வருத்தம் ஏற்படக்கூடாது என்று ஆசிரியை நினைத்தார். ஆனால் அந்த மாணவி விடாப்பிடியாகப் போட்டியிட்டாள். ஆசிரியை நினைத்தபடி ஒரு தாமிரப் பதக்கம் மட்டுமே கிடைத்தது. ஆசிரியை மாணவியைச் சமாதானப்படுத்த எண்ணி அவள் அருகில் சென்றால், அந்த மாணவி மிகுந்த மகிழ்ச்சியுடன் ''டீச்சர் எனக்கு இதுதான் வேண்டியிருந்தது. இப்போது எனக்கு இது கிடைத்து விட்டது. என்னிடம் மூன்றுவகைப் பதக்கங்களும் இருக்கின்றன பார்த்தீர்களா?'' என்று பெருமைப்பட்டது. வாழ்க்கையில் எப்படி சந்தோஷப்படுவது என்று நமக்குக் குழந்தைகள் கற்றுக் கொடுக்கிறார்கள்.

சொன்னவர் - நிவேதிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொழும்பு வணிகவள நிலையம்

அண்மையில் நடத்திய உயர்தரப் பரீட்சை - பங்குனி, 2010

## பொருளியல் I — பகுதி - I

**SPECIAL GUIDE FOR 2010 A/L ARTS STUDENTS**

* எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.
* வினா 01-20 வரையான வினாக்களிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்க.

01. பின்வரும் கூற்றுக்கள் தொடர்பாக சரியானதைத் தெரிக.
   A - யூரோ நாணயக்கூட்டில் இங்கிலாந்து இணையவில்லை.
   B - யூரோ நாணயக்கூட்டில் இங்கிலாந்து இணைந்தால் இக்கூட்டு மேலும் பலமடையும்.
   C - திட்டமிடல் முறையை விட சந்தை முறைமை சிறந்தது.
   1) A - நேர்ப்பொருளியல். 2) B, C நேர்ப்பொருளியல்.
   3) A - நியமப்பொருளியல். 4) A, C - நேர்ப்பொருளியல்.
   4) C - நியமப்பொருளியல்.

02. பின்வருவனவற்றுள் எது ஒருநாட்டின் உற்பத்தி சாத்தியத்தை அதிகரிப்பதறதகான காரணியன்று?
   1) ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு.
   2) தொழிற்தேர்ச்சி உற்பத்தி செலவை குறைவடையச் செய்தல்.
   3) வேலை செய்யும் சனத்தொகையின் அளவு அதிகரித்தல்.
   4) எழுத்தறிவு வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு.
   5) உற்பத்தி செயற்பாட்டில் முகாரம வினைத்திறனடைந்தமை.

03. திட்டமிடல் பொருளாதாரத்தில் விலையின் தொழிற்பாடாக கருதப்படாதது?
   1) கேள்வி நிரம்பலை சமப்படுத்தி உற்பத்தியின் குறைமிகையை நீக்கல்.
   2) நுகர்வோர் கேள்வியை ஏற்படுத்த
   3) தேசிய உற்பத்தியை மதிப்பிட.
   4) பொருளாதரைத்தை வழிநடத்த. 5) உற்பத்தி செலவை பெற.


04. குறித்த நிறுவனத்தின் உற்பத்தியொன்றின் கேள்விக்கான விலை நெகிழ்ச்சி - 2 இதன் விலை 10 வீதத்தால் வீழ்ச்சியடையின்,
   1) மொத்த வருமானம் 20 வீதத்தால் குறைவடையும்.
   2) விற்பனையளவு 10 வீதத்தால் அதிகரிக்கும்.
   3) விற்பனையளவு 20 வீதத்தால் குறைவடையும்.
   4) மொத்த வருமானம் 20 வீதத்தால் அதிகரிக்கும்.
   5) மேற்கூறிய எவையுமில்லை.

05. பின்வரும் பண்புகளை கொண்டமைந்த சந்தையமைப்பை தெரிவுசெய்க.
   A P=AR
   B போட்டி விளம்பரம் காணப்படல்.
   C விலை வேறாக்கம் இடம்பெறாது.
   D வழங்குனரே விலையைத் தீர்மானித்தல். E AR=MR
   1) தனியுரிமைச் சந்தை. 2) கொள்வனவாளன் சந்தை.
   3) சிலருரிமைச் சந்தை. 4) நிறைப்போடடிச் சந்தை.
   5) தனியுரிமைப்போட்டிச் சந்தை.

06. தனியுரிமைப்போட்டிச் சந்தையொன்றின் விவரங்கள் தரப்பட்டுள்ளன.


| Q | AR | AC |
|---|---|---|
| 1 | 6 | 10 |
| 2 | 7 | 10 |
| 3 | 8 | 10 |
| 4 | 10 | 10 |

   சமநிலை வெளியீட்டு மட்டத்தில் பண்டத்தின் விலை யாது?
   1) 12 2) 7 3) 10 4) 8 5) 6

07. 


   அருகில் உள்ள வரைபின்படி 5 ரூபா விலையில் நெகிழ்ச்சிக் குணகம்,
   1) 0.75
   2) 0.72
   3) 0.71
   4) 1.21
   5) 1.25

08. சிறப்புத் தேர்ச்சியற்ற ஊழியமொன்று பெறும் காரணி வருமானத்தை குறிக்கும் வரைபடம்,




09. பின்வரும் கூற்றுக்களுள் பிழையானதை தெரிக.
   1) சாதாரண பண்டம் நேர்க்கணிய வரமான நெகிழ்ச்சிக் கொண்டது.
   2) ஆடம்பரப் பண்டம் ஒன்றுக்குகூடிய வருமான நெகிழ்ச்சிக் கொண்டது.
   3) கிபன் பண்டத்தின் விலை வீழ்ச்சியின் பதிலீட்டு விளைவு எதிர்கணியமாய் இருக்கும்.
   4) இழிவு பண்டங்களின் விலை வீழ்ச்சியின் வருமான விளைவு எதிர்கணியமாய் இருக்கும்.
   5) ஒரு சாதாரண பண்டத்தின் விலை வீழ்ச்சியின் வருமான விளைவு நேர்க்கணியமாக இருக்கும்.

10. பின்வருவனவற்றுள் சமூகச்செலவு அல்லாதது?
   1) மது பாவனையால் ஏற்படும் வன்முறை.
   2) வேலையின்மையமால் ஏற்படும் மனஅழுத்தம்.
   3) வாகன நெரிசலால் ஏற்படும் விபத்து.
   4) நிறுவன வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட நட்ட ஈடு.
   5) மேலதிக நேர வேலையால் ஏற்பட்ட மன அழுத்தம்.

11. கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றின் தரவுகள் (BR)

| | |
|---|---|
| தன்னிச்சையான நுகர்வு | 100 |
| தன்னிச்சையான முதலீடு | 50 |
| வருமான மாற்றத்தால் நுகர்வு மாற்ற வீதம் | 80% |

   தன்னிச்சையான மொத்த செலவீடு யாது?
   1) 750. B.R 2) 150B.R 3) 100B.R 4) 80B.R 50 B.R

12. நிறைதொழில் மட்ட வரமானம்; 900 B.R அப்பொருளாதாரத்தில் சுருக்க/ வீக்க இடைவெளிகளிகள் காணப்படகூடாது. எனின், முதலீட்டில் ஏற்படுத்த வேண்டிய மாற்றத்தின் அளவு என்ன?
   1) 150B.R 2) 750B.R 3) 50B.R 4) 30B.R 5) 100B.R

13. குறித்த உற்பத்தி தொடர்பாக அரசு அனுமதிபத்திரமுறை கோட்டாமுறை என்பவற்றை அறிமுகப்படுத்துகிறது இதற்கான காரணம்,
   1) குறித்த உற்பத்தியில் நேர்க்கணிய வெளிவாரியை ஊக்கப்படுத்த.
   2) குறித்த உற்பத்தியில் எதிர்கணிய வெளிவாரியைக் கட்டுப்படுத்த.
   3) குறித்த உற்பத்தியில் நேர்கணிய வெளிவாரியைக் கட்டுப்படுத்த.
   4) குறித்த உற்பத்தியில் எதிர்கணிய வெளிவாரியை கட்டுப்படுத்த.
   5) குறித்த உற்பத்தி தொடர்பான நுகர்வின் நேர்க்கணிய வெளிவாரியை ஊக்கப்படுத்த.

14. கற்பனையான பொருளாதாரம் ஒன்றின் தரவுகள் (B.R)

| | |
|---|---|
| வாடகை வருமானம் | 2300 |
| முயற்சியாண்மை வருவாய் | 600 |
| பொதுப்படுகடன் மீடீதடான வட்டி வருவாய் | 1000 |
| புலமைச்சொத்து வருவாய் | 300 |
| சந்தைவிலையில் GDP | 12350 |
| தொழில் முறை வருவாய் | 4,200 |
| ஏனைய வட்டி வருவாய் | 750 |
| பெறுமானத் தேய்வு | 100 |

   இதில் மொத்த உள்நாட்டு வருமானம்?
   1) 12,500 2) 11,150 3) 12,250
   4) 18,850 5) 11,250

15. கீழேதரப்பட்டுள்ளவற்றுள் செலவுசெய்வதற்கு தனிப்பட்ட வருமானத்தினை (disposable personal incom) குறிப்பிடுவது எது?
   1) அரசாங்கத்தினால் சேகரிக்கப்பட்ட மொத்த வரி.
   2) ஊழியரொருவரினால் பெறப்பட்ட ஊழியம்.
   3) ஒருவரின் தனிப்பட்ட வருமானத்திலிருந்து வரிகளை கழித்த தொகை.
   4) ஒருவரின் நிதி மற்றும் உருவச் சொத்துக்களின் பெறுமதி.

16. எளிய பொருளாதாரமொன்றில் C= 100+ 0.8y என்க. அப்பொருளாதாரத்தில் முதலீட்டில் ஏற்படும் 200M.R அதிகரிப்பு காரணமாக பெருக்கி விளைவின் மூன்றாம் சுற்றில் நுகர்வு சேமிப்பு என்பவற்றில் ஏற்படும் மொத்த மாற்றத்தைக் கணிப்பிடுக.
   1) 102.4M.R 2) 25.6M.R 3) 600M.R 4) 200M.R 5) 128M.R

17. ஒரு நாட்டின் மொத்த தேசிய வருமானமும் ஆள்வீத வருமானமும் வேறுபட்டு காணப்படுகிறது. இதற்கான காரணமாக அமையாதது,
   1) குடித்தன மாற்றல்கள். 2) வியாபார சேமிப்பு.
   3) இலாபவரி. 4) குடித்தனவரி.
   5) சமூகப்பாதுகாப்பு உதவுதொகை.

18. குறித்த பொருளாதாரமொன்றின் C=0.9y எனின், மாற்றல் பெருக்கி, சமனிலைப் பாதீட்டுப் பெருக்கி என்பன முறையே,
   1) 0.9, 0.1 2) 9, 1, 3) -1, 0.9 4) -9, -10 5) -0.9, -0.1

19. குறித்த நாட்டின் பொருளாதார வளர்ச்சியுடன் பொருந்தாத காரணி யாது?
   1) ஊழியர் நட்ட ஈட்டு அளவு அதிகரிக்கும்.
   2) நாட்டின் சேமிப்பு விகிதம் அதிகரிக்கும்.
   3) பெறமதிசேர் வரியின் அளவு அதிகரிக்கும்.
   4) மெய்வருமான அதிகரிப்பு.
   5) உற்பத்தியினளவு அதிகரிப்பு.

20. சச்சின் ஒரு தொழில்முறை கிரிக்கட் விளையாட்டு வீரர். இவர் தான் தொடர்ந்து கிரிக்கட் விளையாட தேவையான வருவாயைவிட மேலதிகமாக உழைக்கிறார். இம்மேலதிக வருவாய் அழைக்கப்படுவது,
   1) கூட்டுவருவாய். 2) மாற்றல் வருவாய்.
   3) பெறுமதிசேர் வருவாய். 4) சிக்கன வாடகை.
   5) சந்தர்ப்பச்செலவு.

**நன்றி: கொழும்பு வணிக வள நிலையம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு வணிகவள நிலையம்

அண்மையில் நடத்திய உயர்தரப் பரீட்சை - பங்குனி, 2010

## பொருளியல் II | பகுதி - I

01. ''வெளிநின்ற நாணயம்'' என்பதனைக் குறிக்கும் தொகுதி பின்வருவனவற்றுள் எது ?
    1) ஒதுக்குப்பணமும் வணிக வங்கிகளிடம் உள்ள சேமிப்பு தவணை வைப்புக்களும்.
    2) பொதுமக்களிடம் உள்ள பணமும் வர்த்தகவங்கிகளிடமுள்ளதும்.
    3) புழக்கப்பணமும் போலிப்பணமும்.
    4) வணிக வங்கிகளிமுள்ள பணமும் அரசிடமுள்ள பணமும்.
    5) நாட்டுக்கு வெளியில் வங்கிகளினால் வைப்பிலிடப்பட்டுள்ள பணம்.

02. பின்வருவனவற்றுள் மத்தமிய வங்கியின் திறந்தச் சந்தை நடவடிக்கையில் உள்ளடங்காதது,
    1) மீள் கொள்வனவு வீதமும் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதமும்.
    2) கடன் அழிப்புக்களும் ஆலோசனை வழங்குதலும்.
    3) திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதறதகான நாளாந்த ஏலம்.
    4) வட்டி வீச்சு வரையறையினுள் துணைநில் வசதிகள்.
    5) உடனடி கொடுக்கல் வாங்கல்கள்.

03. குறித்த பொருளாதாரத்தில் வங்கிக் கட்டமைப்பில் 5 வர்த்தக வங்கிகள் மாத்திரமே தொழிற்படுகின்றன எனக் கருதுக. இப்பொருளாதாரத்தில் வைப்புக்களுக்கும் ஒதுக்குகளுக்குமான விகிதம் 0.20 ஆகும். தற்போது அரசு சட்டப்பண வெளியீட்டினை அதிகரித்ததனால் இவ் வங்கிகளொன்றில் 100 ரூபாப்படியான புதிய வைப்பு உருவாகின்றது எனின், இவ்வங்கிக்கட்டமைப்பு உருவாக்கக் கூடிய வைப்புக்களின் மொத்த அளவு,
    1) ரூபா 250 2) ரூபா 400 3) ரூபா 1,600
    4) ரூபா 2,000 5) ரூபா 2,500

04. பிற்படுத்தப்பட்டதொரு கடன் சாதனமாக பணம் தொழிற்படுதல் பின்வரும் எவ் அடிப்படையில் முக்கியமானதாக அமைகின்றது,
    1) தொழில்பிரிப்பினையும் சிறப்புத் தேர்ச்சியினையும் அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி முறைகள் தோற்றமெடுத்தன.
    2) பண முறையினை அடிப்படையாகக் கொண்ட சந்தை முறைகள் தோற்றம் எடுத்தன.
    3) எதிர்கால பணவீக்கம் தொடர்பிலான எதிர்வுகூறல்களை செய்யமுடிந்தமை.
    4) பொருளாதார நடவடிக்கைகள் துரிதமடைந்தன.
    5) குறுங்கால நீண்ட கால கடன் சந்தைகள் தோற்றம் எடுத்தன.

05. இலங்கை மத்திய வங்கி அனவீடுகளுக்கமைய 2008 ஆம் வருடம் இலங்கையின் பணவீக்க வீதம் என்னவாயிருந்தது,
    1) 22.6% 2) 15.8% 3) 21.7%
    4) 9.4% 5) 18.4%


06. ''வங்கித் தொழில் ஆற்றல் சுட்டெண்'' (Camels) என்றால் என்ன?
    1) வணிக வங்கிகளினது கொடுகடன் ஆற்றலினை அறவிடுவதற்கான ஒரு சுட்டெண்.
    2) நிதியியல் முறையினது உறுதித்தன்மையினை அளறவிடுவதற்கான ஒரு சுட்டெண்.
    3) இது மத்திய வங்கியின் கொள்கை வீதங்களின் போக்கினை அளவிடுவதற் கான ஒரு சுண்டெண்.
    4) விலைச்சுட்டெண்களின் ஒரு வகுதியாகும்.
    5) அனைத்துச் சுட்டெண்களினதும் நிறையிடப்பட்டதொரு சராசரிச் சுடடெண் ஆகும்.

07. நாணயக்கணிய கோட்பாட்டினை மிகச் சரியாக விரையறுப்பது,
    1) பண அளவு × பண சுழற்சி = விலை மட்டம் × வெளியீடு.
    2) பண அளவு × பண கேள்வி = விலை மட்டம் × வெளியீடு.
    3) பண அளவு × விலைமட்டம் = பணக் கேள்வி × விலைமட்டம்.
    4) பண அளவு × விலைமட்டம் = சுழற்சி வேகம் × பணக் கேள்வி.
    5) பண அளவு × சுழற்சி வேகம் = விலைமட்டம் × பணக் கேள்வி.

08. பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் விலைக்கூட்டுக்களில் வரவு ஏற்படுகின்றது,
    1) அரச பிணைகள் விற்கப்படும்போது.
    2) ஒதுக்கு வீதத்தினை குறைக்கும்போது.
    3) வட்டி வீதத்தினை உயர்த்தும்போது.
    4) தரகு கட்டணங்கள் அதிகரிக்கும்போது.
    5) வரி வீதங்களை உயர்த்தும்போது.

09. கேள்வியினால் தூண்டப்பட்ட பணவீக்கம் என்பது,
    1) தன்னிச்சையான ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கும்போது.
    2) தன்னிச்சையான முதலீட்டு மட்டம் அதிகரிக்கும்போது.
    3) தன்னிச்சையான இறக்குமதி மட்டம் அதகரிக்கும்போது.
    4) தன்னிச்சையான நுகர்வு மட்டம் அதிகரிக்கும்போது.
    5) தன்னிச்சையான நுகர்வு வீதம் அதிகரிக்கும்போது.

10. தரப்பட்டுள்ள உற்பத்திச் சாத்திய எல்லைகளாவன ஜப்பான் (JJ) கொரியா (KK) ஆகிய இரு நாடுகளும் சம அளவு உள்ளீடுகளைப் பயன்படுத்தும்போது உற்பத்தி செய்யக்கூடிய துணி, அரிசி என்பவற்றின் வேறுபட்ட அளவுகளாகும். இவ்விரு நாடுகளுக்குமிடையேயும் போக்குவரத்துச் செலவுகளோ வர்த்தகத் தடைகளோ இல்லை எனவும் கருதுக. எனின், பின்வரும் எக்கூற்று உண்மையானது,




    1) துணி, அரிசி ஆகிய இருப்பண்ட உற்பத்தியலும் ஜப்பான் ஒப்பீட்டு நன்மையினைப் பெற்றுள்ளது.
    2) துணி, அரிசி ஆகிய இரு பண்ட உற்பத்தியிலும் கொரியா ஒப்பீட்டு நன்மையை பெற்றுள்ளது.
    3) துணி உற்பத்தியில் மட்டும் ஜப்பான் முழு நன்மையினைப் பெற்றுள்ளது.
    4) இரு நாடுகளும் வர்த்தகத்தில் ஈடுப்படுவதற்கு வாய்ப்பு இல்லை.
    5) இரு நாடுகளும் வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் நன்மை பெற வாய்ப்பு காணப்படுகின்றது.

11. நாடுகளுக்கிடையேயான வர்த்தகத்தின்போது ஒப்பீட்டு நலனைத் தீர்மானிப்பதில் பின்வரும் எக்காரணி கருத்தில்கொள்ளப்படுவதில்லை.
    1) தொழில்நுட்பம். 2) அமையச்செலவுகள்.
    3) வரிமுறைமைகள். 4) நாடுகளின் பருமன்.
    5) சந்தை வியூகங்கள்.

12. ஐக்கிய அமெரிக்காவில் ஓர் ஊழிய மணித்தியாலத்திற்கான கூலி 6US$ எனவும், பிரித்தானியாவில் ஓர் ஊழிய மணித்தியாலத்திற்கான கூலி 1 ஸ்ரேலின் பவுன் (£) எனவும் கருதுக. நாணயமாற்று விகிதம் (1£=6$) ஓர் ஊழிய மணித்தியாலயத் தின்போது அமெரிக்காவும் பிரிட்டனும் முறையே 6kg, 4kg கோதுமையினை உற்பத்தி செய்கின்றன எனவும் கருதுக. எனின், இரு நாடுகளிலும் ஒரு கிலோ கோதுமை மாவின் விலை அமெரிக்க டொலர்களில் என்னவாயிருக்கும்?

| | அமெரிக்கா | பிரித்தானியா | | அமெரிக்கா | பிரித்தானியா |
|---|---|---|---|---|---|
| 1) | 1.00$ | 2$ | 2) | 1.5$ | 1.00$ |
| 3) | 1.00$ | 0.50$ | 4) | 0.50$ | 1.00$ |
| 5) | 1.00$ | 1.5$ | | | |

13. சுதந்திரமான வர்த்தகக் கொள்கையினை ஒரு வளர்முக நாடு பின்பற்றுவதிலுள்ள அனுகூலம்,
    1) உள்நாட்டில் புதிய கைத்தொழிலில் முதலீடுகள் பெருமளவில் உருவாகுதல்.
    2) வர்த்தக ரீதியில் நாடுகள் ஒன்றிலொன்று தங்கியிருத்தல்.
    3) சென்மதி நிலுவைப் பிரச்சினைக்கு தீர்வு காண முடிதல்.
    4) போட்டியிடல்திறன் அதிகரிப்பதால் உள்நாட்டில் உற்பத்தி திறன் அதிகரித்தல்.
    5) வெளிநாட்டுக் கடன் சுமை மட்டம் குறைவடைதல்.

14. ஒரு ஸ்டேர்லின் பவுன் = 200 ரூபாய் எனக் கருதுக. தற்போது ரூபாய் 20% பெறுமதி இறக்கம் செய்யப்படின் புதிய நாணயமாற்று என்னவாயிருக்கும்?
    1) 240 ரூ. 2) 160 ரூ. 3) 250 ரூ.
    4) 150 ரூ. 5) 220ரூ.

15. பின்வருவனவற்றுள் பொருளாதார வளர்ச்சி மீது தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய காரணி எது?
    1) சனத்தொகை அதிகரிப்பு.
    2) காரணிகளின் வினைத்திறன். 3) உற்பத்தி மானியங்கள்.
    4) பணநிரம்பலிலான அதிகரிப்பு. 5) பிறநாட்டுக் கொடைகள்.

16. 1977-2007 வரையான காலப்பகுதியில் இலங்கையில் அதி உயர் பொருளாதார வளர்ச்சி பதிவான இரு வருடங்கள்,
    1) 1980-1990 2) 1977-2006 3) 1988-2008
    4) 1977-1996 5) 2001-2005

17. உலகில் இன்று விரைந்து வளர்ச்சியடையும் பொரளாதாரங்கள் என இனங்காணப்பட்டுள்ள நாடுகள் தொகுதி,
    1) அமெரிக்காவும், சீனாவும். 2) ஜப்பானும், சிங்கப்பூரும்.
    3) இந்தியாவும் இலங்கையும். 4) ரஷ்யாவும்,சீனாவும்.
    5) சீனாவும், இந்தியாவும்.

18. இன்றைய உலகில் அபிவிருத்தியினை பாதிக்கும் மிக முதனடமைக் காரணி சூழல் மாசடைதல் ஆகும். உலக சூழல் மீது பெருமளவு எதிர் அழுத்தத்தினை ஏற்படுத்தும் முதன்மை நாடு,
    1) சீனா. 2) அமெரிக்கா.
    3) ஐரோப்பிய யூனியன். 4) இந்தியா. 5) ஜப்பான்.

19. மனித வறுமைக் குறிக்காட்டியானது பின்வருவனவற்றுள் எதனை உள்ளடக்கவில்லை.
    1) சிறுவர்களுக்கிடையே போஷாக்கின்மை.
    2) வளர்ந்தோர்களுக்கிடையிலான எழுத்தறிவு மட்டம்.
    3) வளர்ந்தோருக்கிடையே எழுத்தறிவின்மை.
    4) குறித்த வயதை அடையும் முன்னர் உயிரிழப்பதற்கு உட்படுவோர் எண்ணிக்கை.
    5) அடிப்படை சுகாதார தேவைகளை நிறைவு செய்ய முடியாதோர்.

20. கீழே தரப்பட்டுள்ள தரவுகள் ஒரு நாட்டின் தேசிய வருமான பொருளாதார வளர்ச்சி, சனத்தொகை வளர்ச்சி, வர்த்தகமாற்று விகிதம் தொடர்பான கற்பிதமான தரவுகளாகும். இத்தரவுகளிலிருந்து நீர் பெறக்கூடிய சரியான முடிவு எது?

| ஆண்டு | மெய் உ.உ | பொருளாதார வளர்ச்சி% | சனத்தொகை வளர்ச்சி% | வர்த்தகமாற்று விகிதம் |
|---|---|---|---|---|
| 01 | 200 | 5.9 | 1.2 | 115 |
| 02 | 220 | 5.4 | 1.1 | 96 |

    1) ஆண்டு ஒன்றில் உண்மைத் தேசிய வருமானம் அதிகரித்துள்ளதுடன் ஆள்வீத வருமான மட்டமும் அதிகரித்துள்ளது.
    2) ஆண்டு ஒன்றிலும் ஆண்டு இரண்டிலும் உண்மைத் தேசிய வருமான மட்டம் அதிகரித்துள்ளது.
    3) ஆண்டு ஒன்றில் உண்மைத் தேசிய வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் ஆண்டு இரண்டில் ஆள்வீத வருமான வளர்ச்சி வீழ்ச்சியடைந்துள்ளது.
    4) ஆண்டு இரண்டில் உண்மைத் தேசிய வருமானமும் ஆள்வீத வருமான வளர்ச்சியும் வீழ்ச்சியடைந்துள்ளது.
    5) இரண்டு ஆண்டுகளிலும் உண்மைத் தேசிய வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது.

(நிறைவுற்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



நடந்த நல்ல விடயம் ஒன்றை நினைத்து சந்தோஷம் அடைவீர்கள். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டு. நடக்குமோ, நடக்காதோ என நினைத்த காரியம் ஒன்று நல்ல விதமாக நடந்து விடலாம். நம்பிக்கைக்கு உரியவரிடம் உங்களின் பிரச்சினை ஒன்றைச் சொல்லி ஆலோசனை கேட்பீர்கள். உதிரி வரவுகளைப் பெறலாம்.

### இடபம்



நண்பர்களுக்காகச் சில உதவிகளைச் செய்வீர்கள். பெற்றோர் வழியில் மனஸ்தாபம் வராமல் இருக்க விட்டுக்கொடுத்துச் செல்ல வேண்டும். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. கலைஞர்கள் மகிழ்ச்சி, உற்சாகமாகக் காணப்படுவர். உங்களுக்கு பிடித்த ஒன்றை மற்றவர்களுக்காக விட்டுக் கொடுப்பீர்கள். பக்தி நாட்டம் அதிகரிக்கும்.

### மிதுனம்



உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். வாடகை வீட்டில் குடியிருப்போர் பிரச்சினைகளைச் சந்திக்கலாம். சக ஊழியர்கள் திடீர் விடுமுறையால் வேலைப்பளு அதிகரிக்கும். நண்பர்களுக்காக நீங்கள் உங்களின் கைப்பணத்தைச் செலவிடலாம். சிறிய வேலைகளுக்கு பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள்.

### கடகம்



பிரியமான நண்பர்கள் அல்லது உறவினர்களுக்காக சில செலவுகளைச் செய்வீர்கள். விரும்பிய உணவு வகைகளைச் சாப்படுவதில் நாட்டம் செல்லும். ஒரு வேலையில் முழுமையாகக் கவனம் செலுத்த முடியாமல் ஒன்றுக்கு மேற்பட்ட வேலை நெருக்கடிகளை எதிர்கொள்ளலாம். வெளியூர் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும்.

### சிங்கம்



பல நாள்களாக இழுத்துக் கொண்டிருந்த பணவரவுகள் வரலாம். வேலையாள்கள் அனுகூலமாக நடந்து கொள்வர். பெற்றோர் மீதான பாசம் அதிகரிக்கும். வெளியூர்களில் இருந்து உறவினர்கள் சிலர் உங்களின் வீட்டிற்கு வரலாம். மன உளைச்சல்களைத் தவிர்க்க அடுத்தவர் விவகாரங்களில் தலையிட வேண்டாம்.

### கன்னி



பேராசைகளைத் தவிர்க்க வேண்டிய நாள். சில வேலைகளை வேகமாகத் ஆரம்பித்துவிட்டுப் பின்னர் அதிலிருந்து பின்வாங்கலாம். பிள்ளைகள் வழியில் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். கௌரவம், மரியாதை பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். பண விடயங்களில் மற்றவர்களை நம்ப வேண்டாம்.

### துலாம்



எப்படியும் முடிந்துவிடும் என நினைத்த காரியம் ஒன்றில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். நீண்ட தூர வாகனப் பயணங்கள் செல்லலாம். கடன் மீதிகளை கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைக்கும் நாள்.

### விருச்சிகம்



கனிவான பேச்சுக்களால் காரியங்கள் சாதிப்பீர்கள். காலை முதல் மாலை வரை பரபரப்பாகச் செயற்படுவீர்கள். பெண்களால் மகிழ்ச்சி, சந்தோஷம் அடையலாம். உங்களின் கடந்த கால பெருமைகளை மற்றவர்களிடம் சொல்வீர்கள். எதிர்பாராத பணவரவுகளுக்கு வாய்ப்புகள் உண்டு. சிலர் உங்களிடம் பணம் கைமாத்து வாங்கலாம்.

### தனுசு



நல்ல எண்ணங்கள், சிந்தனைகள் குடிகொள்ளும் நாள். பல மணி நேரமாகும் என நினைத்த காரியம் ஒன்று சில நிமிடங்களில் முடிந்து விடலாம். அயலாருக்கு சில உதவிகளைச் செய்வீர்கள். புதிய வாய்ப்புகள் தேடி வரலாம். குதர்க்கமாகப் பேசி உங்களை நோகடித்தவர்களே இன்று பாராட்டுவர்.

### மகரம்



எந்த வேலையையும் நாளை என தள்ளிவைக்காமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். வீடு மாற்றம் தொடர்பான சிந்தனைகள் உண்டாகும். பெண்கள், விருந்தினர்கள் வருகையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். அதிக செலவாகும் என நினைத்த காரியம் ஒன்று, குறைந்த செலவில் முடிவுக்கு வரலாம்.

### கும்பம்



கணவன், மனைவி இடையே வாக்குவாதங்கள் ஏற்படலாம். வெளியூர்களில் இருக்கும் ஒருவர் உங்களைத் தொடர்புகொண்டு உதவி கேட்கலாம். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரைப் பார்க்க நேரிடலாம். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்க்க வேண்டிய நாள். தொழில் நிமித்தம் வெளியிடங்களுக்கு செல்லலாம்.

### மீனம்



கடன் மிதிகளைக் கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைக்கும் நாள். எதிர்பார்த்த பணவரவுகள் சரியான நேரத்தில் கிடைக்கும். உங்களை நம்பி சிலர் முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம். உடன்பிறப்புக்கள் நீங்கள் கேட்ட உதவிகளைச் செய்யலாம்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் பிலிப்பையா பொன்ராசா

மண்ணில்: 07★07★1943

விண்ணில்:30★05★2010

கடந்த 30.05.2010 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தும், கண்ணீர் அஞ்சலிகள் பிரசுரித்தும், மலர்வளையங்கள் வைத்தும் இறுதிச் சடங்கில் அஞ்சலி செலுத்தி ஒத்துழைத்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வ நன்றிகள். மற்றும் அன்னார் யாழ்.போதனாவைத்தியசாலையில் இருந்தபோது அவருக்குச் சிகிச்சையளித்த வைத்தியர்கள், தாதிமார், ஊழியர்கள் அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றிகளைக் கூறிநிற்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இன்று (29.06.2010) செவ்வாய்க் கிழமை மாலை 5 மணிக்கு பத்தாவத்தை புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

மயிலங்காடு, இளவாலை. (சி/568730)

## பத்தாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 16 ★ 11 ★ 1936



அம்பாள் திருவடியில் 20 ★ 06 ★ 2000

அமரர் கந்தையா சண்முகரட்ணம்

(இளைப்பாறிய பிரதம லிகிதர், யா/தொழிற் திணைக்களம்)

ஆண்டுகள் பத்து சென்றாலும்
ஆறவில்லை எம்துயரம். நீங்கா
நினைவுகளுடன் உம் முகம் காணத்
தவிக்கின்றோம் அப்பா.....

விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
(99990)

அன்பு மனைவி- பரமேஸ்வரி சண்முகரட்ணம்,
அன்பு மகன்- சுதர்சன், அன்பு மகள்- சுதர்ஜினி,
அன்புடன் மருமகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள், பேரமக்கள்.


## சீகிரி நிறுவனத்தில் வேலைவாய்ப்பு

சீகிரி ஏற்றுமதி நிறுவனம் தனது நிறுவனத்தில் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கு மிகவும் வறுமைக் கோட்டினுள் வசிக்கும் குடும்பங்களைச் சேர்ந்த ஆண், பெண் இருபாலாரிடமும் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலிருந்தும் தலா 02 பேரை இதற்காகத் தெரிவு செய்து தருமாறு அரச அதிபர் கோரியுள்ளார்.

குறித்த வேலைவாய்ப்பைப் பெறுவதற்காக விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வயது முதல் 50 வயது வரையிலானோராகவும், தரம் 5 முதல் ஜி.சீ.ஈ.சாதாரண தரம் வரையும் கல்வி கற்றோராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் சிறந்த தேக ஆரோக்கியம் உடையவராகவும் கொழும்பு, முல்லேரியாவிலுள்ள தொழிற்சாலை வளாகத்தில் தங்கியிருந்து பணிபுரியவும் தயாராயிருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு வேலைக்குரிய பயிற்சி, தங்குமிடம், உணவு, போக்குவரத்து வசதிகள் அனைத்தும் சீகிரி நிறுவனத்தால் வழங்கப்படுமெனவும் விண்ணப்பிக்க விரும்புவோர் தத்தமது பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-121)


முகாமைத்துவ பயிற்சியாளர், தொழில்நுட்ப பயிற்சியாளர்
**பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.**

BIO TEC

1) முகாமைத்துவ பயிற்சியாளர்.
★ தகமை:- உயிரியல், இரசாயனவியல், விவசாயப்பட்டாதரிகள்
2) தொழில்நுட்ப பயிற்சியாளர்.
★ தகமை:- G.C.E A/L இல் இரசாயனவியல், உயிரியல், பௌதிகவியலில் விசேட பெறுபேறுகள்.

உரிய ஆவணங்களுடன் புதன்கிழமை (30.06.2010) மு.ப 9மணிக்கு நேர் முகப்பரீட்சைக்கு சமுகமளிக்கவும்.

Bio Tec International Ltd.



## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தையா குமாரசாமி

(நல்லூர் ப.நோ.கூ.சங்கம், முன்னாள் பணியாளர் )

திதி: அமரபக்க திருதியை (29.06.2010)

பிறப்பு: 25.09.1939
இறப்பு: 01.07.1999

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் எமக்கு
நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள்
பதினொன்று ஆனாலும் உங்கள் நினைவு
எம்மை விட்டுப் பிரியாது.

99, பூதவராயர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (99998)

உங்கள் நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி அப்புத்துரை நேசம்மா

அன்னை மடியில் 15.04.1933



ஆண்டவன் அடியில் 03.07.2007

திதி - திருதியை (29.06.2010)

ஆண்டுகள் மூன்று மறைந்ததுவே! உங்கள் ஆசைமுகம் தொலைந்து.
ஆயிரம் பேர் எம்மைச்சூழ நின்றாலும் யாரும் இல்லாதவர் போல் ஆனோமே!
நிலையில்லா வாழ்வுதனை உணர்ந்தோம் உங்கள் பிரிவினிலே
உங்களை காணாது தேடிய எம் விழிகள் எந்நேரமும் உங்கள் நினைவுகளுடன்

அம்பகர் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

16.06.1992

✱ மட்டக்களப்பு மாவட்டம்- கிரான் குளத்தில் இ.போ.ச பஸ் ஒன்றில் பயணம் செய்த 15 தமிழர்கள் ஆயுதம் தாங்கிய முஸ்லிம் குண்டர் குழு ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிப்பு.

✱ வடக்கு - கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தமது யோசனைகளை ஏழு தமிழ் அரசியல் கட்சிகள் ஜனாதிபதி பிரேமதாசவிடம் கூட்டாகச் சமர்ப்பித் ததாகத் தெரிவிப்பு.

17.06.1992

✱ தமிழர் பிரச்சினைக்கான எந்தத் தீர்விலும் வடக்கு- கிழக்கு மாகாண இணைப்பு அனுமதிக்கப்படமாட்டாது என்ற கருத்துப்பட ஜனாதிபதி பிரேமதாச தெளிவுபடுத்தியுள்ளதாகத் தெரிவிப்பு.

✱ விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் போராடிய அதிகாரிகளுக்கும் சிப்பாய்களுக்கும் மட்டுமே அவர்கள் எந்தப் பாதகமான சூழ்நிலையும் நின்று பிடிக்கக் கூடியவர்கள் என்பது தெரியும் என வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடமையாற்றிய இந்திய இராணுவ அதிகாரியொருவர் தெரிவிப்பு.

18.06.1992

✱ வடக்கு - கிழக்கில் கடந்த இரண்டு வருடங்களாக நடைபெற்று வரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான கால எல்லை நிர்ணயிக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு.

✱ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு நீண்ட இடைவெளிக்குப் பின் நேற்றுக் கூடியதாகத் தெரிவிப்பு.

19.06.1992

✱ இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண வேண்டும் என்பதற்கு தற்போது எல்லா அரசியல் கட்சிகளும் விருப்பம் தெரிவித்தால் அதற்கான நல்வாய்ப்பு தற்போது உருவாகியுள்ளதாக அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

✱ பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைப்பதால் மட்டும் எமது பிரச்சினை தீரப்போவதில்லை. எமது பிரச்சினைகளை நாமே தீர்க்க வேண்டும் என பிரதிச் சபாநாயகர் காமினி பொன்சேகா நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

20.06.1992

✱ வடக்கு - கிழக்கு இணைப்பு இல்லாத எந்தத் தீர்வையும் ஏற்பதில்லை எனக் கூறி நாடாமன்றக்குழு தயாரித்திருக்கும் புதிய திட்டத்தை கொழும்பில் உள்ள தமிழ் கட்சிகள் நிராகரித்து விட்டதாகத் தெரிவிப்பு.

✱ கனடாவில் வசிப்பவர்களில் தமது நெருங்கிய உறவினர்களை அங்கு அழைத்துக் கொள்வதற்கு வசதியாக கனடா நாட்டின் குடியேற்ற சட்ட விதிகள் தளர்த்தப்பட்டிருப்பதாகத் தெரிவிப்பு.

21.06.1992

✱ காங்கேசன்துறைமுகம் ஊடாக உணவுப் பொருள்களை குடாநாட்டுக்குள் எடுத்து வருவது தொடர்பான இணக்கத்தை அரச படைகள் மீறி விட்டதால் அந்த உடன்பாட்டிற்கு இனி நாம் கட்டுப்படப்போவதில்லை என விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவிப்பு.

✱ அரச சேவையில் தமிழ்மொழி அமுலாக்கம் உரிய வகையில் செயற்படுத்தப் படாததால் சிக்கல்கள் பல ஏற்படுவதாக கைத்தொழில் ராஜங்க அமைச்சர் செல்லச்சாமி தெரிவிப்பு.

22.06.1992

✱ அடுத்த வாரம் முதல் நாடாளுமன்றத் தெரிவுக்குழு நாளாந்தம் அமர்வுகளை நடத்தும் என அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு.

✱ தமிழ்க்கட்சிகள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு தேடி இந்தியாவுக்குச் செல்லும் காலம் மலை யேறிவிட்டது என அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

23.06.1992

✱ நான்கு ஆயிரத்துக்கும் அதிகமானோர் இராணுவத்திலிருந்து தப்பி ஓடி விட்டதால் வெற்றிடமாகவுள்ள இடங்களுக்கு புதிதாகப் படையினர் திரட்டப்பட்டுள்ளனர் என பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டி 'சண்டே ஐலண்ட்' பத்திரிகை தெரிவிப்பு.

✱ ஜனாதிபதி பிரேமதாசவின் பிறந்த தினமான இன்று அரசுக்கு எதிராக கொழும்பில் பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிப்பு.

24.06.1992

✱ இராணுவ வேலிகளை அமைத்து தமிழீழத்தை 3 இராணுவ வலயங்களாக்கி விடுதலைப் புலிகளை நலிவுபடுத்த சிங்கள அரசு திட்டமிடுவதாக விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு.

✱ கடந்த இரண்டு மாத காலத்தில் விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் 281 படையினர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிப்பு.

25.06.1992

✱ ஈழத் தமிழ் அகதிகளை தமிழக அரசு கட்டாயப்படுத்தி இலங்கைக்கு திருப்பி அனுப்புவது அவர்களது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் செயல் என தமிழக அரசியல்வாதி பண்ருட்டி ராமச்சந்திரன் கண்டனம் தெரிவிப்பு.

✱ ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்வதன் மூலம் தி.மு.க தலைவர் கருணாநிதி தமிழ் நாட்டில் அமைதியைக் குலைக்க முயல்கிறார் என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கண்டனம் தெரிவிப்பு.

26.06.1992

✱ பெலவத்த தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 372 தமிழர்களின் மனித உரிமைகள் நிலை குறித்து தற்போது மனித உரிமைகள் பணியகம் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிப்பு.

✱ அடுத்த ஜனாதிபதித் தேர்தலை முக்கோணப் போட்டியொன்றையே ஜனாதிபதி பிரேமதாச விரும்புகிறார். அதற்கு இடம்கொடுக்கக்கூடாது என எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ தெரிவிப்பு.

27.06.1992

✱ உடல் ரீதியாகத் துன்புறுத்தி இலங்கைத் தமிழ் அகதிகளை இந்தியா பலவந்தமாகத் திருப்பி அனுப்புகிறது என பிரிட்டன் அகதிகள் கவுன்ஸிலின் பிரதிநிதி பகிரங்கமாக அறிவிப்பு.

✱ தேசிய வருமானத்தில் 40 சதவீதத்தை வடக்கு - கிழக்கு யுத்தத்திற்குச் செலவிட நேர்ந்தது என பிரதமர் டி.பி. விஜயதுங்க தெரிவிப்பு.

28.06.1992

✱ யாழ்ப்பாணத்தில் ஊரடங்குப் பிறப்பிக்கப்பட்ட போதும் தற்போதைக்கு அங்கு பெரிய அளவில் இராணுவ நட வடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படும் எனக் கூறமுடியாது என வெரித்தாஸ் வானொலி ஊகம் தெரிவிப்பு.

✱ சுவிஸ் நாட்டின் ஆட்சி முறையின் இலங்கைக்கு ஓர் ஊக்குவிப்பான விடயமாக இருக்கும் என்று சுவிட்ஸர்லாந்தின் இலங்கைக்கான தூதுவர் தெரிவிப்பு.

29.06.1992

✱ வவுனியா - சூடுவெந்தபுலவு பகுதியில் இராணுவத்தினரின் 15 காவலரண்களை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்து விட்டதாகத் தெரிவிப்பு.

✱ பளைப் பகுதியில் விமானப்படையினரின் விமானக் குண்டு வீச்சில் யு. எஸ்.எயிட் - கெயர் திட்ட அலுவலகங்களும் களஞ்சியங்களும் சேதமடைந்ததாகத் தெரிவிப்பு.

30.06.1992

✱ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நாடு கடத்துவது தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் பேச்சு நடத்த இலங்கை வரவிருந்த இந்திய சட்ட நிபுணர் குழு இலங்கைக்கு வரமாட்டது என இந்தியத் தூதர் தெரிவிப்பு.

✱ கொழும்பில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள தெற்காசிய வெளியுறவுச் செயலாளர்கள் மகாநாட்டில் இந்திய வெளியுறவுச் செயலாளர் டிக்ஸிற் கலந்து கொள்ளமாட்டார் என இந்திய அரசு அறிவிப்பு.

# சர்வதேசத்தின் அழுத்தங்கள் தொடர்பில் இந்தியாவிற்கு சில பொறுப்புகளுள்ளன

## பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

இலங்கை மீது சர்வதேச நாடுகள் பிரயோகித்துவரும் அழுத்தங்கள் தொடர்பில் இந்தியாவிற்கு சில பொறுப்புகள் உள்ளன என பிரதமர் டி.எம்.ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் வாழும் சகல இனத்தவர்களும் சுயாதீனமாக வாழக்கூடிய பின்னணியை அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியாவின் மத்திய பிரதேச முதல்வர் சிவராஜ்சிங்னுடன் நடைபெற்ற சந்திப்பின்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற இச் சந்திப்பின்போது இலங்கையின் துரிதமான அபிவிருத்தி தமக்கு மகிழ்ச்சியளிக்கிறது என மத்தியப் பிரதேச முதலமைச்சர் தெரிவித்துள்ளார். (சி)

# வடக்குக் கிழக்குக்கு உலக வங்கி எட்டரைக் கோடி டொலர் நிதியுதவி

கொழும்பு, ஜூன் 29

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்காக, உலக வங்கி 8 கோடி 60 லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிதியின் மூலம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் 74 பிரதேசங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது என பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான உடன்படிக்கையில், உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியும் அரசும் விரைவில் கைச்சாத்திடவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அபிவிருத்திக்கு உள்வாங்கப்படவுள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் 74 பிரதேசங்களிலும், 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இதன்படி வட மாகாணத்தின் 34 பிரதேசங்களும், கிழக்கு மாகாணத்தில் 43 பிரதேசங்களும் இந்த அபிவிருத்திக்கு உள்வாங்கப்படவுள்ளன. (சி)

# விலைவாசி உயர்வை எதிர்த்துப் போரிட எதிர்க்கட்சிகள் ஒன்றுதிரள வேண்டும்

## ஐ.தே.க. அழைப்பு

கொழும்பு, ஜூன் 29

அத்தியாவசியப் பொருள்களுக்கான விலை அதிகரிப்பிற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு எதிர்க்கட்சிகள் இணைந்து செயற்பட வேண்டும் - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளிடையே பொதுவான இணக்கப்பாடு எட்டப்பட்டால் அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராட்டங் களை முன்னெடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு -

அத்தியாவசிய பொருள்களுக்கான விலை உயர்வு மற்றும் வரி அதிகரிப்பு ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நடவடிக்கைக்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவைத் திரட்டும் வகையிலான பேச்சுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சாதாரண மக்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கி வரும் அதேவேளை, செல்வந்தர்கள் வரிச்சலுகைகளை அனுபவித்து வருகின்றனர்.

பொதுமக்கள் பொருளாதார சுமைகளால் அல்லலுறும் தருணத்தில் அரசு ஜனாதிபதியின் தவணைக் காலத்தை அதிகரிப்பது தொடர்பில் கூடுதல் முனைப்புக் காட்டி வருகிறது. ஜனாதிபதியின் தவணைக் கால நீடிப்புக்கு இடதுசாரிக் கட்சிகள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

விலை அதிகரிப்பிற்கு எதிராக வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தப்படும்.

- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

# அரசின் மனித உரிமை மீறல்களை அனுமதிக்க முடியாது - ஜே.வி.பி.

கொழும்பு, ஜூன் 29

அரசின் மனித உரிமை மீறல்களை அனுமதிக்க முடியாது - என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பெலவத்தையில் அமைந்துள்ள ஜே.வி. பி.கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற சந்திப்பு ஒன்றின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு -

யுத்தம் முடிவடைந்து ஒரு வருடத்திற்கு மேல் கடந்துள்ள நிலையிலும், மனித உரிமைகளைப் பேணுவதற்கு அரசு காத்திரமான நடவடிக்கை எடுக்கவில்லை.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் அரசிற்கு ஆதரவளிக்க முடியாது. அவ்வாறு அரசிற்கு ஆதரவளித்தால் அது ஜனநாயகத்தை மீறும் நடவடிக்கையாகவே அமையும்.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின் ஆலோசனைக் குழு நியமனத்திற்கு எமது கட்சி எதிர்ப்பை வெளியிடுகிறது.

அரசின் தவறுகளை மூடிமறைத்து அரசைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் எமக்குக் கிடையாது.

- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

# ஈழத் தமிழர் பிரச்சினையில் தலையிட பில் கிளின்டனிடம் கோரப்படவுள்ளது

## நியூயோர்க் தமிழ் சங்கம் நடவடிக்கை

கொழும்பு,ஜூன்29

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு, முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனைத் தலையிடுமாறு கோரப்படவுள்ளது.

இதுதொடர்பில் நியூயோர்க் தமிழ் சங்கம் விரைவில் அவரைச் சந்திக்கவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தகவலை சங்கத்தின் தலைவர் செல்லத்துரை அல்பேர்ட் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் வாழ்கின்ற சிறிய அளவிலான தமிழ் சமூகத்தினர் சங்கம், பல தசாப்தங்களாக காணப்படுகின்ற இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் செயற்பட்டு வருகிறது.

இதன்படி, இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு, உரிய வழிமுறைகள் குறித்து ஆராய்வதற்காக எதிர்வரும் நாள்களில் பில் கிளின்டனை நியூயோர்க் தமிழ்ச் சங்கத்தினர் சந்திக்கவுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தொடர்ந்தும் அவல நிலை காணப்படுகிறது எனவும், வலிகளில் இருந்து தமிழ் மக்களைக் காப்பதற்கு அவசர கதியில் ஏதேனும் செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்வெட்டித்துறை பொலிஸ் பகுதிக்குட்பட்ட கிராம அலுவலர் பகுதிகளுக்கான பொலிஸ் நடமாடும் சேவை அண்மையில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்நிகழ்வில் வல்வை ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ தண்டபாணிகதேசிகர் ஆசியுரை வழங்குவதையும் காங்கேசன்துறை, பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய பிரதேசங்களுக்கான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஹரிச்சந்திரபண்டார உரை நிகழ்த்துவதையும் முதலிரு படங்களிலும்-

பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலர்களான ஆர்.வரதீஸ்வரன், எஸ்.சத்தியசீலன் உட்பட நிகழ்வில் கலந்துகொண்டோரை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்: எஸ்.மூர்த்தி)

**யாழ்.மண்ணின் மரபுகளையும் ....**

*(10ஆம் பக்கத் தொடர்ச்சி)*

இது இறைநம்பிக்கையின் அடித்தளமிக்க புண்ணியபூமியல்லவா? அதனால் தான் வருவோரை அன்பாய் உபசரிக்கும் கோயில் மடங்கள், வருவோருக்கு பசியாற்றும் புண்ணியத்தைக் கடந்த பல வருடங்களாகவே நிறைவேற்றி வருவதாக நயினாதீவு கோயில் பூசாரி ஒருவர் தெரிவித்த போது நாம் ஆச்சரி யப்பட்டே போனோம். தினமும் வாழை இலையில் சோறு கறியுடன் சாப்பாடு என்பது எங்கள் மாணவர்களுக்கு புது அனுபவமாகவே இருந்தது.

''சாதிகள் இல்லையெடி பாப்பா'' என்கிற பாரதியாரின் பாடல்தான் எம் நினைவில் வந்து அலைமோதியது.

வந்தாரை வாழவைக்கும் யாழ்ப்பாண மண்ணின் மண்வாசனை அப்படியே கமகமக்கும் பனைமரங்க ளின் அழிவுகள் கடந்தகாலத்தில் மிகவும் அதிகமாகவே காணப்பட்டன என்பதை ஒரு யாழ்.அன்பர் கூறினார். இருந்தாலும் தமது விடாமுயற்சியின் பயன் இன்று நாட்டுக்கே பனைமரத்தின் பொருள்களை வாரிவழங்கும் மத்திய நிலையமாகவே தொழிற்படுகிறது. அதுமட்டுமல்ல பழரசங்கள் மிகவும் ருசியான முறையில் தயாரித்து வழங்கும் பல நிலையங்கள் காணப்படுவதாக கடைக்கார அன்பரொருவர் தெரிவித்தார். இவை எல்லாம் எதனைக்காட்டுகின்றன என்றால் நாங்கள் அனைவரும் சுறுசுறுப்பானவர்கள். எங்களுக்கு ஊக்கமும், ஒத்தாசையும் தந்தால் பாலைவனத்தில் பசுமைப் புரட்சியை லிபியநாடு உருவாக்கியது போல் யாழ்.மண்ணிலும் விரைவான பசுமைப்புரட்சியைச் செய்வோம் என்பது போன்றவாறு பழவகைகள் குவிந்த வண்ணம் காட்சி தருவதா னது இம் மக்களின் உழைப்புக்கு என்னவென்று சொல்வது!

பல்லாயிரக்கணக்கான உயிர்ச்சேதங்களும், பொருள் சேதங்களும் நிறைந்த இச்சமுகத்தில் ஒழுங்குமுறைசார் விழுமியங்கள் என்பது சற்று சீரழிவை ஏற்படுத்தியிருந்தாலும் இந்தச் சாரணியத்தின் வரவை அந்த மாணவர்களும், அங்கு வருகை தந்திருந்த உயரதிகாரிகளும் இம்மாணவர்களின் மூலமாக எதிர்காலத்தில் சிறப்பான சமயம் சார்ந்த ஒழுக்க மேம்பாடுள்ள புண்ணிய சீலர்களை உருவாக்கும் நோக்குடன் முதன் முதலாக இப்ப ழைய பூங்காவில் ஆரம்பித்துவைக்கப்பட்ட இந்த அனைத்தின மாணவர்களினதும் ஒன்றுகூடல்கள் இங்குள்ள பிள்ளைகளின் ஊடாக பெற்றோர்களுக்கும், இங்கு வாழ் மக்களுக்கும் உளரீதியான இன்ப்ஊற்று பெருக்கெடுத்து இலங்கை முழுவதும் பரவுதற்கு காரணமாய் அமையவேண்டும் என்பதை குறியாகக் கொண்டு யாழ்.அரசாங்க அதிபரின் நன்நோக்கு இந்த சாரணர் ஜம்போறியை யாழில் நடத்துவதற்கு உதவி நின்றது என்று த.நா.போஜன் கூறினார்.

இன்றைய சமாதான முன்னெடுப்புக்கள் எதிர்கால சந்ததிகளான இன்றைய மாணவர்களிடம் யாதார்த்தமாகவே ஊட்டப்படல் வேண்டும் என்பதற்கிணங்க ''சாரணியத்தின் ஊடாக சமாதான முன்னெடுப்புக்கு கைகொடுத்தல்'' எனும் உயரிய நோக்குடன் இந்தப் பெருவிழாவா னது யாழ்.மண்ணின் இளஞ்சிறார்களினது வாழ்வில் கடந்தகால கசப்புணர்வுகள் நீங்குவதற்கும், மனோவலியை இல்லாதொழித்து, மிகவும் வலிமைமிக்கதான ஒற்றுமை, தன்நம்பிக்கை போன்ற சாரணியப்பண்புகள் உருவாக்கப் படல் வேண்டும் என்பதே இங்குள்ள அனைவரினதும் ஆதங்கமாக அமைந்திருந்ததைப் பார்க்கின்றபோது உண்மையிலேயே இதுபோன்ற ஒன்றுகூடல்கள் வெறு மனே புகழுக்காகவன்றி நாடு எதிர்பார்க்கும் அமைதியான போக்கும், எதிர்கால சுபீட்சமும் நிறைந்ததாகக் காணப்பட வேண்டும் என்பதே அனைவரினது எதிர்பார்ப்புமாகும்.

இந்த நிகழ்வுகளுக்கு பக்கபலமாக இருந்த யாழ்.அரச அதிபருக்கும் கூடாரங்கள், நீர், மின்சாரம், போக்குவரத்து போன்ற பல்வேறு உதவிகளை வழங்கிய அனைத்துள்ளங்களுக்கும் வடமாகாணத்திற்கான சாரண ஆணையாளரான த.நா.போஜன் உளப் பூர்வமான நன்றியை இறுதிநாள் நிகழ்வின்போது தெரி வித்திருந்தார். அது மட்டுமன்றி இலங்கை சாரணர் சங்கத்தின் அனுசரணையுடன் வடமாகாண சாரணர் அமைப்பினரின் முதலாவது சாரணர் ஜம்போறி, குருளைச் சாரணர் கப்போறியையும் நினைவாகக் கொண்டு ஒரு சிறப்பு மலரினையும் வெளியிட்டிருந்தனர்.

எனவேதான் இன்றைய நவீன உலகின் போக்குகளுக்கு ஏற்ப கடந்தகால நிகழ்வுகளின் கசப்பான உணர்வுகளுக்கு சற்று ஆறுதல் அளிக்கும் வகையில் யாழ்.மாண வர்களின் சாரணியப்பண்புகள் எதிர்காலத்தில் பரந்தளவில் வியாபித்து, அதனூடாக சாந்தி, சமாதானம், ஐக்கியம் ஓங்கி, நாடு முழுவதும் பரந்தோங்குவதற்கு நாமும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.

***


**19 ஆம் ஆண்டில் நினைவு கூருகின்றோம்**



அமரர் வேலாயுதபிள்ளை
செல்வரட்ணம்
(பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)
திதி: 29.06.2010

மலர்வு
25★02★1935

உதிர்வு
30★06★1991

அப்பா! நீங்கள் எங்களை விட்டுச் சென்று
ஆண்டுகள் பத்தொன்பது போனாலும்
இன்னும் நாங்கள் உங்கள்
இனிய நினைவுகளுடன் வாழ்கின்றோம்.

*புகையிரத நிலைய பக்கம்,*
*எழுதுமட்டுவாழ்.*
*த.முகவரி: அரசடி வீதி,*
*திருநெல்வேலி.*
[100000]

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், மருமகள்மார்,
பேரப்பிள்ளைகள்.

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

மண்ணில்
05 ★ 09 ★ 1940

விண்ணில்
10 ★ 07 ★ 2009



அமரர் கதிர்காமத்தம்பி தங்கராஜா J.P
(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்)
திதி: (29.06.2010)

ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை - மனம்
ஆண்டு பல சென்றாலும்
அகலாது எம்மிடையே-?
உம் நினைவு

சுரோமபடி,
திக்கம்,
அல்வாய் மேற்கு.
[100015]

குடும்பத்தினர்.

**தவறிவிட்டது**

1010/12B, K.K.S வீதி, நாச்சிமார்கோயிலடி எனும் முகவரியுடைய திருச்செல்வம் பிரசன்னா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (811903507V), சாரதி அனுமதிப் பத்திரம் ,காப்புறுதிப்பத்திரம் என்பன நந்தாவில் அம்மன் கோவிலடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
(0774080543) (0213213837)

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம் 31 வயது, கிரகபாவம் 36, கொழும்பு தனியார் நிறுவனம் ஒன்றில் Accounts Executive ஆக தொழில் புரியும் மணமகனுக்கு அரச அல்லது வங்கித் துறையில் தொழில்புரியும் மணமகள் தேவை.
தொடர்பு 0213001055

**திருமண சேவை**

1984 செவ்வாய் அற்ற, லண்டன சிற்றிசன் மணமகளிற்கு வெளிநாடு செல்லக்கூடிய மணமகன் தேவை.
துர்க்கா திருமண சேவை,
9, சங்கிலியன் வீதி, நல்லூர்.0213211814,0214591417
Email- Thurka 32 @ gmail.com

**இடம் மாற்றம்**

[illegible] இல் இருந்து இல.54, பெரியகடை வீதி, உட்புறம் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கும் என்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

CEYLINCO-CISCO

உங்களையும் உங்கள்
சொத்துக்களையும்
பாதுகாப்பதற்காக
நாங்கள் இப்பொழுது
யாழ்ப்பாணம் வந்திருக்கிறோம்



பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
இலத்திரனியல் பாதுகாப்பு திட்டங்கள்
பணம் எடுத்துச் செல்லல்
வீட்டு தாதி சேவை
உள்ளூர், சர்வதேச குரியர் சேவை

230/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222 18 22, 021-222 19 22
மொபைல்: 077-3746448

24 மணிநேர ஹொட்லைன்
011 - 2 55 77 77


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மக்களின் மீள்குடியமர்வு குறித்து ஜனாதிபதி செயலகத்தில் விசேட மாநாடு

## இன்றும் நாளையும் நடைபெறுகிறது

கிளிநொச்சி,ஜூன்29

வன்னியில் நடைபெற்றுவரும் மீள் குடியேற்றம் மற்றும் அபிவிருத்தி முன்னெடுப்புகள் குறித்த விசேட மாநாடு ஒன்று இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறுகின்றது.

வவுனியா அரச அதிபர் திருமதி பீ. எம். எஸ்.சாள்ஸ், முல்லைத்தீவு அரச அதிபர் இமெல்டா சுகுமார், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ. ஏ. சந்திரசிறி ஆகியோர் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

வெளிநாட்டு வளங்களை எவ்வாறு மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு வழங்குவது குறித்தும் இங்கு ஆராயப்படும். மீள் குடியேற்ற பிரதேசத்தில் நடைபெற்று வரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் இங்கு பரிசீலிக்கப்படும்.

வவுனியா மாவட்டத்தில் வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் முழுமையான மீள்குடியேற்றம் நடைபெற்றுள்ளது.

தற்போது நெடுங்கேணியில் பாரிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நகரம் வழமைக்கு திரும்பிவிட்டது. வர்த்தக நிலையங்களும் திறக்கப்பட்டுள்ளதாக நெடுங்கேணி பிரதேச செயலாளர் தெரிவிக்கின்றார். (50)

# இடம்பெயர்ந்த காணி இல்லாதோருக்கு அரச நிலங்களை வழங்குவதற்கு நடவடிக்கை

## மன்னார் இணைப்புக் குழுக் கூட்டத்தில் வடமாகாண ஆளுநர்

மன்னார்,ஜூன்29

மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் காணிகள் அற்றவர்களுக்கு அரச காணிகளை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

இதேவேளை இவ்வருடம் பெரும் போக நெற்செய்கையினை மேற்கொள்ளும் பொருட்டு 30 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பை சுத்திகரித்து தயார்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்திக் குழுக் கூட்டம் வன்னி மாவட்ட எம்.பி.யும் கைத்தொழில், வாணிபத்துறை அமைச்சருமான ரிஷாத் பதியூதீன், வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோரின் கூட்டுத் தலைமையில் நடைபெற்றது.

நீண்ட காலங்களுக்குப் பின்னர் முதற் தடவையாக மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தின் போது இம்மாவட்டத்தில் அரசாங்கம் முன்னெடுத்து வரும் பல்வேறு அபவிருத்தி பணிகளை துரிதப்படுத்துவது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன் தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டதாக ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்திலுள்ள 20 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாயக் காணிகள் காடுகளாக காணப்படுவதுடன் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதாக தெரிவித்த அவர், இராணுவத்தின் ஒத்துழைப்புடன் துரிதமாக சுத்திகரித்து மக்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள வசதிகளை செய்து கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சிறிய குளங்களை விவசாய நடவடிக்கைகளுக்காக புனரமைப்புச் செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பணிப்புரை வழங்கியுள்ளார்.

மடு கல்வி வலயத்தில் மீளக்குடியேறியுள்ள பிள்ளைகளின் கல்வித் தரத்தை மேம்படுத்துவது தொடர்பாக ஆராய்ந்து இருவார காலத்திற்குள் அமைச் சருக்கும், ஆளுநருக்கும் சமர்ப்பிக்கும் வகையில் விசேட குழுவொன்றும் இந்தக் கூட்டத்தின் போது நியமிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாந்தை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 21 கிராமங்களிலும் முன்னெடுத்து வரும் மீள் எழுச்சி மற்றும் கமநெகும திட்டங்களை 3 மாதகாலத்திற்குள் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இடம்பெயர்ந்து மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் வழங்குதல், புனரமைத்தல் போன்றவை தொடர்பாகவும், இந்திய அரசு வடக்கில் நிர்மாணிக்கவுள்ள 51 ஆயிரம் வீடுகளை வடமாகாண மக்களுக்கு பகிர்ந்தளித்தல் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது என்றார்.

சுகாதார, கல்வி, மேம்பாட்டுத் திட்டங்கள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தின் போது விரிவாக ஆராயப்பட்டதாக ஆளுநர் மேலும் சுட்டிக்காட்டினார். நானாட்டான், விடத்தல்தீவு வைத்தியசாலைகளுக்கு வைத்தியர்கள் தட்டுப்பாடு நிலவுவதாக கூறப்பட்டதை அடுத்து செட்டிகுளத்திலிருந்து ஆறு வைத்தியர்களை உடனடியாக அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆளுநர் தெரிவித்தார்.(50)

## திருநகர்ப் பகுதிக்கு விரைவில் மின்சாரம்

கிளிநொச்சி,ஜூன்29

கிளிநொச்சி நகரை அண்டிய திருநகர் பகுதியில் மின்சாரம் வழங்குவதற்கான ஆயத்தங்கள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. தற்போது 'கிரேன்' மூலம் மின் கம்பங்கள் நடும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. (ஒ-405)

# வட்டக்கச்சி சிவிக் சென்ரர் கிராம மக்களுக்கு எந்தவித அடிப்படை வசதிகளும் இதுவரை இல்லை

## மீள்குடியேற்ற அமைச்சருக்கு மகஜர்

கிளிநொச்சி, ஜூன் 29

வட்டக்கச்சி சிவிக்சென்ரர் கிராமத்தில் மீளக்குடியேறியுள்ள மக்களுக்கு எந்தவிதமான அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லையென அந்த மக்கள் மீள்குடியேற்ற அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :-

எமது கிராமத்தில் மீள்குடியேறிய மக்களில் பெரும்பாலானோர் உறவினர் வீடுகளில் இருந்தும் வந்து குடியேறியுள்ளனர். அவர்களுக்கு எவ்வித அடிப்படை வசதிகளும் செய்துகொடுக்கப்படாமல் பெருஞ் சிரமத்துடன் வாழ்கின்றனர். வெயிலும் மழையும் விருப்பு வெறுப்பின்றி வீசிக் கொண்ட போதிலும், ஏற்றுக்கொண்டிருக்கும் மக்கள் நிலையைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்கும்படி கோருகிறோம்.

அரச ஊதியம் பெறும் மக்களும், பாமர மக்களும் ஒரே மாதிரியாக கவனிக்கப்படுகின்றனர். ஊதியமும் உதவியும் பெற்று வாழும் மக்களுடன் பாமரரையும் சம எடைபோட்டு நடத்தும் அதிகாரிகளின் எண்ணக் கருத்தில் என்ன உண்டு. சிரமத்துடன் வாழ்வதா? சிறப்புடன் வாழ்வதா?

முகாமிலிருந்து வந்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் உடனுக்குடன் சகல வசதிகளையும் செய்து கொடுக்கிறார்கள். உறவினர் வீடுகளிலிருந்து வந்தவர்களில் பெரும்பாலலானவர்கள் முகாம்களிலிருந்து வயதாளிகள், வலது குறைந்தோரென விடுவிக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு என்ன வசதியுண்டு! வசதிகள் செய்துகொடுப்பதில் தாமதம் ஏன்? கவனஞ் செலுத்தி ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம் - என்றுள்ளது. (50)

## பூநகரி வடக்கு உழவு இயந்திர சங்கம் அமைக்கப்பட்டது

கிளிநொச்சி,ஜூன்29

பூநகரி வடக்கு பிரதேசத்திற்கு புதிய உழவு இயந்திர சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. பூநகரி பிரதேச கமநல உத்தியோகத்தர் ந.சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே சங்கம் அமைக்கப்பட்டு இயக்குநர் சபையும் ஏற்படுத்தப்பட்டது.

இப்பிரதேசத்தில் உள்ள அனைத்து உழவு இயந்திர உரிமையாளர்களையும் சங்கத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் இ.குமாரகுலசிங்கம் கேட்டுள்ளார். (50-6-420)

## வன்னி வலம்

## முன்னாள் பெண் புலிகளுக்கு முன்பள்ளி டிப்ளோமா கற்கைநெறி

வவுனியா,ஜூன்29

வவுனியா புனர்வாழ்வு நிலையங்களிலுள்ள முன்னாள் பெண் புலி உறுப்பினர்களுக்கென முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா கற்கை நெறியொன்று அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவிருப்பதாக புனர்வாழ்வு நிலையத்தின் ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுசந்த ரணசிங்க தெரிவித்தார்.

வவுனியாவிலுள்ள புனர்வாழ்வு நிலையங்களில் முன்னாள் பெண் புலி உறுப்பினர்கள் 120 பேர் தங்கியுள்ளனர். இவர்களுக்காக இக்கற்கை நெறி நடத்தப்படவுள்ளது. வவுனியா பம்பைமடு புனர்வாழ்வு நிலையத்தில் 60 பெண்களும், பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் 60 பெண்களும் தங்கியுள்ளனர். இவர்களுக்கு இக்கற்கை நெறி வெவ்வேறாக நடத்தப்படவுள்ளது. (50)

## மன்னார்-மாத்தறை உறவுப்பாலம் நேற்று வைபவரீதியாக ஆரம்பம்

மன்னார்,ஜூன் 29

மாத்தறை சர்வோதயா சாந்திசேன - மற்றும் மன்னார் சர்வோதயா சாந்திசேன இளைஞர், யுவதிகள் உறவுப்பாலம் நிகழ்வுகள் நேற்று ஆரம்பமாகின.

மன்னார் கீரிக் கிராமத்தில் மன்னார் - மாத்தறை இளைஞர், யுவதிகள் காலை ஆரம்ப நிகழ்வுகளுடன் ஒன்றுகூடினர். கீரியில் அமைந்துள்ள ஆலமரச் சோலையின் நடுவே பந்தல் அமைத்து சுமார் 80இற்கும் அதிகமான இளைஞர், யுவதிகள் அமர்ந்திருந்தனர்.

முதல் நிகழ்வாக மங்கள விளக்கேற்றல் வைபவத்தில் நான்கு மதத் தலைவர்களும் கலந்துகொண்டனர். குறிப்பாக சர்வோதயா மாவட்ட இணைப்பாளர் யுகேந்திரன், மன்னார் கடற்படை முகாம்களின் பொதுசனத் தொடர்பாளர் லக்ஸ்மன் ரத்னாயக்க, அமெரிக்க சர்வோதயத்தின் பணிப்பாளர் அடன் ஓட்மன், மாத்தறை சாந்தி சேனா இணைப்பாளர் ஆகியோருடன் கீரிக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், கீரி சாந்திசேனா அங்கத்தவருமான திருமதி கமலா உட்படப் பெரும் எண்ணிக்கையான சர்வோதயத் தொண்டர்களும் கலந்து கொண்டனர். (50-80)





கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு அதன் பழைய [illegible] அன்பளிப்புச் செய்யப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. சீருடையினை கல்லூரியின் அதிபர் க.இரத்தினகுமாரிடம் பழைய மாணவர் சங்க உப செயலாளர் எஸ்.புஸ்பகாந்தன் கையளிப்பதை முதல் படத்திலும் சீருடைகளை அணிந்த கல்லூரியின் எல்லே அணியினர் அதிபர், பிரதி அதிபர், பொறுப்பாசிரியருடன் நிற்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

(படங்கள் : கிளிநொச்சி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் அதிபராக
சிறப்புறப் பணியாற்றிவரும்
திரு ஆ.சிவநாதன்
(B.A(Hons),Dip.in.Edu,
M.Ed., SLPS)
அவர்கள்தொடர்ந்து
எமது பாடசாலைக்கு
அதிபராகப்
பணியாற்றுவதற்கென
மாகாணக்
கல்வியமைச்சினால்
நியமிக்கப்
பட்டுள்ளார்.
அவரைப் பாராட்டி
வாழ்த்துவதில்
மகிழ்ச்சியடைகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யாழ்.வல்வை சிவகுரு வித்தியாசாலை
வல்வெட்டித்துறை.


# ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

வன்னியில் இருந்து கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியேறிய மக்களில் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் உணவல்லாத பொருள்களை இதுவரை பெற்றுக்கொள்ளாதோருக்கான விநியோகம் இன்று செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்படவிருந்தது.

எனினும் தவிர்க்க முடியாத காரணங்களினால் மறுதிகதி அறிவிக்கப்படாமல் இந்நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-டி-ரி)

# துவிச்சக்கர வண்டி வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 29

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் வன்னியிலிருந்து மீளக்குடியேறியோருக்கு ''போரூட்'' நிறுவனம் துவிச்சக்கர வண்டிகளை வழங்கியுள்ளது.

இதுவரை மொத்தமாக 228 பயனாளிகளுக்கு துவிச்சக்கர வண்டிகள் போரூட் நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்ததாகக் கோப்பாய் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-டி-ரி)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 29

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஆன்மீக எழுச்சிப்பட்டறைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் பங்குபற்ற ஆர்வமுள்ள 12 வயது முதல் 30 வயது வரையுள்ள கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இந்து இளைஞர், யுவதிகள் பங்குபற்றலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆன்மீக எழுச்சிப்பட்டறை ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதாகவும் இது குறித்த விண்ணப்பப் படிவங்களை கோப்பாய் பிரதேச செயலகக் கலாசார உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-டி-ரி)

# விண்ணப்பப் படிவம் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட உயர்பாதுகாப்பு வலயமாக இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட வளலாய் பகுதி மக்களுக்கு உலக வங்கியின் வீட்டுத் திட்ட விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இவ் விண்ணப்பப் படிவங்களை இதுவரை 72 பேர் பெற்று மீளக்கையளித்துள்ளதாகவும் அவர்களின் விவரங்கள் யாழ்.செயலகத்துக்கு விரைவில் அனுப்பப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-டி-ரி)


யாழ்.மண்டைதீவு முகப்புவயல்
அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி
திருக்கோயில் புனராவர்த்தன
பஞ்ச குண்ட பக்ஷ அஷ்டபந்தன
பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக
விஞ்ஞாபனம்-2010

★ பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பம்: ஆனிமாதம் 14ஆம் நாள் (28.06.2010) திங்கட்கிழமை பின்னிரவு 5.10 மணி
★ எண்ணெய்க் காப்பு: ஆனி மாதம் 17ஆம் நாள் (01.07.2010) வியாழக்கிழமை காலை 10 மணியிலிருந்து மாலை 5 மணி
★ ஆனிமாதம் 18ஆம் நாள் (02.07.2010) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி-10.15 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம்.
★ பிரதிஷ்டா பிரதம குரு: சிவஸ்ரீ யோகீஸ்வர பிரபாகரேஸ்வரக் குருக்கள்.
(யாழ்.அத்தியடி விநாயர் தேவஸ்தான பிரதம குரு)
★ சர்வ போதகம்: சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக் குருக்கள்
★ ஆசியுரை: சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள்
(சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத் தலைவர்)
★ அருளுரை: ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்

மாலை 3 மணிக்கு சித்திரத்தேர் வெள்ளோட்டமும், திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும். தொடர்ந்து மண்டலாபிஷேகமும் அலங்கார உற்சவமும் நடைபெறும்.

ஆலயப் பணியில் நிற்கும்:
திரு.தி.பஞ்சாட்சரம் (தர்மகர்த்தா)

மங்கள வாத்தியம்:
மகேசன் குழுவினர்,
திரு.எஸ்.பாலமுருகன் குழுவினர், நல்லூர்.
(10032)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



வடமராட்சி வலயத்தில்
நீண்டகாலம் அதிபராகப் பணியாற்றி, எங்கு உதவி தேவையோ அங்கெல்லாம் நிறைந்த சேவையை நல்கி அனைவரது உள்ளங்களிலும் இடம்பிடித்த அதிபர்
உயர்திரு கந்தர் பொன்னையா
அவர்கள் மருதங்கேணிக் கல்விக் கோட்ட அதிகாரியாகப் பதவியுயர்வு பெற்றுத் தனது நேசக்கரத்தை நீட்டி சேவையாற்றும் பணியினை உள்ளன்போடு வாழ்த்துகின்றோம்.
அதிபர், நண்பர்கள்
வடமராட்சி வலயம்.
[100028]





புனித யாத்திரைத்தலமான
புங்குடுதீவு அருள்மிகு
அந்தோனி முனிந்திரர் ஆலய
உயர்திருவிழா

★ கொடியேற்றம்: 02.07.2010 வெள்ளி பி.ப. 5 மணி
★ குரு: அருட்பணி லியோ ஆம்ஸ்ரோங்
★ வேண்டுதல் கரு: ''குடும்ப அன்பு'' திருப்பலி (பூஜை) பி.ப.5.30 மணி
★ நற்கருணை விழா: 2ஆம் திருவிழா 03.07.2010 சனி பி.ப. 5 மணி
★ வேண்டுதல் கரு: ''பகிர்வு வாழ்வு'' திருப்பலி (பூஜை) பி.ப. 5.30 மணி, நற்கருணை பவனி, அருளாசி.
★ உயர்திருவிழா: 04.07.2010 ஞாயிற்றுக்கிழமை
★ வேண்டுதல் கரு: ''முன் மாதிரியான வாழ்வும் நிலையான சமாதானமும்.
★ காலை 7 மணி இசை வேள்வி கூட்டு வழிபாடு
★ காலை 8.30 மணி திருவிழாத் திருப்பலி (பூஜை)
★ காலை 9.30 மணிக்கு நாதஸ்வரகான ஆராதனையுடன் அற்புதரான அந்தோனி முனிந்திரரின் ஊர்மனையூடான தேர்ப்பவனி.
★ முற்பகல் 10.30 மணிக்கு பக்தர்களுக்கு அருளாசி
★ நண்பகல் 12 மணிக்கு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

பொது, தனிப்பட்ட கோரிக்கைகளுக்காக கூடிவழிபட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். தங்கள் அன்பளிப்புக்கள், நன்கொடைகளை வழங்கி ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நிர்வாகம்,
புங்குடுதீவு. அருள்மிகு அந்தோனியார் ஆலயம்.



வெளிவாரிப் பட்டப் பரீட்சைகள் மற்றும் பதிவுகள் அலகு,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
வெளிவாரிப் பரீட்சை-2009
இணையவழி மூலமான வியாபார
முகாமைத்துவமாணிப் பட்டப்படிப்பு
(முதலாம் அரையாண்டுப் பரீட்சை-2009)

மேற்படி பரீட்சையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் எதிர்வரும் 14.08.2010 (சனிக்கிழமை) தொடக்கம் 18.08.2010 (புதன்கிழமை) வரை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பரீட்சாத்திகள் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவத்தினை பல்கலைக்கழக இணையத்தள முகவரியில் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்க முடியும். நேரடியாக விண்ணப்பப் படிவத்தினை பெற விரும்புவோர், வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகில், அலுவலக நேரத்தில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் 09.07.2010 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணையையும், பரீட்சை அனுமதி அட்டையையும் 15.07.2010 (வியாழக்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

முக்கிய குறிப்பு: முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுக்கான கற்கைநெறிக்கட்டணத்தை (ரூ.45,000) 31.08.2010 (செவ்வாய்க்கிழமை) இற்கு முன்னர் செலுத்தி பதிவினைப் புதுப்பித்துக்கொள்ளவும்.

மேலதிக விவரங்களைப் பெறவிரும்புவோர் 021-222-3612, 021-222-3610, 021-222-7519 என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
28.06.2010
(சி/568735)



# தேவை

யாழ்.நாவலர் வீதியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தனியார் கல்வி நிலைய நிர்வாகத்திற்கு பெண் ஒருவர் தேவை.
தொடர்பு: 077 6381371

# கருத்தரங்கு

வவுனியா, கொழும்பு பிரபல இந்து நாகரிக ஆசிரியரான சிவகஜனின் இந்து நாகரிக கருத்தரங்கு யாழில் நடைபெறவுள்ளது. பரீட்சை வழிகாட்டியும் வழங்கப்படும்.
தொடர்பு: 0777562497
கஜேந்திரா

# அரிகல் விற்பனைக்கு

தரமான நாகர் கோயில் மணல்கலந்த அரிகல் விற்பனைக்கு உண்டு.
இடம்: சிவகணேசன் களஞ்சியம்,
163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 0770770529, 0777283811

# பணிப்பெண் தேவை

கணவன்-மனைவி இருவர் உள்ள வீட்டில் தங்கியிருந்து சமையல் மற்றும் ஏனைய வீட்டு வேலைகளை செய்வதற்குப் பணிப்பெண் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்த்துக்கொள்ளலாம்.
தொடர்பு: 0779859218
சாவகச்சேரி

# தவறிவிட்டன

இல.06, நச்சிரி நல்லூர், முத்த விநாயகர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய சு.மன்னவக்கரசன் என்பவரது இலங்கை வங்கிப்புத்தகம், நிவாரண அட்டை, மீளக்குடியமர்ந்தவர்களுக்கான நிதி வழங்கப்பட்ட படிவம் என்பன அடங்கிய பை யாழ்.பிரதான பேருந்து நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும் தொ.பே.0770773707

# வான் சேவை

யாழ்-கொழும்பு AIR PORT மற்றும் விசேட வைபவங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
0777199352, 0779770027, 021 300 8238

# கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள STELLAR -GS-L
... விற்பனைக்குண்டு.
A/C ...
தொடர்பு: T.P.021 3217930



# தவறிவிட்டது

அவுறாம்பிள்ளை ஜேம்ஸ் ஆகிய எனது சாரதி அனுமதிப்பத்திரம் (லைசன்ஸ்) நேற்று 28.06.2010 முற்பகல் 11 மணிக்கும் பிற்பகல் ஒரு மணிக்கும் இடையில் பருத்தித்துறை- நெல்லியடி சாலையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம்:-
0770774628, 0772425031


# மரண அறிவித்தல்

## ஜெயசாந்தி கணேசராசா



அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயசாந்தி கணேசராசா நேற்று (28.06.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம்-பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் கணேசராசாவின் (கண்ணன்-கால்நடை வைத்திய நிலையம், தெல்லிப்பழை) அன்பு மனைவியும் கேசவன், கஜேந்தினி, ஜீவராஜ் (பொலிஸ் பயிற்சி நிலையம், களுத்துறை), நிருஜா, நிவேதினி (மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை 2012 A/L) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயசீலி, ஜெயந்தினி (ஆசிரியை, றோ.க.பாடசாலை, மல்லாகம்), இன்பமதி (ஆசிரியை, அபிராமி மகாவித்தியாலயம், கண்டி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கணேஸ்வரம்,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்
(100023)

# கண்ணீர் அஞ்சலி



எமது சாரணர் மாவட்டத்தின் முன்னாள் சாரண மாவட்ட ஆணையாளரும், கிறிஸ்தோபர் கடல் சாரண அமைப்பின் ஸ்தாபகருமான

## டோறஸ் இராஜசிங்கம்

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்திற்கு தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை சாரணர் சங்கம்,
யாழ்.மாவட்டக்கிளை
(10033)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தூய ஒளி' வெற்றிக்கிண்ணப் போட்டி; றோயல், பாடும்மீன் அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 29

'தூய ஒளி' வெற்றிக்கிண்ணச் சுற்றுப் போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம், குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகம் ஆகியன வெற்றிபெற்றுள்ளன.

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும் இந்தச் சுற்றுப் போட்டியில் ஞாயிற்றுக்கிழமை குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆட்டங்கள் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஐயனார் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய ஐயனார் விளையாட்டுக்கழக அணியை 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றும் ஒரு ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலினைப் பெற்றதினால் ஆட்டம் சம நிலையில் முடிவுற்றது.

வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்குச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய அரியாலை விளையாட்டுக் கழக அணியை 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

(50-23)

## கரப்பந்தாட்ட ஆடுகளம் கால் நடைகளின் தங்குமிடம்

கைதடி, ஜூன் 29



நக்கா வீதியில் கடந்த சில மாதங்களுக்கு முன் நிர்மாணிக்கப்பட்ட கரப்பந்தாட்ட மைதானம் பாவிப்பின்மையாலும், போதிய பராமரிப்பின்மையாலும் கால் நடைகள் தங்கும் இடமாக மாறிவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி மைதானம் ஜனாதிபதியின் புதல்வரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவினால் இலங்கையின் தேசிய விளையாட்டான கரப்பந்தாட்டத்தை உயர்த்தும் நோக்கோடு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டதாகவும் அதனை ஆரம்பித்த காலங்களில் பல கரப்பந்தாட்டக் கழங்கள் இங்கு போட்டிகளை நடத்தியதாகவும் இடைநடுவில் அவர்கள் மைதானத்தை கைவிட இராணுவத்தினர் சில காலங்கள் அங்கு கரப்பந்தாட்டப் பயிற்சிகளை தினமும் காலை, மாலை வேளைகளில் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. பின்பு அவர்களும் அந்த மைதானத்தை பாவிக்காது விட்டவுடன் அது கால்நடைகளின் தங்குமிடமாகத் தற்போது மாறிவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

இப்பகுதியில் கரப்பந்தாட்ட மைதானம் அமைக்கப்பட முன்னர் தாம் கிரிக்கெட் போட்டிகளை நடத்தியதுடன், இங்கு கிரிக்கெட் பயிற்சிகளையும் மேற்கொண்டு வந்ததாகவும், மேற்படி கரப்பந்தாட்ட மைதானம் அமைக்கப்பட்ட பின்னர் தாம் கிரிக்கெட் விளையாட முடியாத நிலைக்கு ஆளாகிவிட்டதாகவும், தற்போது எதுவித விளையாட்டுக்களும் இல்லாது மைதானம் வெறிச்சோடி விட்டதாகவும் அப்பிரதேச இளைஞர் ஒருவர் கவலை தெரிவித்தார்.

எனவே இவ்விடயத்தில் யாழ்ப்பாணக் கரப்பந்தாட்டச் சங்கம் உள்ளிட்ட கரப்பந்தாட்ட ஆர்வலர்கள் கவனமெடுத்து இதனைப் பராமரிப்பதுடன் இவ்விடத்தில் போட்டிகளையும் நடத்த முன்வரவேண்டும்எனவும் இல்லையேல் இவ்விடத்தை கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களுக்குக் கொடுக்க முன்வர வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(50-288)

## மின்னொளியில் கரப்பந்தாட்டம்

கைதடி , ஜூன் 29

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 62 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கைதடி குமரன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியிலான செற்றப் முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை மின்னொளியில் தற்போது நடத்தி வருகின்றது.

இப்போட்டியில் யாழ். மாவட்டத்தை சேர்ந்த பல கழகங்கள் மிக ஆர்வத்துடன் பங்குபற்றுவதாக போட்டி அமைப்பாளர்களால் கூறப்படுகின்றது. இதேவேளை கிரிக்கெட், மரதன்,சைக்கிள் ஓட்டம் உட்பட பல விளையாட்டுப் போட்டிகளையும் இக்கழகம் விரைவில் நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (50-288)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம் , ஜூன் 29

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும் தூயஒளி வெற்றிக் கிண்ணத்துக்காக விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:

பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் செ‌ன்.மைக்கல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம் களம் இறங்கவுள்ளது.

மாலை 5மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஞானமுருகன் விளையாட்டு கழகத்தை எதிர்த்து செ‌ன்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

(50-23)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்



புத்தூர் விக்கினேஸ்வர விளையாட்டுக் கழகம் நடத்திய 11பேர் பங்கு கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இறுதியாட்டத்தில் வெற்றிபெற்ற மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழக அணி வீரர்களைப் படத்தில் காணலாம்.

(படம்: தமிழினியன்)

# கலிஸ்ரஸ் அதிரடி காட்டியதால் கலக்கியது ஹப்பினஸ் வி.க. அணி

யாழ்ப்பாணம், ஜூன் 29

கலிஸ்ரஸின் அதிரடி ஆட்டத்தினால் பெறப்பட்டகோல் கைகொடுக்க வெற்றிக் கனியைச் சுவைத்தது "ஹப்பினஸ்" (பச்சை) அணி.

பாசையூர் மக்கள் படையின் வெள்ளிவிழா ஆண்டினை முன்னிட்டு அங்கத்தவர்களின் இறந்த தாய், தந்தையரை நினைவு கூரும் முகமாக பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகத்தின் ஆதரவுடன் உள்ளூர் அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற ஏழுபேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் பாசையூர் 'ஹப்பினஸ்' (பச்சை) அணியை எதிர்த்து பாசையூர் யுப்பிற்றர்ஸ் (பச்சை) அணி மோதியது.

இதில் இரண்டு அணிகளும் தமது முழுப் பலத்தினையும் பயன்படுத்தி எதிர்அணியினரின் கோல் பரப்பினுள் பல முனைகளிலும் முன்னேறினார்கள்.

இதன்போது யுப்பிற்றஸ் அணியினருக்கு ஒரு மூலை உதை கிடைக்கப்பெற்றது. அதனைப் பிக்லஸ் அடிக்க பந்து நேரே கோல் கம்பத்துக்குள் சென்றது.

ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டபோது 1:0 என்ற கோல் கணக்கில் யுப்பிற்றஸ் அணி முன்னிலையில் இருந்தது.

ஆட்டம் மீண்டும் தொடங்கிய வேளை இரண்டு அணிகளும் கோல்களைப் பெறும் நோக்கத்துடன் ஆக்ரோஷமாக ஆடினார்கள். இதன்போது ஹப்பினஸ் அணி முன்களவீரர் தயான் தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்து ஆட்டத்தினை சமன் செய்தார்.

தொடர்ந்து விறுவிறுப்பாக ஆடிய ஹப்பினஸ் அணியினர் வெற்றிபெற வேண்டும் என்ற நிலையில் தமது முழுத்திறமையையும் வெளிக்காட்டி ஆடத்தொடங்கினார்கள்.

இதன் பயனாக ஹப்பினஸ் அணி வீரன் கலிஸ்ரஸ் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தனது அணிக்கான இரண்டாவது கோலினை அடித்தார்.

ஆட்ட முடிவில் ஹப்பினஸ் அணியினர் தன்னை எதிர்த்து விளையாடிய யுப்பிற்றஸ் அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

இந்த ஆட்டத்தில் சிறந்த கோல் காப்பாளராக ஹப்பினஸ் அணியின் கோல் காப்பாளர் எ.யதீபன் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த வீரர்களாக ஹப்பினஸ் அணி வீரன் கலிஸ்ரஸ், யுப்பிற்றஸ் அணி வீரன் கஜானன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராகப் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயப் பங்குத் தந்தை றோய்பேடினன்ட் அடிகளார் கலந்துகொண்டார். (50-23)

# மாகாணக் கரம் சுற்றுப் போட்டியில் வட இந்து மகளிர் அணி சம்பியன்

வலி.வடக்கு, ஜூன் 29


வட மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய 15 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான கரம் போட்டியில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாகாணச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

கரம் சுற்றுப் போட்டிகள் யாவும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டதில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி வெற்றிபெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மூன்றாம் இடத்தை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பெற்றுக்கொண்டது.

(6-86)






கடந்த 22ஆம் திகதி யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற வடமாகாண ஒலிம்பிக் போட்டி தொடர்பாக நடத்தப்பட்ட பதாகை எழுதும் போட்டியில் முதலிடம்பெற்ற சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கான முதல்பரிசை ப.கௌதமனுக்கு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் வழங்குவதை முதல் படத்திலும் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களான ர.சுகுணன், ப.கௌதமன், சி.வினோத், யோ.குயின்ரன், இ.சுகேந்திரன், ப.ரஜீவன் ஆகியோரையும் நெறிப்படுத்திய ஆசிரியர்களான ர.சுதனராஜ், அ.அன்ரன் கிறேசியன் ஆகியோரையும் அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: ம.பா.மகாலிங்கசிவம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் படித்தவர்களுக்கே அரச வேலை: தமிழ் வளர்ச்சிக்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு

## முதல்வர் கருணாநிதி அறிவிப்பு



கோவை, ஜூன் 29

தமிழகத்தில் தமிழில் படித்தவர்களுக்கே அரச வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கும் வகையில் சட்டம் இயற்றப்படும். தமிழ் வளர்ச்சிக்கென்று தனியாக தமிழக அரசின் சார்பில் ரூபா 100 கோடி சிறப்பு நிதி ஒதுக்கப்படும் - என்று முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் நிறைவு விழாவிலேயே இந்த அறிவிப்பை முதல்வர் வெளியிட்டார்.

மேலும் அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு -

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சங்க காலத்தில் தமிழகத்தை சூழலியல் அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என 5 நிலங்களாகப் பிரித் திருந்தனர். ஒவ்வொரு பகுதியும் வெவ் வேறு நிலப் பகுதிகள், தாவரங்கள், விலங் குகளைக் கொண்டவை.

இந்த அமைப்பு இயற்கை வளம், உணவு உத்தரவாதம், உடல் நலம் காக்கவும், சித்த மருத்துவத்துக்கும் பேருதவியாக இருந்து வந்துள்ளது. மேலும், ஐக்கிய நாடுகள் சபை 2010 ஆம் ஆண்டை உலக உயிரியல் பன்மை ஆண்டாக அறிவித்துள்ளது. இந்த அறிவிப் பின்னைவாக, தமிழக அரசின் சார்பில் ஐந்திணை நில வகைகளில் பாரம்பரிய மரபணுப் பூங்காக்கள் அமைக்கப்படும். வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் இதன் அமைப்பாளராக இருப்பார்.

தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் தொடர்ச்சியாக, தமிழ் வளர்ச்சிக்கென்று தனியாக தமி ழக அரசு சார்பில் ரூபா 100 கோடி சிறப்பு நிதி ஒதுக்கப்படும்.

மத்தியில் தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும் என்பது தமிழக மக்களின் நீண்டகாலக் கோரிக்கை. மத்திய அரசு அனைத்து மாநில மொழிகளையும் ஆட்சி மொழியாக்க காலதாமதம் ஏற்படும் என்பதால் செம்மொழியான தமிழை முதல் கட்டமாக ஆட்சி மொழியாக்க வேண்டும்.

கடல் கொண்ட பூம்புகார் பகுதியையும், குமரிக் கண்டத்தையும் ஆழ்கடல் அகழ்வாராய்ச்சி செய்யத் தேவையான திட்டம் வகுத்து மத்திய அரசு செயற்படுத்த வேண் டும்.

தமிழகத்தின் ஆட்சி மொழியாக, நிர்வாக மொழியாக தமிழ் ஆக்கப்பட வேண்டும் எனும் நீண்ட நாள் கனவு இன்னும் முழுமையாக நிறைவு பெறவில்லை. அதை நிறைவேற்ற அரச அலுவலர்களும் பொதுமக்களும் தேவையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

தமிழின் சிறந்த படைப்புகளை இந்திய மொழிகளிலும், ஐரோப்பிய, ஆசிய மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிடவும், பிற மொழி இலக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்க்கவும், அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணினியியல், மருத்துவம் போன்ற அறிவியல் திறனை வளர்ப்பதற்குத் தேவையான நூல்களை பிற மொழிகளில் இருந்து தமிழாக்கம் செய்யவும் தேவையான பணிகள் மேற்கொள்ளப்படும்.

- இப்படி முதல்வர் தெரிவித்தார்.

# புழல் சிறைக்கு நளினி மாற்றம்



சென்னை, ஜூன் 29

ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று, வேலூர் மத்திய சிறையிலிருந்த நளினி தற்போது சென்னை புழல் மத்திய மகளிர் சிறைக்கு மாற்றப் பட்டுள்ளார்.

நிர்வாக நடவடிக்கை காரணமாகவே அவர் வேலூர் சிறையில் இருந்து புழல் சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார் என சிறைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வேலூர் மகளிர் சிறையில் அடைக்கப் பட்டுள்ள நளினியை, அவரது சட்டத்தரணி புகழேந்தி சனிக்கிழமை சந்தித்துப் பேசினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சட்டத்தரணி புகழேந்தி, புழல் சிறைக்கு மாற்றக் கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரும் முடிவை நளினி கைவிட்டு விட்டார் எனத் தெரிவித்தார்.

இந்நிலையில் நேற்று வேலூர் மத்திய சிறையில் இருந்த நளினி, தற்போது சென்னை புழல் சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# இனிமேல் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை செம்மொழி மாநாடு நடத்த நடவடிக்கை

## கலைஞர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்று முதல்வர் கருணா நிதி கூறியுள்ளார்.

தமிழ்ச் செம்மொழி மாநாடு முடிவடைந்தையொட்டி கோவையில் நேற்று செய்தியாளர்களை முதல்வர் சந்தித்தார். அப்போது மாநாட்டை சிறப்பாக நடத்த உதவியவர்களுக்கும், மாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்கும் கருணாநிதி நன்றி தெரிவித் தார்.

பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு முதல்வர் அளித்த பதில்கள் வருமாறு-

கே - தமிழக சட்டமன்றத்துக்கு முன் கூட்டியே தேர்தல் வருமா?

ப - தமிழ்ச் செம்மொழி மாநாடு வெற்றிகரமாக நிறைவு பெற்றிருக்கும் வேளையில் தமிழக சட்டமன்ற தேர்தல் முன்கூட்டியே நடத்துவது தொடர்பாக பேசத் தேவையில்லை.

கே - செம்மொழி மாநாட்டையொட்டி சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்படுகின்றனர் என ஜெயலலிதா கூறியிருக்கிறாரே?

ப - மத்தியில் தமிழை ஆட்சி மொழியாக கொண்டுவரும் தீர்மானம் நிறைவேற்றப்படும்போது நிச்சயமாக மக்கள் கருத்துக் கேட்கப்படும்.

கே - அடுத்த செம்மொழி மாநாடு எப்போது நடைபெறும்?

ப - ஐந்து ஆண்டுக்கு ஒருமுறை தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இது தொடர்பாக ஜப்பானில் உள்ள உலக தமிழ் ஆராய்ச்சி உள்ளிட்ட அனைத்துத் தமிழ் அமைப்புகளின் ஒத்துழைப்பும் கோரப் படும்.- இப்படி முதல்வர் பதிலளித்தார்.

# இந்தியக் கலாசார வளமைக்கு தமிழரின் பங்கு அளப்பரியது!

## பிரணாப் முகர்ஜி புகழாரம்



கோவை, ஜூன் 29

இந்தியாவின் கலாசார வளமைக்கும், பழைமைக்கும் தமிழர்களின் பங்கு மிக முக்கியமானது - என்று மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி புகழாரம் சூட்டினார்.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் நிறைவு விழாவுக்குத் தலைமை வகித்து அவர் பேசியவை வருமாறு -

செம்மொழியாக அறிவிக்கப்பட்ட பிறகு முதலாவதாக நடைபெறும் இந்த மாநாடு வெற்றிகரமாக நடத்தி முடிக்கப் பட்டுள்ளது பாராட்டுக்குரியது.

தமிழைச் செம்மொழியாக அறிவிக்க இந்திய, வெளிநாட்டு தமிழறிஞர்களின் முயற்சிகளுக்கு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு துணையாக இருந்தது. செம் மொழி மாநாட்டில் 50 நாடுகளில் இருந்து வந்து அறிஞர்கள் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளனர்.

இந்திய நாட்டின் கலாசார வளத்துக்கும், பழைமைக்கும் தமிழர்களின் பங்கு அளப்பரியது. கலாசாரம், நாகரிகம் என அனைத்து முனைகளிலும் தமிழர்கள் பங்களிப்பைத் தந்துள்ளனர்.

செம்மொழி மாநாட்டுடன் தமிழ் இணைய மாநாடும் இணைந்து நடைபெறுவது மேலும் சிறப்பைக் கொடுத்துள்ளது. கணினித் தமிழ் பயன்பாட்டுக்கு ஒற்றைச்சுற்று (யுனிகோட்) முறை உருவாக்குவதற்கு இம் மாநாடு அடித்தளம் அமைத்துள்ளது.

பல நாட்டு அறிஞர்களும் தங்களது கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதற்குச் சிறந்த தளத்தை செம்மொழி மாநாடு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

சிந்துவெளி எழுத்துச் சிக்கலும், திராவிடத் தீர்வும் என்ற ஆய்வில் தமிழர்களின் தொடர்புகள் குறித்து பின்லாந்து அறிஞர் அஸ்கோ பர்ப்போலா தெளிவாக விளக்கியுள்ளார்.

செம்மொழியின் தனித்துவம், சங்க இலக்கியங்களின் தனித்தன்மை குறித்து அமெரிக்க அறிஞர் ஜோர்ஜ் ஹார்ட் விளக்கியுள் ளார். சங்க இலக்கியங்களைப் பற்றிச் சொல்லும்போது இவை வேறு மொழிகளில் இருந்து கடன் வாங்கப் பட்டவை அல்ல எனக் கூறியுள்ளார்.

அதேபோல, தமிழ் இலக்கிய வரலாறு குறித்து பல்வேறு ஆய்வுகளின் முடிவுகளை ரஷ்ய அறிஞர் அலெக்ஸாண்டர் துபியான்ஸ்கி வெளியிட்டுள்ளார். இச் சூழலில் தமிழ்ச் செம்மொழியாகி இருப்பதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை.

இம் மாநாடு அளித்துள்ள உணர்வு இன்னும் பல ஆண்டுகளுக்கு தமிழர்களுக்கு வழிகாட்டுவதாக அமையும்.

-இப்படி அவர் தெரிவித்தார்.

## இந்தியச் செய்திகள்

# தமிழ்மொழி நீடூழி வாழ தமிழர் இனிய தமிழில் பேச வேண்டும்

## அமைச்சர் சிதம்பரம் வேண்டுகோள்

கோவை, ஜூன் 29

தமிழ் வாழும் மொழி. ஆனால் இன்னும் தமிழ் நீடூழி வாழ, தமிழர்கள் இனிய தமிழில் பேச வேண்டும் - என்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கேட்டுக்கொண்டார்.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் நிறைவு நாள் விழாவில் அவர் பேசியவை வருமாறு -

தமிழ்ச் செம்மொழித் தகுதி பெற்றதை நினைத்துப் பெருமைகொள்ளும் அதே நேரத்தில், தமிழ் உலக மொழியாக உயர வேண்டும் என்ற ஆசை நமக்கு இருக்கிறது. இந்த நூற்றாண்டிலும் அடுத்து வரும் ஆயிரமாயிரம் ஆண்டுகளிலும் தமிழ்ச் செம்மொழியாகப் போற்றப்பட வேண்டும். ஒரு மொழியின் ஆதாரமே பேச்சுதான்.

தமிழ் வாழும் மொழி. ஆனால் இன்னும் தமிழ் நீடூழி வாழ, தமிழர்களும், தமிழ்நாட்டில் வாழும் பிறமொழியினரும் தமிழில் பேச வேண்டும். அதற்காக அவரவர் தமது தாய் மொழியில் பேசக்கூடாது என்று அர்த்தம் அல்ல. ஆங்கிலம் அல்லது வேறுமொழிகளைக் கற்றுக்கொள்ளக்கூடாது என்றும் பொருள் அல்ல. தவிர்க்க முடியாத சூழலை விடுத்து தமிழில்தான் பேச வேண்டும்.

குறிப்பாகப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடமாவது தமிழில் பேச வேண்டும்.

புதிய இலக்கியம் தொடர்ந்து படைக்கப் பட்டால்தான் ஒரு மொழி வாழும் மொழியாக இருக்கும். ஆனால், இலக்கியம் மட்டும் ஒரு மொழியின் வளர்ச்சிக்குப் போதுமானது அல்ல. மிகப் பெரும் பகுதி மக்களின் மொழி பயன்பட்டால்தான் அந்த மொழி வாழும் மொழியாக இருக்கும். [illegible]



கள் வரலாற்றை நினைத்துப் பார்க்க வேண்டும். இலக்கியத் தமிழ் போன்று, மருத்துவத் தமிழ், சட்டத் தமிழ், பொருளாதாரத் தமிழ், மேலாண்மைத் தமிழ், அறிவியல் தமிழ், தொல்லியல் தமிழ், கணினித் தமிழ் என்று புதிய வகைகளுக்கு ஊக்கம் அளித்தால் தான் தமிழ் பல்லாண்டு ஓங்கி உயர்ந்த செம் மொழியாக இருக்கும்.

[illegible] குறிப்பிட்ட துறைகளில் போதிய நூல்கள் இல்லை. தமிழில் பல துறைகளிலும் புதிய நூல்கள் காலத்திற்கேற்ப வெளியிடப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

நூலாசிரியர்களே நூல்களை எழுதுங்கள், பாடநூல்களை எழுதுங்கள், பயிற்சி நூல்களை எழுதுங்கள். பாமரர்களும் பயன் பெறும் வகையில் படிக்கக்கூடிய அறிவு சார்ந்த நூல்களை எழுதுங்கள். பதிப்பாளர்களே புதிய நூல்களை வெளியிடுங்கள்.

நூலாசிரியருக்கான சன்மானத்தை நாங்கள் தருகிறோம். முதல் பதிப்பை வெளியிடுவதற்கான செலவை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று தமிழக முதல்வர் கொடியசைத்தால் புதிய நூல்கள் நிறைய வெளிவரும்.

ஒவ்வொரு ஆண்டும் 100 புதிய நூல்களை வெளியிடுவதற்கு ஆண்டுக்கு ரூபா10 கோடி தேவைப்படும். தமிழக அரசுக்கும் தமிழ்ப் புரவலர்களுக்கும் இது பெரிய தொகை அல்ல. ஆண்டுக்கு ரூபா 10 கோடி செலவழித்தால் பல்லாண்டுகளுக்குத் தமிழ் மொழி செம்மொழியாக, உலக மொழியாக ஒளி வீசும். இந்தப் பெரும் செயலை முதல்வர் கருணாநிதி இந்த மாநாட்டிலேயே தொடங்க வேண்டும். அதுவே தமிழ் மக்களுக்கு அளித்த பெரும் கொடையாக இருக்கும் - இப்படி அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட பிரிட்டிஷ் துணைத் தூதுவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை நேற்று நண்பகல் சந்தித்துக் கலந்துரையாடினார். கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான ஈ.சரவணபவன் துணைத் தூதுவரை கைலாகு கொடுத்து வரவேற்பதையும் கூட்டமைப்பு எம்.பிக்களுடன் தூதர் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: உமா)

## இந்தியப் பிரஜையின் மரணம் குறித்து விசாரிக்க பொலிஸ்மா அதிபருக்கு நீதிவான் உத்தரவு

கொழும்பு, ஜூன் 29

கடலில் வீசப்பட்ட இந்தியப் பிரஜையின் சடலம் குறித்து விசாரணை நடத்தும்படி பொலிஸ் மா அதிபருக்கு கல்கிஸை மேலதிக மாஜிஸ்திரேட் நேற்று உத்தரவிட்டார். இந்த மரணம் குறித்து இந்தியாவில் உள்ள இறந்தவரின் உறவினர்களுக்கு அறிவிக்கும்படி இந்தியத் தூதரகத்துக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இறந்தவர் தங்கராசா செல்வராசு என்றும், அவரது வயது 24க்கும் 30க்கும் இடையில் இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. வெள்ளவத்தைப் பகுதியில் உள்ள உணவு விடுதி ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்ட சடலமே புத்தளம் கடற்பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு கடலில் வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குற்றப்புலனாய்வு இன்ஸ்பெக்டர் இந்தச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதால் பொலிஸ் மா அதிபரின் தலைமையில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் புலனாய்வு இன்ஸ்பெக்டரும் மற்றும் ஒருவரும் கைதானது தெரிந்ததே.

'டபிள்கெப்' வாகனத்தில் வந்த இருவர் அந்த வாகனத்தில் இருந்து ஒரு சடலத்தைத் தூக்கிக் கடலில் வீசியதைக் கண்ட மீனவர்கள் சிலர் உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்ததை அடுத்தே இருவரும் கைதாகினர்.

பொலிஸார் 'டபிள்கெப்' வாகனத்தைக் கலைத்துச் சென்று கிராமவாசிகளின் உதவியுடன் இருவரையும் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

புலனாய்வு இன்ஸ்பெக்டருடன் கைதான மற்ற நபர் உணவு விடுதியின் உரிமையாளர் என்று கூறப்படுகிறது. (அ-சி)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 29

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை ஆவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களுக்கான இல்ல மெய்வன் மைப் போட்டிகள் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

நிலையத் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் கலந்துகொள்வார். (ஒ- 207)

## தென்மராட்சி இணைப்புக் குழு கூட்டங்கள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 29

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழு, விவசாயக்குழு ஆகிய கூட்டங்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற் போடப்பட்டுள்ளன என்று பிரதேச செய லர் செ. ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (ஒ- 207)

## ஐ.நாவின் நடவடிக்கையை சகல கட்சிகளுடனும் இணைந்து எதிர்கொள்வதற்கு ஐ.தே.க. தயார்

கொழும்பு, ஜூன் 29

யுத்தத்தின் இறுதி நாள்களில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக ஐ.நா.சபை நிபுணர்கள் ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தி தெரிவித்துள்ளது. அரசு ராஜதந்திரத்துடன் எதிர்க்கட்சிகளையும் இணைத்துக்கொண்டு இதனை எதிர்கொள்ள வேண்டும் என ஐ.தே.கட்சிப் பேச்சாளர் கயந்த கருணாதிலக நேற்றுத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சிப் பேச்சாளர் கயந்த கருணாதிலக எம்.பி. நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இலங்கை குறித்த விடயங்களில் சர்வதேச தலையீடு இருக்கக்கூடாது. இருந்தும் இந்த நிலை ஏற்பட்டது ஏன்? இதற்குக் காரணம் பயங்கரவாதத்தை ஒழித்த படைவீரர்களா? இல்லவே இல்லை. யுத்தத்துக்கு ஆதரவளித்த மக்களா? இல்லை. எதிர்க்கட்சிகளா? இல்லை. மனித உரிமை மீறல்கள், அத்துடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 17 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை அரசு இதுவரை அமுல்படுத்தவில்லை. - இவ்வாறு அவர் தெரிவித்தார். (அ-சி)



இலங்கையின் யுத்தக் குற்றம் தொடர்பாகத் தமக்கு ஆலோசனை வழங்க ஐ.நா. பொதுச் செயலாளர் நாயகம் பான் கீ மூன், குழு நியமித்ததை எதிர்த்து ஜாதிக ஹெல உறுமய நேற்று கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்திற்கு முன்னால் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது எடுக்கப்பட்ட படம்.

## இனப்பிரச்சினைக்கு உரிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கருத்தை வெளியிட்டார்.

**ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை குறித்துக் கவலைப்பட வில்லை**

கேள்வி:- 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகையை நிறுத்தப்போவதாக ஐரோப்பிய ஒன்றியம் அச்சுறுத்தியுள்ளதே?

ஜனாதிபதி:- இது குறித்து நான் கவலைப்படவில்லை. இந்தச் சலுகை ஆழிப்பேரலைக்குப் பின்னரே வழங்கப்பட்டது. இப்போது ஆழிப்பேரலை புனரமைப்புப் பணிகள் முடிவடைந்துவிட்டன. அந்த நேரத்துக்கு அது எமக்கு உதவியாக இருந்தது. நாம் இப்போது புதிய சந்தைகளைத் தேடவேண்டியுள்ளது. எமது மக்களுக்கு இது தெரியவேண்டும். நான் தேர்தலை அறிவித்த உடனேயே ஐரோப்பிய ஒன்றியம் 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகையை நிறுத்துவதாக அறிவித்தது. இது அரசியல் உள்நோக்கம் கொண்ட தீர்மானமாகும்.

ஐரோப்பிய ஒன்றியம் இந்த 'ஜி.எஸ். பி.பிளஸ்' வரிச்சலுகையை வழங்காவிட்டால் வைத்துக்கொள்ளட்டும். அது எனக்கு வேண்டாம். நாம் அங்கு சென்று என்ன செய்தோம் என்பதை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு விவரித்தோம். நாம் இப்போது நல்லிணக்கக் குழுவை நியமித்துள்ளோம். எவரது வேண்டுகோள் கருதியும் நான் இக்குழுவை நியமிக்கவில்லை.

கேள்வி:- நீங்கள் இந்நாட்டில் பிரபல்யமாக இருக்கின்றீர்கள். இருந்தும் நீங்கள் சர்வதேசத்தின் கௌரவம் குறித்தோ அல்லது நாட்டினதும் உங்கள் தனிப்பட்டதுமான கௌரவம் குறித்தோ கவலைப்படவில்லையா?

ஜனாதிபதி:- நான் ஏன் மற்றவர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்? இந்தியாவும் அயல் நாடுகளும் எம்முடன் நல்லுறவைப் பேணினால் அது எனக்குப் போதும்.

கேள்வி:- மனித உரிமை விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபை மோசமான கருத்துகளைக் கொண்டிருக்கிறது. பலர் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணைகள் வேண்டும் எனக் கேட்டுள்ளனர்.

ஜனாதிபதி:- அவர்கள் எமது நாட்டின் நிலையைப் புரிந்துகொள்ள வேண்டும். முன்னர் அவர்கள் பிரபாகரன் உலகிலேயே மிகக் கொடூரமான பயங்கரவாதி என்றனர். நான் அவரைத் தோற்கடித்த பின்னர் திடீரென வேறு விதமாகப் பேசுகின்றனர். பின்லேடன் தோற்கடிக்கப்பட்டாலும் அவர்கள் இதையே கூறுவார்களோ என நான் ஆச்சரியப்படுகிறேன். அவர்கள் எமக்கு ஆலோசனை தெரிவிக்கலாம். ஆனால் கட்டாயப்படுத்த முடியாது. அதைச் செய்....இதைச் செய்... என எவரும் எம்மைக் கட்டாயப்படுத்த முடியாது.

**வடக்கு, கிழக்கில் சிங்கள் மக்கள் குடியேறலாம்**

கேள்வி:- வடக்கு, கிழக்கில் முழுமையாக சிங்களமயப்படுத்தப்படு மென்ற அச்சம் நிலவுகின்றது. பெருந்தொகையான சிங்கள மக்கள் அங்கு குடியேற்றப்படுவார்களா?

ஜனாதிபதி:- சிங்களவர்கள் அங்கு வாழ்ந்தார்கள். பிரபாகரனால் விரட்டியடிக்கப்பட்டனர். யாராவது அங்கு குடியேற வேண்டுமானால் குடியேறலாம். கொழும்பைப் பற்றி யாராவது கூறமுடியுமா? தமிழர்கள் பெருமளவில் வந்து குடியேறவில்லையா?

கேள்வி:- 25 ஆயிரம் சீனத் தொழிலாளர்கள் இலங்கையில் கடமையாற்றுவதாகக் கூறப்படுவது உண்மையா?

ஜனாதிபதி:- அது எப்படி 25 ஆயிரமாக இருக்கமுடியும். அவர்கள் பல் கட்டுபவர்களாக இருக்கலாம். அவர்கள் நீண்டகாலமாக இங்கு இருக்கின்றனர். சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக்காலத்தில் பண்டாரநாயக்க இந்நாட்டை சீனாவுக்கு விற்றுவிட்டதாகப் பிரசாரம் செய்யப்பட்டது எனக்கு ஞாபகம் வருகின்றது. அவர்கள் இந்தப் பல் கட்டும் சீனர்களின் படத்துடன் பிரசாரத்தை மேற்கொண்டனர். சீனா,சீனா எனக் கூறி இந்தப் படங்களை அவர்கள் வெளியிட்டார்கள். இப்போதும் சிலர் இந்தியா எனக் கூச்சலிடுகின்றனர். இப்போது சிலர் நாங்கள் நாட்டை இந்தியாவுக்கு விற்றுவிட்டதாகக் கூறித் திரிகின்றனர். மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) நாம் இந்த நாட்டை இந்தியாவுக்கு விற்றுவிட்டோம் என்று பிரகடனப்படுத்திவிட்டது.

**இந்தியா சீனாவுடனான உறவுகளின் வேறுபாடு**

கேள்வி:- இவ்வளவு அபிவிருத்திகளுக்கும் மத்தியில் சீனாவுடனான உறவை எப்படிப் பார்க்கின்றீர்கள்?

ஜனாதிபதி:- அணிசேரா நாடுகளில் எமது நாடும் ஒன்று. எமது அயலவர்கள் இந்தியர்கள். நான் எப்போதும் கூறுவது போல் இந்தியர்கள் எமது உறவினர்கள். அசோகா காலத்திலிருந்தே இந்த உறவு இருந்து வருகின்றது. கலாசாரம் முதல் நீர்ப்பாசன, நிர்மாணங்கள் போன்றவற்றில் 2,500க்கும் மேற்பட்ட தொடர்பு எமக்கிடையே உள்ளது. எம்மால் இதை முறித்துவிட முடியாது. இதனால் ஏனைய நாடுகளுடன் வர்த்தக அனுகூலங்களைப் பெறமாட்டோம் என அர்த்தம் கொள்ளக் கூடாது. சீனா அல்லது ஜப்பான் எந்த நாடாக இருந்தாலும் அவர்கள் இங்கு வருவார்கள். கட்டியெழுப்புவார்கள். திரும்பிச் செல்வார்கள். இந்தியர்கள் வருவார்கள். கட்டியெழுப்புவார்கள். அவர்கள் இங்கிருப்பார்கள். இதுதான் வேறுபாடு. எங்கள் உறவுகள் பலமிக்கதாக இருக்கும்போது நாங்கள் நெருக்கமாக இருப்போம். இந்த மாதிரியான பிரசாரம் இப்போது ஆரம்பித்துள்ளது. இந்தியா ஆட்சி புரிய ஆரம்பித்துவிட்டதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். சீனாவுடனும், பாகிஸ்தானுடனும் இந்தியா உணர்வுபூர்வமாக நடந்து கொள்வதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். எனவே, அவர்கள் இந்தியர்களைக் குழப்ப இந்த மாதிரியான பிரசாரத்தை மேற்கொள்வர். புலிகளும் இதே தந்திரோபாயத்தை மேற்கொண்டனர்.

கேள்வி:- உங்களது சமீபத்திய இந்திய விஜயத்தை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்? பல்வேறு துறைகளில் இணக்கப்பாடு ஏற்பட்டதாகக்கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்ததே.

ஜனாதிபதி:- இது ஒரு ஆக்கபூர்வமான விஜயமென்று நான் நினைக்கின்றேன். அபிவிருத்தி தொடர்பான ஒப்பந்தங்களே கைச்சாத்திடப்பட்டன. விசேடமாக வடக்கு அபிவிருத்தி, அடித்தள அபிவிருத்தி, ரயில் போக்குவரத்து, வீடமைப்புத் திட்டங்கள் (வடக்கு, கிழக்குக்கு 50 ஆயிரம் வீடுகள்), சம்பூர் மின் நிலையம், இவை அனைத்தும் நாட்டின் அபிவிருத்திக்கு அத்தியாவசியமா னதாகும்.

(அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பைத் தாக்குதல் விவகாரம் குறித்து இந்தியாவின் கருத்தால் பாக். அதிருப்தி

இஸ்லாமாபாத், ஜூன் 29

மும்பைத் தாக்குதல் விவகாரத்தில் பாகிஸ்தானின் நடவடிக்கை போதுமானதாக இல்லை என்ற இந்தியாவின் கருத்துக்கு பாகிஸ்தான் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளது.

மும்பைத் தாக்குதல் வழக்கை தாங்கள் தீவிரமாக எடுத்துக்கொண்டுள்ளனர் என்றும் இந்தியா ஊகித்து பேசுகிறது என்றும் பாகிஸ்தானின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஷா முகமது குரேஷி தெரிவித்துள்ளார்.

மும்பைத் தாக்குதல் வழக்கில் பாகிஸ்தான் நடவடிக்கை திருப்தி அளிக்கவில்லை என்று இந்தியா தொடர்ந்து கூறி வருகிறது.

சில தினங்களுக்கு முன்னர் பாகிஸ்தானில் நடைபெற்ற சார்க் நாடுகளின் உள்துறை அமைச்சர்கள் மாநாட்டில் பங் கேற்கச் சென்ற இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரமும் இதே அதிருப்தியை பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக்கிடம் வெளிப்படுத்தியிருந்தார்.

மும்பைத் தாக்குதலுடன் தொடர்புடைய தீவிரவாதி ஹபீஸ் சயீத் உட்பட அனைத்துக் குற்றவாளிகள் மீதும் பாகிஸ்தான் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சிதம்பரம் வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் போது, மும்பைத் தாக்குதல் தொடர்பான இந்தியாவின் கருத்துக்கு பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குரேஷி அதிருப்தி தெரிவித்தார்.

மும்பைத் தாக்குதல் வழக்கில் பாகிஸ்தான் அதிக அக்கறை கொண்டுள்ளது. இதுகுறித்து இந்தியா சந்தேகிக்கக்கூடாது. கேள்வி எழுப்பக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மும்பைத் தாக்குதல் வழக்கு விசாரணையை முன்னெடுத்துச் செல்ல பாகிஸ்தான் விரும்பவில்லை என்று இந்தியா குற்றஞ்சுமத்துகிறது. இந்தக் குற்றச்சாட்டை ஏற்க முடியாது என்றும் அவர் கூறினார்.

மும்பைத் தாக்குதல் வழக்கு விசாரணையை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்பதில் பாகிஸ்தான் உறுதியாக உள்ளது. ஆனால், வழக்குத் தொடர்பான தகவல்கள் பரிமாற்றத்தில் ஏற்படும் தாமதத்தால் வழக்கு விசாரணை தாமதமடைகிறது. இதை இந்தியா புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மும்பைத் தாக்குதல் வழக்குத் தொடர்பாக உண்மை நிலைவரத்தைப் புரிந்துகொள்ளாமல் ஊகித்துப் பேசக்கூடாது. இது குறித்து இரு நாடுகளும் அமர்ந்து பேச்சுகள் நடத்தவேண்டும். அப்போதுதான் இரு நாடுகள் எதிர்கொண்டுவரும் சவால்கள், பிரச்சினைகள் ஆகியவை குறித்து புரிந்துகொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

பயங்கரவாதத்தால் இந்தியா மட்டுமல்ல, நாங்களும் (பாகிஸ்தான்) கடுமையாகப் பாதிக்கப்படுகிறோம். இதனால் பயங்கரவாதத்தை வேரறுக்கவேண்டும் என்பதில் நாங்களும் உறுதியாகவுள்ளோம். இந்த விடயத்தில் இந்தியாவும், பாகிஸ்தானும் இணைந்து செயலாற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.



கனடா ரொறண்டோ நகரில் உலகத் தலைவர்கள் அனைவரும் வட்டமேசை சந்திப்புக் கூட்டத்தில் கூடி ஜி-20 மாநாட்டை ஆரம்பித்து வைத்தனர்.

## உலக அரங்கில்

# இந்திய-பாக். உளவுத்துறை தலைவர்கள் சந்தித்துப் பேச்சு

இஸ்லாமாபாத், ஜூன் 29

இந்திய, பாகிஸ்தான் உளவுத்துறைத் தலைவர்கள் இஸ்லாமாபாத்தில் சனிக்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்திய உளவுத்துறை இயக்குநர் ஜெனரல் ராஜிவ் மாத்தூர், பாகிஸ்தானின் உளவுத்துறைத் தலைவர் ஜாவித் நூர் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். பாதுகாப்பில் இரு நாடுகளுக்கிடையிலான ஒற்றுமை, தீவிரவாத ஒழிப்பு ஆகியவை குறித்து இருவரும் விவாதித்தனர்.

இதற்கு முன்னர், இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற சார்க் உள்துறை அமைச்சர்கள் மாநாட்டின்போது, இரு நாடுகளும் இனி ஒற்றுமையுடன் மும்பைத் தாக்குதல் போல் இனி எதுவும் நிகழாமல் தடுக்க முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்று பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் கேட்டுக் கொண்டுள்ளார்.

மும்பை 26/11 வழக்கு உட்பட தீவிரவாத விடயத்தில் பாகிஸ்தானின் புலனாய்வு அமைப்பும், இந்தியாவின் சி.பி.ஐயும் கூட்டாகச் செயற்படும் என்று இந்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

# தொழில்திறன் வாய்ந்தவர்கள் ஆஸியில் குடியேற தடையில்லை

## புதிய பிரதமர் ஜூலியா தெரிவிப்பு

மெல்போர்ன், ஜூன் 29

தொழில் திறன் வாய்ந்தவர்கள் ஆஸ்திரேலியாவில் குடியேற தடையில்லை என புதிய பிரதமர் ஜூலியா கிலார்ட் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் புதிய பெண் பிரதமர் ஜூலியா கிலார்ட் கடந்த வாரம் பொறுப்பேற்றார். முந்தைய பிரதமர் கெவின் ருத்தின் குடியேற்ற விதிமுறைகளில் இவர் மாற்றம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து ஜூலியா குறிப்பிடுகையில், ''ஆஸ்திரேலியாவில் தற்போதைய ஜனத்தொகை 2 கோடியே 20 இலட்சம். 2050 ஆம் ஆண்டுக்குள் மூன்றரை அல்லது நான்கு கோடி அளவுக்கு சனத்தொகையை உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது'' என்றார்.

''இதற்காக குடியேற்ற விதிகளைத் தளர்த்தி வெளிநாட்டினரை குடியேறச் செய்து, உள்நாட்டில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நாங்கள் முயலவில்லை. ஆஸ்திரேலியாவின் முன்னேற்றத்தை பாதிக்காத வகையில் குடியேற்ற நடைமுறை இருக்க வேண்டும் என்பதையே நான் விரும்புகிறேன்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''குறிப்பாக தொழில் திறன் பெற்றவர்கள் ஆஸ்திரேலியாவில் குடியேற தடை ஏதும் இல்லை. மெல்போர்ன் நகரில் ஏற்கனவே 70 இலட்சம் பேர் வசிக்கின்றனர். சிட்னியில் ஜனத்தொகை 75 இலட்சத்தை தாண்டிவிட்டது'' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

''போதிய வசதியில்லாமல் குடியேற்ற விதிமுறையை தளர்த்துவது குறித்து யோசிக்க வேண்டியுள்ளது''என்றும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

கடந்த ஆண்டு இந்தியா, பிலிப்பைன்ஸ், மலேஷியா, இந்தோனேஷியா, வியட்நாம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 3 இலட்சம் பேர் ஆஸ்திரேலியாவுக்கு குடிபெயர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க வான்வழித் தாக்குதல்: ஆப்கானில் 8 தீவிரவாதிகள் பலி!

காபூல், ஜூன் 29

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவத்தினர் மேற்கொண்ட வான்வழித் தாக்குதலில் 8 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளை ஆப்கன் இராணுவத்துடன் இணைந்து, அமெரிக்க இராணுவத்தினர் வேட்டையாடி வருகின்றனர். கடந்த 3 மாதங்களாக ஏராளமான தலிபான் தீவிரவாதிகள், அமெரிக்க இராணுவம் அடங்கிய நேட்டோ படைத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், வடக்கு ஆப்கானிஸ்தான் பகுதியிலுள்ள குந்தூஸ் மாகாணத்தில் அமெரிக்க இராணுவம் சனிக்கிழமை நடத்திய வான்வழித் தாக்குதலில் 8 தலிபான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என ஆப்கன் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தத் தாக்குதலில் பொதுமக்கள் எவரும் காயமடையவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.



இரண்டு நாள்கள் அரசு முறை பயணமாக வெனிசுலா வந்திருந்த சிரியா ஜனாதிபதி பஷார் அல்-அசாத்தை (வலது), கரகாஸ் நகரில் வெனிசுலா ஜனாதிபதி ஹூகோ சாவிஜ் இராணுவ மரியாதையுடன் வரவேற்றார்.

# கிளியோபாட்ராவாக நடிக்க ஏஞ்சலினா ஜூலி ஒப்பந்தம்

லொஸ் ஏஞ்சல்ஸ், ஜூன் 29

எகிப்திய பேரழகி கிளியோபாட்ராவாக, ஹொலிவுட் நடிகை ஏஞ்சலினா ஜூலி நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். எகிப்திய பேரழகி கிளியோபாட்ராவின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட, 'கிளியோபாட்ரா - ஏ லைப்' என்ற திரைப்படம் 1963 ஆம் ஆண்டு வெளியானது.

அதில், கிளியோபாட்ராவாக எலிசபெத் டெய்லரும், அவள் காதலன் மார்க் அன்ரனியாக, டெய்லரின் நிஜ காதலர் ரிச்சர்ட் பர்டனும் நடித்திருந்தனர். இந்தத் திரைப்படம் இரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

இந்நிலையில், அதே திரைப்படம், நவீன தொழில்நுட்ப உதவியுடன் மீண்டும் தயாரிக்கப்படுகிறது. ஸ்காட் ருடின் என்ற தயாரிப்பாளர் இந்தப் படத்தின் உரிமையை வாங்கியுள்ளார். இந்தப் படத்தில், கிளியோபாட்ராவாக நடிப்பதற்கு ஹொலிவுட்டின் பிரபல நடிகை ஏஞ்ச லினா ஜூலி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

மார்க் அன்ரனியாக, ஏஞ்சலினாவின் வாழ்க்கைத் துணைவர் பிராட் பிட் நடிக்கிறார். இதுதொடர்பாக, படத் தயாரிப்பு நிறுவன அதிகாரிகள் குறிப்பிடுகையில், ''கிளியோபாட்ரா திரைப்படம், தற்போதைய நவீன தொழில்நுட்பத்தைக் கொண்டு, சிறுசிறு மாற்றங்களுடன் புதிதாகத் தயாரிக்கப்படுகிறது'' என்றனர்.

''இந்த கதாபாத்திரத்திற்கு ஏஞ்சலினா கச்சிதமாகப் பொருந்துகிறார். ஏற்கனவே, ஒஸ்கர் விருது பெற்றுள்ள இவர், இந்தப்படத்தின் மூலமாகவும் விருது பெறுவார் என்று நம்புகிறோம்'' என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தப் படத்தின் இயக்குநர் ஸ்டீவன் சோடர்பெர்க். இவர் ஏற்கனவே, 'சே' என்ற புகழ்பெற்ற படத்தை இயக்கியுள்ளார்.

# பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் கிடைக்க பிரி. - பிரான்ஸ் ஆதரவு

டொரண்டோ, ஜூன் 29

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி அளிப்பதற்கு பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

ஜி-20 உச்சி மாநாடு கனடாவின் டொரண்டோ நகரில் நடைபெற்று வருகிறது. இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் டொரண்டோ வந்துள்ளார்.

மாநாட்டையொட்டி சனிக்கிழமை இரவு நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரிட்டனின் புதிய பிரதமர் டேவிட் கெமரூன், பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோஸி ஆகியோரை பிரதமர் மன்மோகன் சிங் சந்தித்துப் பேசினர்.

பிரிட்டிஷ் பிரதமராக கெமரூன் பதவியேற்ற பின்னர் அவரை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இப்போதுதான் முதல் தடவையாக சந்தித்துள்ளார். மேலும் இந்தியாவுக்கு வருமாறு கெமரூனுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

இந்தியப் பிரதமரின் அழைப்பை ஏற்று ஜூலையில் இந்தியா வருவதற்கு கெமரூன் உறுதி அளித்தார். உயர்கல்வி பயில்வதற்காக கூடுதல் எண்ணிக்கையில் இந்திய மாணவர்கள் பிரிட்டன் வரவேண்டும் என்றும் பிரதமர் கெமரூன் அழைப்பு விடுத்தார். பின்னர் இருவரும் ஜி20 உச்சி மாநாடு குறித்து தங்களது கருத்துகளைப் பரிமாறிக்கொண்டனர்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி அளிப்பது தொடர்பாக பிரிட்டன் ஆதரவு அளிக்கும் என்று அப்போது மன்மோகன் சிங்கிடம் கெமரூன் உறுதி அளித்தார்.

பின்னர் பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோஸியை, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் சந்தித்துப் பேசினார். ஜனாதிபதி சர்கோஸி, அவரது மனைவி கர்லா புரூனி ஆகியோர் மீண்டும் இந்தியாவுக்கு வரவேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங் அழைப்பு விடுத்தார்.

ஜி20 உச்சி மாநாடு மட்டுமல்லாமல், உலக விவகாரங்களில் இந்தியா முக்கியமான பங்கை ஆற்றவேண்டும் என்று பிரான்ஸ் விரும்புகிறது என்றும் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் சர்கோஸி தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் பதவியைப் பெற்றுத்தர பிரான்ஸ் ஆதரவு அளிக்கும் என்றும் அவர் தெரிவித்துக் கொண்டார்.

இந்தியாவுடன் வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் ஐரோப்பிய நாடுகளில் பிரான்ஸ் ஆறாவது இடத்தைப் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் அமைச்சரவைக் கூட்டம் அரசியல் நாடகமல்ல என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஜூன் 29

பூகோள ரீதியாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டுள்ள போதிலும் அவையும் இலங்கையின் ஒரு அங்கமே என மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதன் காரணமாகவே அமைச்சரவைக் கூட்டம் கிளிநொச்சியில் ஏற்பாடு செய்யப்பட்டதே தவிர அதன் பின்னணியில் அரசியல் நோக்கம் எதுவும் கிடையாது - என்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதம செயலாளரும் சுகாதார அமைச்சருமான மைத்திரிபால சிரிசேன தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி அமைச்சரவைக் கூட்டம் வெறும் அரசியல் நாடகமென ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஒருவர் விமர்சனம் செய்த தையடுத்தே அமைச்சர் மேற்கண்ட விளக்கத் தைக் கொடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சர்வதேச ரீதியில் மீண்டும் துளிர்விடத் துடிக்கும் பயங்கரவாதத்தை அழித்தொழிப்பதற்கு அரசு தயாராகவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியும் அதனைச் சார்ந்துள்ள கட்சிகளும் நாம் யுத்தத்தில் பெற்ற மாபெரும் வெற்றியைக் குறைத்து மதிப்பிடுகின்றன. அத்துடன் சர்வதேச மட்டத்தில் குறைசொல்லிக் கொண்டிருப்பதையும் வாடிக்கையாகக் கொண்டுள்ளன.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் பயங்கரவாதத்திலிருந்து மீட்கப்பட்டுள்ள போதும் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னும் தமக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை ஜீரணித்துக் கொள்ள முடியாமல் தவிக்கின்றனர்

வடக்கு, கிழக்கு என பிரித்துப்பார்க்கும் சொல் இலங்கை அகராதியிலிருந்து நீக்கப்படப் போகும் நாள் வெகுதூரத்தில் இல்லை - இப்படி அமைச்சர் குறிப்பிட்டார். (சி)



இந்தியக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிர்மல் வர்மா நேற்று அலரிமாளிகையில் வைத்து ஜனாதிபதியைச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம். அருகில் வைஸ் அட்மிரல் திஸர சமரசிங்கவும் காணப் படுகின்றார்.

# மலேசிய இலங்கையர்கள் ஐ.நா செயலருக்கு மகஜர்

கொழும்பு, ஜூன் 29

மலேசியாவில் வாழ்கின்ற இலங்கையர்களால் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குடியேற்றவாசிகள் சுமார் பத்தாயிரம் பேரின் கையெழுத்துக்களுடன் இந்த மகஜர் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படு கின்றது.

மூன்றாவது நாடொன்றுக்குத் தங்களை அனுப்பவைக்குமாறு கோரியே இவர்கள் இந்த மகஜரை அனுப்பி வைத்துள்ளனர் என மலேசி யாவுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி டி.டி. ரணசிங்க கூறினார்.

எனினும், இவர்கள் இலங்கைக்குச் சென்று வாழ்வதில் எவ்வித சிக்கலும் இல்லை என் றும் ரணசிங்க குறிப்பட்டார்.

இவர்கள் பொருளாதார அகதிகள் என்றே அழைக்கப்படுகின்றனர் எனக் குறிப்பட்ட இலங்கைத் தூதுவர், இந்த இலங்கையர்கள் அதிக பணத்தைச் செலவிட்டு வேறு நாடுக ளுக்குச் செல்வதற்காக மலேசியா வந்துள்ள னர் என்றும் குறிப்பிட்டார்.

இவர்கள் இலங்கையில் இருந்து தப்பிச் சென்றவர்கள் அல்லரெனவும் நீண்டகாலத்திற்கு முன்னரே மலேசியாவுக்கு வந்த இவர் கள் படகுகள் மூலம் வேறு நாடுகளுக்குச் செல்ல முற்படுகின்றனர் என்றும் மேலும் தெரிவித்தார்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடியில் 35 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டவர் கைது!

கொழும்பு, ஜூன் 29

மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்பு பெற்றுத் தருவார் எனக் கூறி பலரிட மிருந்து லட்சக்கணக்கான ரூபா பணத்தை மோசடி செய்தார் எனக் கருதப்படும் நபரொருவரை குருநாகல் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். சந்தேக நபருக்கெதிராக நிக்கவெரட் டிய நீதிமன்றத்தில் 35 வழக்குகள் பதியப்பட்டுள்ளன. விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் நீதிமன்றத்திற்கு சமுகமளிக்காமல் தலைமறைவானதால் அவ ருக்கெதிராக 35 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

குருநாகல் சாரகம பிரதேசவாசியான இவர் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்பு பெற்றுத் தருவார் எனக் கூறி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள இளை ஞர் - யுவதிகளிடம் இருந்து தலா ரூபா 25 ஆயிரம் முதல் ஒரு லட்சம்வரை பணம் பெற் றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குருநாகல் வாரியப்பொல, கண்டி, பலகல்ல, நிக்கவரெட்டிய மஹாவ ஆகிய பகுதி களைச் சேர்ந்த இளைஞர் - யுவதிகளிடமே இவர் மோசடி செய்துள்ளார். இவர் குருநாகல் பிரதேச வயலொன்றில் பதுங்கி ருந்த போதே பொலிஸாரால் கைது செய்யப்பட் டுள்ளார். குருநாகல் பொலிஸ் இன்ஸ்பெக்டர் அஜித் வங்கநாதவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

# சட்டவிரோதமாக துப்பாக்கி தயாரித்து வந்தவர் கைது!

கொழும்பு, ஜூன் 29

அநுராதபுரம் கலன்பிந்துனுவெவ பிரதேசத்தில் இரகசியமாக இயங்கிவந்ததாகக் கூறப்படும் சட்டவிரோத ஆயுதத் தொழிற்சாலை ஒன்று இராணுவத்தினரால் சுற்றிவளைக் கப்பட்டதில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பு இராணுவக் கட்டளையிடும் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து விசேட இராணுவக் குழுவொன்று இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த சுற்றிவளைப்பின் போது 12 மில்லி மீற்றர் துப்பாக்கி, அதனை தயாரிக்க மரத்தால் உருவாக்கப்பட்ட ஐந்து அச்சுகள், இரும்புக் குழாய்கள், வெற்றுக் குண்டுகள் என்பவற்றுடன் யானைத் தந்தங்கள் உட்பட பலதரப்பட்ட மிருகங்களின் கொம்புகள், இராணுவத்தினர் காடுகளின் பயன்படுத்தும் சீருடை ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பெந்திவெவ பிரதேசவாசியான சந்தேக நபர் நீண்டகாலமாக இந்த சட்டவிரோத ஆயுதத் தொழிற்சாலையை நடத்திவந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் பல பாகங்களிலும் உள்ள பாதாளக் கும்பல்களுக்கும், சட்டவிரோத வேட்டையாளர்களுக்கும் ஆயுதங்கள் விற்பனை செய்து வந்துள்ளார் என ஆரம்ப விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

இந் நபருடன் தொடர்புடைய மேலும் பலர் தேடப்பட்டு வருகின்றனர். கைது செய்யப்பட்ட நபர் கைப்பற்றப்பட்ட பொருள்களுடன் மேலதிக விசாரணைக்காக கெக்கிராவ பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் - என மேலும் தெரிவிக்கப்பட்டது.

# ஜி.எஸ்.பி. சலுகை நீக்கத்துக்கு அரசின் நடவடிக்கையே காரணம்

## ஐ.தே.க. குற்றஞ்சாட்டுகிறது

கொழும்பு, ஜூன் 29

'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகை நீடிக்கப்பட்டதற்கு அரசின் நடவடிக்கைகளே காரணம் என ஐ.தே.கட்சி குற்றம் சாட்டுகிறது.

சுதந்திர வர்த்தக வலயத்தை ஐக்கிய தேசியக் கட்சியே இலங்கைக்கு அறிமுகப்படுத்தியது. நகரங்களில் இயங்கிய ஆடைத் தெழிற்சாலைகளை கிராம மட்டத்துக்கு எடுத்துச் சென்றதும் ஐக்கிய தேசியக் கட்சியே என ஐ.தே.கட்சிப் பேச்சாளர் கயந்த கருணாதிலக நேற்றுத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

சர்வதேசத்துக்குப் பாடம் புகட்டப் போகின்றோம் எனத் தேர்தல் காலத்தில் மேடைகளில் சண்டித்தனம் பேசியவர்கள் அந்த நடைமுறையைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்கின்றனர். இது உள்ளூராட்சித் தேர்தல்களைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளும் நடவடிக்கையாக இருக்கலாம்.

இதுபோன்ற நடவடிக்கைகள், மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றப் போவதில்லை. நாட்டில் முறையான பொருளாதார அரசியல் கொள்கைகள் இருக்கவேண்டும். அதன்படி செயற்பட்டால் இதுபோன்ற சிக்கல்கள் ஏற்படாது - என்றார் அவர்.

(அ-சி)

# தாதியர் விரிவுரையாளர்கள் பகிஷ்கரிப்பிற்கு முஸ்தீபு!

கொழும்பு, ஜூன் 29

அரச தாதியர் பயிற்சிப் பாடசாலைகளில் கடமையாற்றும் விரிவுரையாளர்கள் ஜூலை மாதம் முதலாம் திகதிமுதல் தாம் விரிவுரைகளைப் பகிஷ்கரிக்கப் போகின்றனர் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேலதிக வேலைக்கான கொடுப்பனவும், இதர சலுகைகளும் வழங்கப்படாததற்கு ஆட்சேபனை தெரிவித்தே இந்த தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளனர் என அரச தாதியர் பாடசாலை விரிவுரையாளர் சங்கத் தலைவர் முத்தெட்டுவே ஆனந்ததேரர் தெரிவித்துள்ளார்.

இவ்விரிவுரையாளர்களுக்கு சில வாரங்களுக்கு முன்பு 36 மணித்தியால மேலதிக பணிக்கான கொடுப்பனவுக்கு சுகாதார அமைச்சு இணக்கம் தெரிவித்திருந்தது.

இருந்த போதிலும் இதுவரை அக்கொடுப்பனவு ழங்கப்படவில்லை. அத்துடன் விரிவுரையாளர்கள் முகம் கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் சுகாதார அமைச்சு அதிகாரிகள் பாராமுகமாக இருக்கின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு ஆட்சேபனை தெரிவித்தே தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது - என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை இளைஞர் குவைத்தில் தற்கொலை

கொழும்பு, ஜூன் 29

தொழில் வாய்ப்புப் பெற்றுச் சென்ற இலங்கை இளைஞர் ஒருவர் குவைத்தில் தற்கொலை செய்து கொண்டுள்ளார். குறித்த இளைஞர் ஐந்து மாடிக் கட்டடமொன்றிலிருந்து வீழ்ந்து தனது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

களுத்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த இவர் குவைத் தில் சாரதியாக கடமையாற்றியுள்ளார். இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள் ளன என்று இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தகவல் வெளி யிட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலத்தை இலங்கைக்கு எடுத்துச் செல்வதற்கான சகல நடவடிக்கை களும் எடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப் படுகிறது.

# வடமாகாண வைத்திய சாலைகளில் ஜூலையில் வைத்தியர், தாதியர் நியமனம்

கொழும்பு, ஜூன் 29

வடக்கில் அமைந்துள்ள வைத்திய சாலைகளின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு அவற்றின் வைத்தியர் மற்றும் தாதிமார் குறைபாட்டை நீக்க வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இதன்படி வடமாகாண நிர்வாகத்தின் கீழ்வரும் வைத்தியசாலைகளில் 250 வைத்தியர்களும் 250 தாதிமாரும் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர்.

ஜூலை மாதத்தில் வைத்தியர்களுக்கான நியமனங்களும், ஓகஸ்ட்டில் தாதியருக்கான நியமனங்களும் வழங்கப்படவுள் ளன என வட மாகாண ஆளுநர் நேற்று அறிவித்துள்ளார். (சி)

# ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு; அறிக்கை இரு தினங்களில் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஜூன் 29

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு தொடர்பான அறிக்கை இன்னும் இரு தினங்களில் சமர்ப்பிக்கப்படவுள்ளன என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக தென் மாகாண சபை உறுப்பினர்களிடம் கருத்துக்களை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கை கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் இடம்பெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

மேலும், தயாரிக்கப்படவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு அறிக்கையானது பொதுமக்கள் மற்றும் பிரதேச, மாகாண சபை உறுப்பினர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்பட்டு வருகின்றது எனவும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிர்மல் வர்மா பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவைப் பாதுகாப்பு அமைச்சிலும், இராணுவத் தளபதி லெப்ரினன் ஜெனரல் ஜகத் ஜெயசூரியை இராணுவத் தலைமையகத்திலும் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

# முல்லையில் கண்ணி வெடிகளை அகற்ற புதிய இயந்திரங்கள் தருவிப்பு

கொழும்பு, ஜூன் 29

முல்லைத்தீவில் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் முகமாக கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு புதிய இயந்திரங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன எனப் பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

அந்த பிரதேசத்தில் 65 சதவீதமான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன எனவும் பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்னும் 30ஆயிரம்பேரே மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இதுவரை குறித்த மாவட்டத்தில் 22 ஆயிரம் பேர் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர் எனவும் பாதுகாப்பு பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், எதிர்வரும் 3 மாதங்களில் எஞ்சியுள்ள ஏனையோரும் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர் என்றும் பாதுகாப்பு பிரிவினர் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

# கணனி மொழியாக தமிழை வளர்த்தெடுக்க வேண்டும்!

## நடிகர் சிவக்குமார் வலியுறுத்து

தமிழைச் செம்மொழித் தகுதியுடன் நிறுத்தி விடாமல் அறிவியல் தமிழாகவும், கணினித் தமிழாகவும் வளர்த்தெடுக்க வேண்டும் - என்று நடிகர் சிவக்குமார் வலியுறுத்தினார்.

தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் நிறைவு நாளான ஞாயிற்றுக்கிழமை 'வித்தாக விளங்கும் மொழி' எனும் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கிற்குத் தலைமை வகித்து அவர் பேசியவை வருமாறு -

உலகின் மூத்த மொழிகளில் ஒன்று தமிழ்மொழி. 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் வரலாறு படைத்த இந்திய மொழிகள் சம்ஸ்கிருதமும், தமிழும்தான். செம்மொழி அந்தஸ்தை சம்ஸ்கிருதம் பெற்றிருந்தாலும், பேச்சு மொழியாக அது தனது பயணத்தைத் தொடரவில்லை. தொல்காப்பியர் காலம் என்பது 2,500 ஆண்டுகள் என்று கூறுகின்றனர்.

இக்காலத்திற்கு முன்பே வட்டெழுத்து, பிராமிய எழுத்து எனத் தொடங்கி கல்வெட்டு, பட்டயம், செப்பேடு, ஓலைச்சுவடிகள் எனத் தொடர்ந்து வந்து இன்றைக்கு கணனி, கைத்தொலைபேசி வரை பயன்பாட்டு மொழியாகத் தமிழ் நமது வாழ்வில் பயணித்துக் கொண்டிருக்கிறது. காலத்தின் மாற்றத்திற்கு ஏற்ப தமிழ் தன்னை வடிவமைத்துக் கொண்டுள்ளது. பேரறிஞர் சபையிலும், பாமரர் பேச்சிலும் தமிழ் கலந்து வீற்றிருக்கிறது. - இப்படி அவர் கூறினார்.

# படையினருக்கு தொடர்ந்து விளக்கமறியல்

கிளிநொச்சி- விசுவமடு பகுதியில் இரண்டு குடும்பப் பெண்களை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினர் என்ற சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு இரணுவத்தினருக்கும் கிளிநொச்சி நீதிமன்றத்தால் பிணை நிராகரிக்கப்பட்டுள்ளது.

விசுவமடுவ பகுதியில் சில வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற குடும்ப பெண் இருவர்களோடு பாலியல் வல்லுறவு தொடர்பான வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள நான்கு இராணுவத்தினரையும் பிணையில் விடுவிக்குமாறு அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் மன்றில் கோரினர்.

இரு தரப்பு வாதங்களையும் கருத்தில் கொண்ட கிளிநொச்சி மாவட்ட நீதிவான் குறித்த நான்கு இரணுவத்தினரையும் எதிர்வரும் 13 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## சம்பந்தனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் மக்களின் அரசியல் பிரச் சினைகள், உடனடிப் பிரச்சினைகள் தொடர்பாக தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்படத் தீர்மானித்துள்ளோம்.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம்.

இன்று தமிழ் மக்கள் மீளக்குடியேற்றத்தில் பல்வேறு சிக்கல்களை, சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். மற்றும் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இந்த ஆக்கிரமிப்பு நடவடிக் கையை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும்.

இதற்கு அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து - ஒருமித்துக் குரல் கொடுக்க வேண்டும். இவ் வாறு அவர்கள் இருவரும் சம்பந்தனிடம் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்புக் குறித்து இரா. சம்பந்தன் பதில் அளிக்கையில் -

மேற்படி விடயங்கள் முக்கிய மானவை. தமிழ்க் கட்சிகள் இவற்றுக்கு எதிராக அணி திரண்டு குரல் கொடுக்க வேண்டும். எனினும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வது குறித்து ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேசி முடிவெடுக்கப்படும் - என்றார்.

இதேவேளை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் இரா. சம்பந்தன் எம்.பியுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேச்சு நடத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி ராஜபக்ஷவுடன், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் அங்கு பயணமாகிறார். (சி)

# எதிர்காலத்தில் நிச்சயம் தமிழ்க் கவிதை வாழும்

## கவிஞர் வைரமுத்து

கோவை, ஜூன் 29

பல நூற்றாண்டுகளைக் கடந்து, என்றும் தமிழ்க் கவிதை வாழும் - என்று கவிஞர் வைரமுத்து கூறினார்.

தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் சார்பாக எதிர்காலத் தமிழ்க் கவிதை என்னும் பொழிவரங்கத்தை வைரமுத்து தலைமை தாங்கி நெறிப்படுத்தினார்.

தலைமையுரையில் அவர் பேசியவை வருமாறு -

பல்பொருள் அங்காடி என்னும் கலாசாரம் கவிதைக்கு வந்துவிட்டதோ என்று அஞ்சும் அளவுக்கு ஊடகங்களின் தாக்கம் இருக்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளாக தமிழ் எதை உள்வாங்கிக் கொண்டிருக்கிறதோ அதுதான் எதிர்காலத் தமிழ்க் கவிதையின் அடையாளம். இரண்டாயிரம் ஆண்டுகளாக எதைத் தமிழ் நிராகரித் ததோ அதுவும் எதிர்காலத் தமிழின் அடையாளம்.

இரண்டு அபாயங்களிலிருந்து மீளும் உபாயத்தைத் தெரிந்து கொண்டால் தமிழ்க் கவிதை எதிர்காலத்தில் செழிக்கும். ஒன்று, தீவிரவாதம். இதை எதிர்க்கும் உபாயத்தை, கம்பனிடமிருந்து எதிர்காலத் தமிழ்க் கவிதை உள்வாங்கிக் கொள்ளவேண்டும்.

இரண்டாவது, சுற்றுச்சூழல். இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையைக் கொண்டதுதான் நமது வாழ்வியல் முறை. இதை எதிர்காலத் தமிழ்க் கவிதை கருப்பொருளாகக் கொள்ளவேண்டும்.

எதிர்காலத்தில் நிச்சயமாகத் தமிழ்க் கவிதை வாழும். எந்த வடிவத்தில், எந்தத் தடத்தில் என்பதை காலம்தான் முடிவு செய்யும். - இப்படி வைரமுத்து தெரிவித்தார்.

# பொன்சேகாவை இராணுவப் பாதுகாப்புடன் நீதிமன்றுக்கு அழைத்துவருமாறு உத்தரவு

முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவை எதிர்காலத்தில் இராணுவப் பாதுகாப்புடன் இராணுவ வாகனம் ஒன்றில் நீதிமன்றத்திற்கு அழைத்துவர வேண்டும் என்று கொழும்புக் கோட்டை பிரதம நீதிவான் லங்கா ஜயரத்ன நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

ஹைகோப் வழக்கில் இரண்டாவது தடவையாக ஜெனரல் சரத் பொன்சேகா நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கின் மேலதிக விசாரணை கள் அடுத்த மாதம் 12ஆம் திகதி வரைக் கும் ஒத்திவைக்கப்பட்டன.

## உயிரைக்கொடுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்லறிகள் இல்லை. இவையெல்லாம் இருந்த புலிகள் இயக்கத்தை நாம் மூன்று வருடங்களில் தோற்கடித்தோம். இந்தப்பொறமை காரணமாகவே இலங்கைப் படையினரைத் தண்டிப்பதற்காக பான் கீ மூனை கைப்பொம்மையாக பாவித்து மேற்கத்தேய நாடுகள் தமது நோக்கத்தை நிறைவேற்ற முனைகின்றன.

பான்கீ மூனிடம் ஒன்றை நாம் சுட்டிக் காட்டவிரும்புகின்றோம் 'நீங்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலும் சென்று நினைத்த நோக்கத்தை சாதித்தமை உண்மைதான். ஆனால், இது ஈராக் கிடையாது. இது ஆப்கானிஸ்தான் கிடையாது. இது சூடான் கிடையாது. மாறாக இது தேசப்பற்றாளர்கள் நிறைந்த இலங்கை நாடு என்பதை நாம் பான் நீங்கள் மறந்து விடாதீர்கள்.''

எம்மைக்காப்பதற்காக 24ஆயிரம் படையினர் தமது உயிர்களை காவுகொடுத்தனர். அத்துடன் 70ஆயிரம் படையினர்; அவயவங்களை இழந்துள்ளனர் . அத்தகைய படையினருக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்கான காலம் எழுந்துள்ளது. எம்மைப் பாதுகாத்த குற்றத்திற்காக தண்டனைத் தீர்ப்பை எதிர்நோக்கும் எமது படையினரைப்பாதுகாப்பதற்காக உயிர்த்தியாகம் செய்வதற்கு முன்வருமாறு அன்பார்ந்த நாட்டு மக்களைக் கேட்டுக்கொள்கின்றேன். ஒருவர் பின் ஒருவர் உயிர் துறந்தேனும் பான் கீ மூனிற்கு காவடியெடுக்கும் மூவரைக் கொண்டகுழு இலங்கைக்கு அடியெடுத்துவைக்க அனுமதிக்க மாட்டோம் என்பதை கூறிவைக்க விரும்புகின்றேன். இந்த நாட்டில் கடைசி தேசப்பற்றாளன் இருக்கும் வரையில் பான் கீ மூனின் குழுவினர் இங்கு கால்பதிக்க இடமளிக்க போவதில்லை என எச்சரிக்கின்றேன்.- இப்படி உதய கம்மன் பில கூறினார். (ஒ)

## வரவு - செலவுத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டத்தை பிரதமர் எத்தனை மணிக்கு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பார் எனக் கேட்டபோது, வரவு-செலவுத் திட்டத்தை பிரதமர் சமர்ப்பிக்கமாட்டார். பிரதியமைச்சர் சரத் அமுனுகமவே சமர்ப்பிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது.

நிதி அமைச்சின் ஊடகப் பிரிவுடன் தொடர்புகொண்டு இது தொடர்பாகக் கேட்டபோது, அது குறித்து இன்னும் தீர்க்கமான முடிவு எடுக்கப்படவில்லை என்று நேற்றுப் பிற்பகல் தெரிவிக்கப்பட்டது.


தேவை

யாழ். நகரிலுள்ள நிறுவனத்துக்கு கணனி ரைப் செற்றிங் செய்யக் கூடியவர் தேவை. (பெண்கள்)

தொடர்பு :
0718474325, 0770366123






உங்கள் கடினமான நேரங்களில் ஒரு நண்பனைப் போல் அழையுங்கள். கணனித் திருத்தம், மற்றும் ஆலோசனைகளிற்கு 0212222674/ 0773618586

STP Your Partner in IT Solutions

வெளிவந்து விற்பனையாகிறது

அண்மையில் நடைபெறவுள்ள போட்டிப்பரீட்சைகளுக்கான வழிகாட்டி நூல்கள் 4

ஆசிரியர் P. உமாசங்கர்

I. முன்பள்ளி ஆசிரியர் வழிகாட்டி -300/-
II. வடக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் கல்விசாரா ஊழியர் வழிகாட்டி -300/-
III. சுகாதார முகாமைத்துவ உதவியாளர் வழிகாட்டி -450/-
IV. காணி நிர்வாக வெளிக்கள போதனாசிரியர் வழிகாட்டி -300/-

முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களையும் கடந்தகால வினா விடைகளையும் உள்ளடக்கிய வழிகாட்டி நூல்கள்.

பூபாலசிங்கம் புத்தகசாலை

வேம்படிச் சந்தி, யாழ்ப்பாணம். T.P.:0212226693,

பஸ் நிலையம், யாழ்ப்பாணம். 0212221637

(சி/368741)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.